பதிவு நம்பர் 2041

KUDI ARASU.

தனிப்பிரதி விலை { உள் நாடு 1 அணா / வெளி நாடு 1½ அணா }

குடி அரசு

வருஷ சந்தா முன் பணம் ... ரூ 3—0
6 மாத சந்தா „ ... ரூ 1—12
வெளிநாட்டிற்கு ... ரூ 4—0

வாரப்பதிப்பு.
ஆசிரியர்: ஈ. வெ. ராமசாமி.

வியாபாரிகள் விளம்பரம் அங் 1க்கு அ. 12
கோர்ட் விளம்பரம் அங்குலம் 1க்கு ரூ. 2
நீடித்த விளம்பரத்துக்கு தனி விகிதம்.

மாலை 3 | ஈரோடு, பிரபவஹு மாசி மீ 28உ (11—3—28) ஞாயிற்றுக்கிழமை. | மலர் 46.

இனும்! இனும்

முனையில் இரிடியம் உள்ள 14 Kt. தங்க நிப்பு போட்ட Self-filling பௌண்டன்பேனா இனும்.



எங்கள் 18 காரட் ரோல்டு கோல்டு பின்புறம் விசித்திரவேலை செய்யப்பட்ட லீவர் பாக்கெட் கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேலே சொல்லியபடி பௌண்டன் பேனா இனுமாய் அனுப்பப்படும். கடியாரம் விலை ரூ. 4-12-0. 5வருஷம் உத்திரவாதம். உடனே எழுதுங்கள்.

CANADIAN WATCH PEOPLE,
George Town, Madras.

கையில் கட்டும் ரோல்டு கோல்டு ஸ்பிரிங் செயினும், பௌண்டன் பேனாவும் இனும்.



நூதனமாக வரவழைத்த எங்களின் 22 காரட் ரோல்டு கோல்டு கை கெடியாரம், 5 வருஷம் உத்திரவாதம் புதுமாதிரி பார்வைக்கு அழகாயிருக்கும், சரியான காலத்தைக் காட்டும்.
விலை ரூ. 6—8—0. தபால் கூலி வேறு.

லண்டன் வாட்ச் அவுஸ்.,
3, பார்க் டவுன், (தா) சென்னை.

"திராவிடன்" கிடைக்குமிடம்.

"திராவிடன்" பத்திரிகைகள் மதராஸ் சென்டிரல், எழும்பூர், அரக்கோணம், காட்பாடி, ஜோலார்ப்பேட்டை, சேலம், ஈரோடு, போத்தனூர், மாயவரம், தஞ்சாவூர், மதுரை, திருநெல்வேலி, நாகபட்டணம் முதலிய ரெயில்வே ஸ்டேஷன்களிலுள்ள ஹிக்கின்பாதம் புத்தகசாலைகளில் அரை அணா விதம் கிடைக்கும்.

டேபில் டைம்பீஸ் இனும் !!!

எங்கள் 22 காரட் ரோல்ட் கோல்ட் "கோல்டன்" கைக்கெடியாரம் வாங்குகிறவர்களுக்கு மேஜையின் பேரில் வைக்கக்கூடிய ஒரு அழகான டேபில் டைம்பீஸ் இனுமாக சேர்த்து அனுப்பப்படும். இரண்டும் 5 வருஷம் உத்திரவாதம். முந்துங்கள் விலை ரூ. 7-8-0 தபால் கூலி பிரத்தியேகம்.



வி. பி. சட்டமில்லாத வெளிநாட்டு நேயர்கள் இதற்கு 8-8-0 முன் பணம் அனுப்பவேண்டும்.

தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட். ஜி. டி. மதராஸ்.

முன் விலை ரூ. 14 இப்பொழுது ரூ 7. 22 காரட் ரோல்டு கோல்டு புது மாடல் கைக்கடியாரங்கள்



மேற்கண்டபடி எந்தவேஷப்வேண்டுமானாலும் அனுப்பப்படும். வேலைப்பாடு மிகவும் உறுதி. கையில் கட்டிக்கொண்டால் தங்க ஆபரணம் போல் இருக்கும். ஒவ்வொருகடியாரத்திற்கும் ரோல்டுகோல்டு அமெரிக்கன் கைச்சங்கிலி இனுமாய்ச்சேர்த்து அனுப்பப்படும்.5வருஷம் உத்திரவாதம். ரூ. ஏழுமட்டும்.

CANADIAN WATCH PEOPLE
George Town, Madras

Photo Hand Camera



லண்டனில் புதிதாய்ச் செய்யப்பட்டது. எவரும் எளிதில் போட்டோ பிடிக்கலாம். போட்டோவின் அளவு 3¼"x2½" ஆகும், இந்த மெஷினை வைத்துக்கொண்டு மாதம் ரூ. 30 முதல் 200 வரை சம்பாதிக்கலாம். எல்லாசாமான்களுடனும் விவரங்களுடனும் குறைந்த விலை ரூ. 4—12—0.

Sole Agents ஸ்ரீதனம் அண்டு கம்பெனி,
பிரும்ம சமாஜம், ஜி. டி. மதராஸ்

நூதன ஜெர்மன் எலக்டிரிக் விளக்கு.

இதை மேஜையின் பேரிலும், சுவற்றிலும் வைக்கலாம். இராத்திரியில் படுக்கையிலிருந்தபடியே விளக்கை இதில் கண்ட கயிற்றின் (wire) உதவியால் நிறுத்தவும் செய்யலாம். புயற்காற்று அடித்தாலும் எரியும். பிரகாசம் கண்ணைப் பறித்துக்கொண்டு போகக்கூடியது. விசேஷ காலங்களில் வைத்தால் திரளான ஜனங்கள் அதிசயத்தைப் பார்க்கக் கும்பலாகக்கூடி விடுவார்கள். மிக ஜாக்கிரதையாக பாக்கிங் செய்தனுப்பப்படும். குறைந்த விலை 4—8—0. தபால் செலவு 0—8—0.



தி. பான்ஸி வாட்சு அவுஸ்,
15 A-பீட், ஜி. டி. மதராஸ்.

இனும்! இனும்!!

சாரவிவேகி சதானந்தன் சம்பாஷணை 'கிழவன் குமாரனன்' இவ்விரண்டு கதைகள் அடங்கிய புத்தகம் தங்கள் விலாசம் தெரிவித்தால் இனுமாக அனுப்புவோம்.

ஸ்ரீ சாது இரத்தினசற்குரு புத்தகசாலை,
பார்க் டவுன் போஸ்டு, சென்னை.

கணித சோதிடம்

பரகித கணிதப்படி கணிதஞ்செய்து பலன்கள் கூறப்படும். ஒரு வருஷத்திற்கு மாதவாரி பலன்கள் நுட்பமாயும் விவரமாயும் எழுதி அனுப்ப ரூபாய் இரண்டு. ஆருடம் 5 கேள்விகளுக்கு விவரமான பதில் எழுதி அனுப்ப ரூபாய் ஒன்று. விவாக விஷயம் ரூபாய் ஒன்று. விவாக விஷயத்தைப்பற்றி பெயர்கள் எழுதி அனுப்புவதைக் கொண்டு பெண்ணுக்குப் புருஷனும், புருஷனுக்குப் பெண்ணும் இன்னாரென்று வெகு சுலபமாய் நிச்சயிக்கலாம். எங்களிடம் அருமையான பூர்வீக சோதிட நூற்கள் பலவுள்ளதால் நாங்கள் எழுதி அனுப்பும் பலன்கள் பொதுப்பலன்களாயிராமல் விவரமாகவும் சாஸ்திரீகமாகவுமிருக்கும். உங்கள் ஜாதக கலையாவது கடிதம் எழுதும்நேரத்தையாவது தெரிவியுங்கள்.

தே. ஆறுமுகம் செட்டி,
முதலியார் பேட்டை, புதுச்சேரி.

REGISTERED TRADE MARK — MINSARA RASAM

மின்சாரரசம்.

சகல வியாதிகளுக்கும்
தேவாமிர்தம் போன்றது.

பத்தியமில்லை! அநுபானமில்லை!

துளிகள் கணக்கில் உபயோகித்து நிமிஷக்
கணக்கில் ஆச்சரியகரமாக
குணமடையலாம்.

சிறு குழந்தைகள் முதல் சகல வயதினரும்
உபயோகிக்கலாம்.

ஒரே முறை பரீக்ஷியுங்கள். நீங்கள் ஆச்சரியப்படுவீர்கள்.
கணக்கற்ற நற்சாக்ஷி பத்திரங்கள் பெற்றது.

புட்டி 1-க்கு ரூ. 2. தபாற் செலவு வேறு.
எல்லா ஊர்களிலும் கிடைக்கும். கேட்லாக் இனாம்.

விலாசம்:- மின்சாரரசம் கம்பெனி (லிட்.) சேலம்

S. T. ஆதியத்தன் B. A.
ஆர்டிஸ்ட்,
சென்னை:-

எனக்கு 2 வாரமாக வலி குவலியுடன் வயிற்றுப்போக்கு தொந்திரவு பண்ணிக்கொண்டிருந்தது. ஒரு தடவை மின்சாரரசம் சாப்பிட்டதில்கடும்வலியை உடனே நிறுத்தியது பின்னும் 2 நாள்தொடர்ந்து சாப்பிட்டதில் வ்யாதி இருந்தவிடம் தெரியாமல் போய்விட்டது

A. G. முத்தையா B. A.
தாசில்தார்,
கோவில்பட்டி:-

இந்த ஔஷதம் ஒவ்வொரு குடும்பத்திலும் அவசியம் இருக்க வேண்டியது. டாகடர்களுக்கு செலவிடும் பணத்தை இது மீதிசெய்துவிடும். எல்லா வியாதிகளுக்கும் மின்சாரரசம் தேவாமிர்தம் போன்றதென்னும் பெயர் இந்த மருந்துக்கே தகும்.

ஒருமணி நேரத்தில் குணம்! ஆச்சரியமானது!!

மன்மத ஸ்தம்பன குளிகை.

குணம் இல்லையென்று நிரூபிப்பவர்களுக்கு ரூ. 100 இனாமாகக் கொடுக்கப்படும்.

நேயர்களே! இந்த ஸ்தம்பனக் குளிகையானது முறையாகச் செய்யப்பட்டு பல பிரமுகர்களாலும் உபயோகிக்கப்பட்டு வருகிறது. பலர் பலபெயரிட்டு விளம்பரப்படுத்தியிருக்கும் மாத்திரையை நீங்கள் சாப்பிட்டிருக்கலாம். ஆனால் சொல்லியபடி நீங்கள் குணத்தைக் கண்டிருக்கமாட்டீர்களென்பது நிச்சயம். எங்கள் ஸ்தம்பனக்குளிகை அப்பேர்ப்பட்டதல்ல. அநுபவித்துப் பார்த்தவர்களுக்குத்தான் உண்மை விளங்கும். இந்த மாத்திரையை டைரக்ஷனில் சொல்லியிருப்பதுபோல் 10 நாள் சாப்பிட்டு வந்தால் ஆண் சிங்கத்தைப்போன்ற பலமும், ரோஜா புஷ்பம்போன்ற முக தேஜஸும், அழகும், தைரியமும் உண்டாகும். நீர்த்துப்போன இந்திரியத்தை கெட்டிப்படுத்துவதில் இதற்கு நிகர் வேறு எதுவுமில்லை. உத்தரவாதம். உடனே எழுதுங்கள். டப்பி 1-க்கு ரூ 2. உபயோகிக்கும் விதம் மருந்துடன் அனுப்பப்படும். வெளிநாடு நேயர்கள் அவசியம் முன் பணம் அனுப்பவேண்டும்.

ஸ்ரீ தனம் அண்டு கம்பெனி, தபால்பெட்டி 119, ஜி. டி. மதராஸ்.

இனாம்! **1928** இனாம்!!

தங்கள் விலாசத்தைத் தெரியப்படுத்தினால் நாங்கள் 1928ௐ காலண்டரும் ஆரோக்கிய சமாசாரமும் தபால் செலவின்றித் தங்களுக்கு அனுப்புகிறோம்.

சித்த ஔஷதசாலை கம்பெனி,
போஸ்டு மூல்லச்சேரி, மலபார்.

"அறிவு விளக்கம்"
ஓர் மாதாந்திரப் பத்திரிகை
வருட சந்தா தபாற்கூலி உள்பட **6** அணா
மாதிரிப்பிரதி இனாம்.
'அறிவுவிளக்கம்' ஆபீஸ், உடுமலைப்பேட்டை

பனி! பனி! பனி!

குளிர் காலத்திற்கு அடக்கமான கம்பளிப் போர்வைகள் சுத்தமான உரோமத்தால் நம் நாட்டில் நெசவு செய்யப்பட்டவை. 6 முழ நீளம் 3 முழ அகலமும் அழகிய பல நிறங்களில் கிடைக்கும்.

நெ. 1.	6 முழ நீளம்	3 முழ அகலம் ரூ.	15.
2.	,,	,,	12.
3.	,,	,,	10.
4. 5	,,	2½ ,,	8.
கம்பளித் தொப்பி நெ. 1		உருப்படி 1-க்கு	3-8-0
௸ 2		௸	2-8-0
,, 3		,,	2-0-0

பட்டு பீதாம்பர கம்பெனி, காசி.

சென்னையில்
குடி அரசு
கிடைக்கும்
முக்கியமான இடங்கள்

1. முனுசாமி, ஜெனரல்ஸ்டூஸ் ஏஜென்ஸி
பிராட்வே கார்னர்.
2. K. கண்ணன்—நியூஸ் ஏஜென்ஸி
கோவிந்தப்ப நாயக்கன் தெருவு,
3. குப்புசாமி பிள்ளை
வெத்திலை பாக்கு கடை,
யானை கௌனி.
4. ஷண்முக முதலி,
அரிசி வியாபாரம்,
புரசைவாக்கம்.
5. எத்திராஜுலு முதலி,
வெத்திலைபாக்கு கடை,
திருவல்லிக்கேணி.
6. ஜெகநாதமுதலி,
பஸ்" ஸ்டேண்டு
புரசைவாக்கம்.
7. 'திராவிடன்' ஆபீஸ்,
மவுண்ட் ரோடு.

நிசவுகாரர்களுக்கு.

சேலம் கோயமுத்தூர் ஜில்லாக்களில் உள்ள கிராமங்களில் நிசவு வேலை செய்யும் கை மிஷின் தறிகளுக்காக வேண்டி ஸ்பெஷலாக சீமையில் இருந்து எங்களுக்காகவே தயாரிக்கப்பட்ட (Shuttles) நாடா வந்துவிட்டது, ஸ்வல்ப ஸ்டாக் மட்டும் வந்திருப்பதால் உடனே வாங்கி ஆனந்த மடையுங்கள். மற்ற விவரங்களுக்கு (Sole Agent) விலாசத்திற்கு எழுதவும்.

அ ஆ ந அ ப ஆத்தநாரி செட்டி,
ஷாப், ஜலகண்டாபுரம்,
(சேலம் ஜில்லா).

நாவல் உலகத்தின் ஒளி,

ஸ்ரீலோலன்

ஓர் அரிய இனிய அபூர்வ
துப்பறியும் நாவல்,
விலை ரூ. 1-4-0.

விலாசம்:—
T. S. ராஜம் & சன்,
காஞ்சீபுரம்.

உண்மையான மதத்தை வெளிப்படுத்துவதே "குடி அரசின்" பிரசாரம்.

கைவல்ய சாமியார் எழுதுவது

சர்வமத சகோதர சங்கம் தஞ்சாவூரிலிருந்து 'குடி அரசின்' கொள்கைகளைக் குற்றம் சொல்லப் புறப்பட்டிருக்கிறது. 'குடி அரசின்' பிரசாரத்தைக் கண்டிப்பதும், கண்டனத்திற்குப் பதில் கூறுவதும், அப்பதிலுக்கு மறுமொழி அளிப்பதும் ஏற்பட்டால் அப்பொழுது தெளிவான யோசனையும பெருந்தகையுடைய உள்ளமும் உடையவர்கட்கும் தர்மத்தின் நேர்வழி நடப்பவர்கட்கும் மதத்தின் உண்மையும் மக்களின் உண்மை அவசியமும் விளங்கும். ஆனதால சர்வமத சகோதர சங்கத்தை 'குடி அரசு' வரவேற்று அதற்கு அமைந்த பெயர் போலவே அதன் அனுபோகமுமிருக்கவேண்டுமென்று 'குடி அரசு'ம் அதைப்பின்பற்றுகிறவர்களும் நினைப்பார்கள்.

"குடி அரசின்" பிரசாரம் தவறு? அல்லது சரியா? என்று கவனியாமலும் அதை ஆதரிப்பவர்களும் உத்தியோகப் பற்றுள்ளவர்களாகவுமிருப்பது கவனிக்கத்தக்கது என்று சங்கம் சமய அறிஞர்களுக்கு அறிவிக்கிறது. இவை சங்கம் எடுத்துக்கொண்ட காரியத்திற்கும் நியாயத்திற்கும் விரோதம். மதத்தைப் படிப்பதும் அதிலுள்ளதை அனுஷ்டிப்பதும் மற்றவர்களுக்கு போதிப்பதுமே தொழிலாக உடைய பாப்பானும் சாஸ்திரத்திற்கே அதிகாரியான சாஸ்திரிகளும் ஆசாரத்திற்கே கர்த்தாவான ஆச்சாரிகளும் அவர்கள் கூட்டமும் ஒரேயடியாய் மதங்கள் அதன் உண்மைகள், சடங்குகள், ஆசாரங்கள், தர்ம நெறிகள் முதலிய யாவையும் அறவே யொழித்து பல உத்தியோகங்களைப்பெற்று அதுவே தொழிலாக ஏற்படுத்திக்கொண்டிருக்கையில் சில உத்தியோகப் பற்றுடையவர் "குடி அரசை" ஆதரித்தால் கடவுளுக்கும் மதத்திற்கும் என்ன கெடுதல் வந்துவிடும்? "குடி அரசின்" பின் செல்லுகிறவர்களுக்கு அது மனக்கடுமைகளைப்போக்கி, உண்மையான பக்திக்குத் துணையாக விருந்து, கடவுளின் பேரைச்சொலலி மதத்தால் சனசமூகங்களைப் பாழ்படுத்தின அறிவிலாத பக்தியினால் உண்டான பாவம் தொலைய வழிகாட்டும். சதா கடவுளை வணங்கவேண்டும், மதத்தையே கைக்கொண்டு அதன்படியே ஒழுகவேண்டும், தனக்காக ஒரு சுகமும் வைத்துக்கொள்ளப்படாது, ஒரு வேளை பிச்சை எடுத்து அல்லது சிந்தின தானியத்தைப் பொருக்கி அதை சமைத்து வயிறு வளர்த்து எல்லாரும் மதநெறியின் தர்மத்தை போதிக்கவேண்டுமென்று கடவுளால் கொடுக்கப்பட்ட வேதம் பாப்பாரசாதிக்குச் சொல்லுகையில், அதை விட்டுவிட்டு எந்தத்தொழில் செய்தாலும் சண்டாளனாகிறான் என்று ஸ்மிருதிகளும் அவனை நாய், மாடு முதலான மிருகங்களைப்போன்று பார்க்கவேண்டுமென்று பாரதமும் சொல்லுகையில், கடவுளால் சொல்லப்பட்ட வேதத்திற்கு நேர் விரோதமாக எல்லாக்காரியங்களும் செய்து கொண்டு நாங்கள் வேத சாதி என்று சொல்லும் பாப்பார ஜாதி உத்தியோக ஜாதியாய் விடுகிறதே. அந்த ஜாதியை கடவுள் கோபிப்பதில்லை. மதம் கெட்டுப்போவதில்லை குறுக்கிடுவதில்லை, ஏன்? பாப்பான் கடவுளுக்கும் மதத்திற்கும் சொந்தப் பின்ளையானதினலா? உத்தியோகமே தொழிலாகக்கொண்டு எல்லாவித போக போக்கியங்களையும் அனுபவிக்கப் பிறந்த ஜாதிக்கு கடவுளும் மதமும் குறுக்கே வந்து கோபித்துக்கொள்ளுமென்பதிலுள்ள கவலையை சர்வமத சகோதர சங்கம் நீக்கி விடட்டும். சைவர்களும் பயப்பட வேண்டியதில்லை. ஆறுகாலம் அன்னப் படையலை விரும்பும் சிவன் அவர் பக்தர்களுக்கு இரண்டு வேளைக்கு வழியுண்டாக்குகிறவர்களை கோபிக்க மாட்டார்.

சைவம் முக்தியா? வைணவம் முக்தியா? சைவத்திலும் வைணவத்திலும் எது ப்ரவர்த்தி மார்க்கம்? எது நிவர்த்தி மார்க்கம்? என்பதை ஆராய்ச்சி பண்ண 'குடி அரசு' புறப்பட்டதன்று. புறச்சமயத்தவர்கள் அரசாட்சித்த காரணங்களும் அதனால் நம் கடவுள் ஓடிப்போனதற்கு காரணங்களும் சிவ கடவுளுக்கு வைணவக்கடவுள் மாடாகவிருந்து ஊழியம் செய்வதும், வைணவக்கடவுளுக்கு சிவ கடவுள் குரங்காகவிருந்து ஊழியம் செய்வதும் இதற்கு காரணங்களும் இந்த இரண்டு கடவுளும் மற்ற கடவுளுக்கு அடிமையாகயிருப்பதற்கு காரணங்களும் எப்படி உண்டாயிற்று? எதனால் உண்டாயிருக்கிறது? என்பதை ஜனசமூகம் தெரிந்து கொள்ளவே 'குடி அரசு' பாடுபடுகிறது. புத்தர் காட்டிய ஜீவகாருண்ய அன்பு சைவத்திலிருப்பது புத்தர் காலத்திற்கு முன்னா? பின்னா? அருவ உருவங்களில் தோற்றப்படும் சகல வஸ்துக்களிலும் சிவனுடைய இருப்பை உணர்ந்து அவைகளுக்கு அன்பு செலுத்துவதெனும் தத்துவம் சைவத்தில் இருக்கின்றதும், சமய சாவியங்களில் இவைகள் பிரத்தியக்ஷம் என்று சொல்லப்படுகிறதும், புஸ்தகத்திலிருக்கிறதா இல்லையா என்று தெரிந்துகொள்ளுவதல்ல 'குடி அரசின்' பிரசாரம், சிவத்தின் அன்பு. கோவில்கள், பொது கிணறுகள், குளங்கள், நதிகள், பள்ளிக்கூடங்கள் இவைகளிலெல்லாம் வெளிப்பட வேண்டுமென்பதே 'குடி அரசின்' கொள்கை. ஆரிய சமசதர கெர்ப்பக் கிருகத்தில் மட்டும் சிவத்தின் இருப்பும் அன்பும் இருக்குமென்றும் அது ஒரு கூட்டத்தாருக்கே சொந்தமென்றும் 'குடி அரசு' நினைக்காமல் எல்லா ஜனங்களிடமும் சிவத்தின் அன்பும் இருப்பும் நிறைந்திருக்கிறதென்றே 'குடி அரசு' பிரசாரம் செய்கிறது.

புத்தரை மகாவிஷ்ணு அவதாரமென்று தக்க பண்டிதர்கள் அறிவாளிகள் கூட்டத்தில் ஒத்துக்கொண்டு, படிக்காத ஜனங்களிடம் புத்தன் நாஸ்திகன் கடவுளே இல்லை என்று சொல்லுகிறான், ராக்ஷதனாக வந்திருக்கிறான் என்று சொல்லி அவர்கள் புத்தியைக் கெடுத்து அவர்களுக்கு உற்சாகமானதும், வேடிக்கையானதும், எப்பொழுதும் முட்டாள்களாகவே இருக்கத்தகுந்ததும், எந்த விதத்திலும் பார்ப்பார்களுக்கே லாபமானதுமான சடங்குகள், வேடிக்கைகள், திருநாட்கள், ஏற்படுத்திக்கொண்ட சரித்திரங்களும், அதனாலேயே நம்தேசம் வீழ்ச்சி யடைந்ததும், அறிஞர் அறிவார்கள். அது போலவே மதம் சீர் திருத்தமடையவேண்டும், பாழ்படுத்தின வைதீகம் தொலைய வேண்டும் என்று அநேகர் சொல்லுகிறார்கள். அநேகர் எங்களுக்கு ஆக்ஷேபனையில்லை என்கிறார்கள். 'குடி அரசு' சொல்லுவது சரி என்கிறார்கள். இவர்களுக்கு தெரிந்தும் தெரியாமலும் பின்னால் சிலர் இருந்துகொண்டு ஆனாலும் "குடி அரசு கடவுள் இல்லை என்கின்றது. நாஸ்திகம் பேசுகிறது, மதத்தையே அழிக்க வந்திருக்கிறது" என்னும் குற்றமும் கூடவே சுமத்துகிறார்கள்.

வைதிகர்களின் வழக்கத்திற்கும் அவர்கள் லாபத்திற்கும் நஷ்டம் வந்து விடுமே என்று அவர்கள் கூப்பாடு போடவேண்டியது சகஜமே. 'தமிழ் நாடு' பத்திரிகைக்கும் சில சைவர்களுக்கும் வந்த ஆபத்தின் மர்மந்தான் எனக்கு விளங்கவில்லை. 'குடி அரசை'ப் போன்ற கொள்கைகளைத் தொலைத்த மார்க்கங்களும் கதைகளும் எங்களுக்குத் தெரியும். அந்தக்காலத்தைப்போன்றதல்ல இந்தக்காலம். முட்டாள் தனத்தையே உடைய ராஜாக்களில்லை. சிறிதாவது ஆராய்ச்சியுடைய ஜனசமூகங்களிருக்கின்றன. 'குடி அரசு' மதத்தை அழிக்கவரவில்லை, மதத்தின் ஆபாசங்களைத் தொலைக்கவே வந்திருக்கிறது" என்று ஜன சமூகம் உணருகிறது. 'கருமேகம் நிரைத்தகையாயிருந்தாலும்புகையிலைப்பொடியுடன் கூடிய மூக்குச்சளி அப்பிக்கொண்டிருக்கும்கையாயிருந்தாலும் அரைக்கடியைச்சொரிந்து அதன் தோலால் நிரப்பப்பட்ட கையாயிருந்தாலும் இந்தக்கைகள் பாப்பாரக் கையாக இருந்தால் அந்தக் கையாலே அபிஷேகமும் பிரசாதமும் வேண்டுமென்று கேட்கும் கடவுளும், எவ்வளவு சுத்தமான கையாக விருந்தாலும் அது பார்ப்பனக் கையாயில்லா விட்டால் அந்தக் கையால் தொட்டால் தீட்டு வந்து விடுமென்று நினைக்கும் பக்தர்களும் நம் மதத்தின் பெருமையைக் கெடுத்து கீழாக்கி குறைத்து அன்னிய மதத்தை பெருக்குகிறார்கள் என்றே 'குடி அரசு' சொல்லுகிறது.

சர்வமத சங்கம் நாயக்கரின் பிரசாரத்தையும் 'குடி அரசையும்' குற்றம் சொல்லுகையில் "இன்று மனுஸ்மிருதியை மட்டும் கொளுத்தி ராமாயணத்தை கொளுத்த வேண்டுமென்று எழுதி வந்து நாளை சைவ சமய நூல்களையும் வைணவ நூல்களையும் கொளுத்தப் புறப்பட்டால் தமிழ் நாடு என்னாகும்? தமிழர்களே! தூக்கத்தை விட்டு எழுந்திருங்கள்" என்று சொல்லுகிறது. "தமிழ் நாடே! கடவுளின் வியாபகத் தன்மைகளையும் மதத்தின நிச்சயங்களையும் விட்டு விட்டு ஆபாசமான கதைகளே மதமாகக் கொண்டு ஒற்றுமையைக் கெடுத்து உங்களை அடிமையாக வைத்திருக்கும் பிரயோஜன மற்ற சடங்குகளை விட்டு விடுவதற்கு எழுந்து நின்று உங்களுக்கு முன்னால் முன்னணியில் நிற்கும் தேசங்களைப் பார்த்து ஆராய்ச்சியின் வழியே நடக்கப் புறப்படுங்கள்" என்றே 'குடி அரசு' சொல்லுகிறது. கல்வியறிவு பரவி இல்லாதிருந்ததினாலும், அவை ஒரு வரை யரைக்குள் கட்டுப் படுத்தி வைத்து விட்டதாலும், நாக்கை மூக்கை அறுத்து விடுவார்கள் என்னும் பயத்தாலும், பாப்பான் தவிர அறிவை யடைந்தவன் தலையை வெட்டிவிடுவது ஞாயந்தானென்னும் நம்பிக்கையை உண்டாக்க இதிகாசமான ராமயணத்தில் ராமரே நடந்து காட்டினார் என்னும் பிரசாரத்தாலும், மதத்தாலும் மதக்குருக்களின் போதனைக்குட்பட்ட கருணையற்ற ராஜாக்களின் கொடுமையாலும் முன் தோன்றின சீர்திருத்தக்காரர்கள் அழிந்தாலும் அவர்கள் சொன்னவை அழியவில்லை. அதை சிறிது காலத்திற்கு முன்னிருந்த அறிவாளிகளும் சொன்னார்கள். இப்பொழுதிருக்கும் அறிவாளிகளும் ஒத்துக்கொள்ளுகிறார்கள், அதை நாயக்கரும் பிரசாரம் செய்கிறார். இருபதாம் நூற்றாண்டில் தென் தேசத்தில் உண்டான அறிவின் பயனை எல்லாரும் அனுபவிக்கச் செய்த தீர புருஷன் நாயக்கரே என்பது பின் சரித்திரங்களில் எழுதப்படும் நம் மத இதிகாசங்களில் நம் கடவுளைப்பற்றியிருக்கும் கதைகளையும் அதையே சாஸ்திரமென்று வற்புறுத்தும் வழக்கங்களையும் நாங்கள் சொல்லக் கூச்சப்படுகிறோம். குடி அரசைக் குற்றம் சொல்லப்புறப்படுகிற சில சைவர்களுக்கு சமாதானமும் சொல்ல வேண்டியிருக்கிறது. துரோணாச்சாரியின் பெண்ஜாதியை சிவபெருமான் மோகித்து அதிதியாய் பிச்சைக்கு வந்து 'நிர்வாணமாக பிச்சை யிட்டால் தான் பிச்சை ஏற்றுக்கொள்வோம்' என்ற அதிதியான சிவபெருமான் சொல்ல அவர்களும் அதிதிக்கு இடவேண்டிய பிச்சையை மதித்து அப்படியே ஒத்துக்கொண்டு கூந்தலினால் அங்கங்களை மறைத்துக் கொண்டு நிர்வாணத்தோடு பிச்சை யிடவரவே அதை சிவபெருமான் கண்டு மோகித்து துரோணரின் பெண்ஜாதியைக் கட்டிப்பிடிக்கப் போ

இதன் தொடர்ச்சி 18ம் பக்கம் பார்க்க

26—2—28-ல் தஞ்சையில் நடைபெற்ற
தஞ்சை ஜில்லா
இரண்டாவது பார்ப்பனரல்லாதார் இளைஞர் மகாநாட்டில்
நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்.

(1) மக்கள் பிறப்பினால் உயர்வு தாழ்வு இல்லையென்றும், உயர்வு தாழ்வினைக் கற்பிக்கும் எல்லாப்போலி நூல்களையும் அறவே ஒழிக்க வேண்டுமென்றும் இம்மகாநாடு வாலிபர்களுக்கு ஆணையிடுகிறது.

(2) இழிவைத் தரும்படியானதும் மக்கள் சுயமரியாதைக்குக்கேடு விளையக்கக் கூடியதுமான சொற்களை அரசாங்க நிலையங்களிலும் ஏனைய விடங்களிலும் வழங்கா வண்ணம் அரசியலாரையும் பொதுமக்களையும் இம்மகாநாடு மன்றாடிக் கேட்டுக்கொள்கின்றது.

சென்ற சட்டசபைக் கூட்டத்தில் முதன் மந்திரியார் இவ்வகைச் சொற்களைப் பிரயோகித்ததை இம்மகாநாடு பலமாகக் கண்டிக்கிறது.

(3) இறைவனது திருக்கோவில்களில் இறைவனால் படைக்கப்பட்ட மக்கள் எல்லோரும் ஒரு சிறிதும் வேறுபாடின்றி இறைவன் திருமுன்பு செல்லவும் தொழவும் உரிமையுண்டென்பதை மீண்டும் வற்புறுத்தி அதற்கான வழிகளில் பேரூக்கத்துடன் உழைக்கவேண்டிய ஏற்பாடுகளை செய்யவேண்டியது நம்மக்கள் கடமை யென்பதை இம்மகாநாடு அறிவுறுத்துகின்றது.

(4) 'இன்றியமையாச்சிறப்பினவாயினும் குன்றவருபவிடல்' என்னும் பொய்யா மொழிக்கு இலக்காக நம்மக்கள் சுயமரியாதைக்குக் குறைவு வருங்காலத்துத் தற்காப்புக்காக மனவலிமையோடு உடல் வலிமையும் வேண்டியிருத்தலால் சிலம்ப விளையாட்டு முதலிய ஆண்மை வளர்க்கும் உடற் பயிற்சிகளை நம் இளைஞர்கள் கையாடல் வேண்டுமென இம்மகாநாடு ஆணையிடுகிறது.

(5) கதர் முதலிய நம் நாட்டுக் கைத்தொழிற் பண்டங்களைப் போற்றி ஆதரிக்குமாறு இம்மகாநாடு நம்மக்களுக்கு ஆணையிடுகின்றது.

(6) நாடு ஒற்றுமைப்படவும் சமூக வாழ்க்கை மேம்படவும் கலப்பு மணங்களையும் விதவை மணங்களையும் போற்றிப் பாலிய விவாகத்தைத் தவிர்ப்பதற்காகச் சட்டசபை முன்வரும் மசோதாக்களை ஆதரிப்பதுடன் அவ்வகை இயக்கங்களை எதிர்த்துப் பிரசாரஞ் செய்யும் சங்கராச்சாரியார் முதலிய பார்ப்பனர்களையும் பிறரையும் கண்டிக்கிறது.

(7) நம் தமிழ் நாட்டிற்குரிய சித்த வைத்தியத்தைத் தமிழ் நாட்டிலுள்ள ஸ்தாபனத்தலைவர்கள் ஆதரிக்கவேண்டுமென இம்மகாநாடு கேட்டுக்கொள்ளுகிறது.

(8) மணச்சடங்கு முதலிய எல்லா விதமான சடங்குகளிலும் நம்மக்களின் சுயமரியாதைக்கு இழுக்கு நேரிடா வண்ணம் பார்ப்பனப் புரோகிதர்களை அறவே விலக்கி விடும்படி இம்மகாநாடு ஆணையிடுகிறது.

(9) பிழைப்புக்குத் தொழிலின்றி வாடி வருந்தும் எண்ணிறந்த நம் இளைஞர்க்கு வேலை தேடிக் கொடுப்பதற்காக ஒவ்வொரு ஜில்லாவிலும் அதிகாரமும் செல்வமும் படைத்தவர்கள் சேர்ந்து கழகங்கள் ஏற்படுத்தியும் நமது சமூகத்தை வாழ்விக்க வேண்டுமென இம்மகாநாடு மன்றாடிக் கேட்டுக்கொள்கின்றது.

(10) நம்மக்களின் பலவகை முன்னேற்றத்திற்கும் கல்வியின் றியமையாததாகையால் இலவச கட்டாயக்கல்வி புகட்ட விரைவில் தக்கஏற்பாடுகள் செய்யவேண்டுமென இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

(11) பார்ப்பனரல்லாத இளைஞர் எல்லோரும் உயர்ந்த கல்வி பயில வேண்டியது பார்ப்பனரல்லாதாரின் முன்னேற்றத்திற்கு முற்றும் இன்றியமையாததாகையால் தஞ்சை ஜில்லா போர்டின் தலைவரையும் உறுப்பினர்களையும் தஞ்சை ஜில்லாவில் விரைவில் உயர்தரக்கல்லூரி யொன்று ஏற்படுத்தும்படிக்கும் தக்க பார்ப்பனரல்லாத இளைஞர்க்கு உதவிச் சம்பளம் கொடுக்கும்படியாகவும் வேண்டிக்கொள்கிறது.

(12) பார்ப்பனரல்லாத இளைஞரியக்கத்தின் உயர்ந்த நோக்கங்கள் விரைவில் கைகூடுவதற்குப் போதித்தலும் பேசுந்திறமையும் மிக்க இன்றியமையாததாகையால் இவ்விரண்டு மேன்மையான கலைகளினிடத்தில் பார்ப்பனரல்லாத இளைஞர்க்கு உண்மையான அன்பைத் தோற்றுவித்து வளர்க்கவும் அவர்கள் சிறந்த பயனுள்ள ஆசிரியர்களாக பார்ப்பனரல்லாத இளைஞரை ஊக்கத்துடன் உழைக்க இம்மகாநாடு வேண்டுகின்றது

13) பார்ப்பனரல்லாத இளைஞர் சங்கத்தின் கிளைகள் ஒவ்வொரு ஜில்லாவிலும், தாலூகாவிலும், கிராமத்திலும் ஏற்படுத்தி நமது இளைஞரியக்கத்தின் நோக்கங்களைப் பரவச்செய்ய வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

(14) பார்ப்பனரல்லாத இளைஞர்கள் பயிலவும் பிறநாடுகளிலுள்ள சிறந்த கல்லூரிகளிற் பயிற்சி பெறவும் உதவி செய்ய இம்மாகாணத்துக்கு ஒவ்வொரு ஜில்லாவுக்கும் நிதியங்கள் ஏற்படுத்த வேண்டுமென்று இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

(15) தமிழ் நாட்டின் பெரியாரும் 'திராவிடன்' ஆசிரியருமான திரு கண்ணப்பர் அவர்கள் தொடுத்துள்ள வழக்குக்காகத் தக்க பொருளுதவி செய்யுமாறு இம்மகாநாடு தீர்மானிப்பதுடன் மேற்படி வழக்கில் ஆஜராகி ஊதியம் பெறாமல் வாதிக்கிற வழக்கறிஞர்களாகிய திருவாளர்கள் பத்பநாப முதலியார் கிருஷ்ண ரெட்டியார் எ. ராமசாமி முதலியார் ஆகியவர்களுக்கு நன்றி செலுத்துகின்றது. தலைவர்களால் பிரேரேபிக்கப்பட்டு ஏகமனதாய் நிறைவேறியது.

(16) தினசரி பத்திரிகைகள் நமது இயக்கத்தை எதிர்த்து எழுதி வருவதால் அடுத்த இரண்டு மாதங்கட் குள்ளாகிலும் "திராவிடன்" ஆசிரியர் பதவியை ஏற்றுக்கொள்ள வேண்டுமென வைக்கம் வீரர் ஈ. வெ. ராமசாமி நாயக்கர் அவர்களை இம்மகாநாடு கேட்டுக்கொள்கிறது.

(17) 16-9-21ல் செ. 613 அரசாங்க உத்திரவிலும் 15-8.22 செ. 658 அரசாங்க உத்திரவிலும் குறிப்பிட்டுள்ள பிரகாரம் பிராமணரல்லாத சமூகத்திலுள்ள எல்லா வகுப்புக்களுக்கும் தாழ்த்தப்பட்ட சமூகங்களுக்கும் மேற்கண்ட உத்திரவுகளில் கூறப்படும் வீதாசாரம் வரும் வரையில் உத்தியோகங்களும் உயர்வுகளும் கொடுக்கும்படி தஞ்சை ஜில்லாவிலுள்ள உத்தியோகசாலைகளின் தலைவர்களுக்கு அறிவிக்க வேண்டுமென்று இம்மகாநாடு அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளுகின்றது.

(18) தஞ்சை ஜில்லாவிலுள்ள நீதிஸ்தலங்களில் பிராமண சமூகத்தார் அதிகமான உத்தியோகங்கள் அடைந்திருப்பதாலும் இந்த ஜில்லாவிலுள்ள சப் ஜட்ஜுகள், டிஸ்டிரிக்ட் முன்சிப்கள் முதலியோர் பெரும்பாலும் பிராமணர்களாயிருப்பதாலும் 16-9-21ல் செ. 613 அரசாங்க உத்திரவிலும் 15-8-22ல் செ. 658 அரசாங்க உத்திரவிலும் கண்டுள்ளபடி உயர்தரகிரேடுக்கு அதாவது ரூ. 60 முதல் 80ம் அதற்கு மேலும் சம்பளமுள்ள உத்தியோகங்களுக்கு நியமனம் செய்யும் பொழுது அந்த உத்திரவுகளில் கூறப்பட்ட பிரகாரம் வீதாசாரம் வரும் வரையில் மேற்கண்ட கொள்கையைக் கண்டிப்பாக அனுஷ்டிக்க வேண்டுமென திட்டம் செய்யுமாறு மேல் தஞ்சை கீழ் தஞ்சை ஜில்லா ஜட்ஜுகளை இம்மகாநாடு வேண்டிக்கொள்கிறது.

(19) ஆதிதிராவிட இளைஞருக்காக ஓர் சிறு விடுதி ஏற்படுத்தி நடத்தி வரும் தஞ்சை ஜில்லா போர்டுக்கு இம்மகாநாடு நன்றி செலுத்துவதுடன் இன்னும் ஆதிதிராவிடர்களின மேம்பாட்டிற்காக வசதிகள் செய்து கொடுக்குமாறு அரசாங்கத்தாரைக் கேட்டுக்கொள்ளுகிறது.

(20) அகிலபாரத சர்க்கா சங்கம் என்னும் கதர் இலாகா பார்ப்பனமயமாக விளங்குவதாலும், பெயருக்கு ஒருசிலரை பார்ப்பனரல்லாதாராக நியமித்துக்கொண்டு ஆதிக்கமும் அநீதியும் செய்வதாலும் அது குறித்து சீர்திருத்த வேண்டிய பொறுப்பு தமக்கு ஏற்பட்டிருப்பதாக திரு மிகு நாயக்கரவர்கள் சொல்லியும் எழுதியும் வந்திருப்பது முற்றும் உண்மை என்பதற்கு ஏற்ற ஆதாரங்கள் பத்திரிகை வாயிலாக விளக்கமாக தெரியவருவதாலும், பார்ப்பனரல்லாத பெருங்குடி மக்களிடத்தில் பெருவாரியாக வசூலிக்கப்பெற்ற பொருளைக்கொண்டு நடத்தப்படும் இச்சங்கத்தை சத்தியாக்கிரகத்தின் மூலமோ போர்தொடங்குவதன் மூலமோ சீர்திருத்த வேண்டுமென்றும், இத்தகைய பெரிய தொரு புனித இயக்கத்திற்கு திரு மிகு நாயக்கரவர்கள் தலைமை வகித்து நடத்த வேண்டுமென்றும் இவ்வேலையைச் செய்து முடிக்க ஒரு பஞ்சாயத்து தேர்ந்தெடுப்பதென்றும் இம்மகாநாடு தீர்மானிக்கிறது.

லாகூர் விதவா விவாக சகாய சபை அறிக்கை.

இச்சபையின் எல்லாக்கிளை ஸ்தாபனங்களிலுமிருந்தும் வந்த அறிக்கையின்படி இந்தியா முழுவதிலும் இச்சபையானது 1927-ம் வருஷத்தில் 4,206 விதவா விவாகங்கள் நடத்தி வைத்திருக்கின்றது, விபரம் வருமாறு:—

1 ஜாதி வாரியாக, பிராமணர்களில் 739, க்ஷத்திரியர்களில் 729, கைஸ்தாஸ்களில் 189, ராஜபுத்திரர்களில் 364, வைசியர்களில் 632, சீக்கியர்களில் 402, இதர ஜாதியார்களில் 894. மொத்தம் 4206.

2 மாகாண வாரியாய், பஞ்சாப் அண்டை மேற்கு எல்லைப்புற மாகாணங்களில் 1731, டில்லியில் 77, சிந்துமாகாணத்தில் 3; ஐக்கிய மாகாணங்களில் 1082, வங்காளத்தில் 807. பீகார், ஒரிசா மாகாணங்களில் 82, சென்னைமாகாணத்தில் 48, மத்திய மாகாணத்தில் 107, அஸ்ஸாம் மாகாணத்தில் 58, பம்பாய் மாகாணத்தில் 18, ராஜபுதனத்தில் 165, ஐதராபாத்திலும் தக்கணத்திலும் 21, ஆக மொத்தம் 4206.

மதறாஸ் கிளைக் காரியதரிசி.

இதிகாசங்கள்

இராமாயணம்—பாலகாண்டம்

5-ஆம் வியாசத் தொடர்ச்சி.

திரு சந்திரசேகரப்பாவலர் எழுதுவது.

தாடகை என்ற பெயருடைய ஒரு உத்தமி தமிழ் நாட்டில் வாழ்ந்து வந்ததாகக் கூறப்படுகின்றனள்: அவ்வம்மை மிகவும் அன்பு பூண்டு கடவுளை வழிபட்டு வந்தனள். அவ்விடம் இப்போது திருப்பனந்தாள் என்று கூறப்பெறுகிறது. ஒரு நாள் இவ்வம்மை சுவாமிக்குச் சாத்துவதற்காகப் பூமாலையை இரண்டுகைகளிலும் தாங்கிப்போடப் போகும் போது உடை சற்று நெகிழ மானங் காத்தற்காக ஆடையை இரண்டு கைகளினாலேயும் இடுக்கினள். அப்போது பெருமான் தலைகுனிந்து அம்மையின் கையிலிருந்த மாலை தமது கழுத்தில் விழும்படி சாய்ந்தனர் என்றால் இவ்வம்மையின் பெருமைதானென்னே! இத்தாடகைப் பிராட்டியாரையே இழிகுணமுடையவராகக் காட்டினர் வால்மீகி முனிவர். ஆரியர் இழிசெயல்தானென்னே!

ஒரு கிழப்பெண்ணைக் கொல்லுமாறு ஏவின ஆரிய முனிவன் விசுவாமித்திரனின் பெருந்தன்மைதா னென்னே? ஆரியர் தாய்க்கொலை சால்புடைத் தென்பர் போலும்? நாய் வாலைக் களவாடித்தின்று உலகமெல்லாம் இகழப்பட்டவனன்றோ இக்கோசிகன்? நிற்க மகாபலிச் சக்கிரவர்த்தி வரலாற்றை ஆராய்வோம்.

மகாபலிச் சக்கிரவர்த்தி மிகவும் உத்தமன். இந்திரன் முதலிய தேவர்களையெல்லாம் வென்று மூவுலகங்களையும் ஆண்டு வந்தான். யார் யார் எதை எதைக் கேட்டபோதிலும் இல்லையென்று சொல்லாமல் கொடுத்து வரும் சிறந்த அறத்தைப் புரிந்து வந்தான். அவனுடைய பெருமையால் அழுக்காற்றற தேவர்கள் பலியின் தங்கையைக் கொன்ற பெண்கொலைப்பாவியாகிய இந்திரனோடு திருமாலையடைந்து பின் வருமாறு கூறினதாக வால்மீகி முனிவர் கூறுகிறார். "ஓ திருமாலே! விரோசனனுடைய பிள்ளையான பலிச்சக்கிரவர்த்தி ஓர் யாகம் செய்கிறான். அதில் தன்னிடம் வந்து யாசிக்கிறவர்களுக்கெல்லாம் அவரவர்கள் கேட்டது கேட்டபடி தானங்கொடுக்கிறான். ஆதலின் அவனைக் கொல்லவேண்டும்.'' (பாலகாண்டம் இருபத்தொன்பதாவது சருக்கம்) அவ்வாறே திருமால் வாமனனாகி அவனிடம் மூன்றடி மண் இரந்து அவனைக்கொல்கின்றனர். இவ்விழிந்த செயலை உண்மையில் இழிந்ததெனக்கண்ட வால்மீகி முனிவர் "திருமால் மானத்தை விட்டு மூவடி இரந்தனர்" என்கின்றனர். மகாபலி செய்த குற்றமாவது யாசிப்பவர்கள் எதை எதைக் கேட்டாலும் இல்லையென்னாமல் கொடுத்த வள்ளற்றன்மையே. இதற்காக அவன் திருமாலால் கொல்லப்பட்டன னெனில் ஆரியர் தமது தெய்வமாகிய திருமாலிடம் எவ்வளவு பெருந்தன்மையை ஏற்றுகின்றனர் என்பது புலனாம். அவர்களின் தெய்வத்தைப்பற்றிய அறிவுதானென்னே!

கம்பரோ இம்மகாபலி வரலாற்றை இன்னும் கொஞ்சம் விரிவாகக்கூறுகின்றார் அவர் உண்மையான அன்பனாகிய மகாபலியின் குணத்தைக்கண்டு மிகவும் வியப்புடையவராகி இவ்விடத்து மிகவும் பாராட்டத்தகுந்த பாடல்களைப் பாடியிருக்கிறார் பின் வருவது கம்பர் வரலாறு. திருமால் வாமனனாகி மகாபலியிடம் அடைந்த போது அவனுடைய குருவாகிய சுக்கிராசாரியார் "இவன் வஞ்சத்திருமால், ஆதலின் மூன்றடி மண் தந்து ஏமாறாதே. உன் உயிர் போய் விடும்'' என்று தடுத்தனர், அதனைக்கேட்டு மகாபலி,

"வெள்ளியை யாதல் விளம்பினை மேலோர்
வள்ளிய ராக வழங்குவதல்லால்
எள்ளுவ வென்சில இன்னுயி ரேனும்
கொள்ளுதல் தீது கொடுப்பது நன்றால்
மாய்ந்தவர் மாய்ந்தவ ரல்லர்கண் மாயா
தேந்திய கைகொ டிரந்தவ ரெந்தாய்
வீய்ந்தவ ரென்பவர் வீய்ந்தவு மீயும்
ஈய்ந்தவ ரல்ல திருந்தவர் யாரே
எடுத்தொருவருக்கொருவ ரீவதனின் முன்னே
தடுப்பது நினக்கிதழகோ தகவில் வெள்ளி
கொடுப்பது விலக்குகொடி யோயுனது சுற்றம்
உடுப்பதுவு முண்பதுவு மின்றி விடுகின்றாய்"

எனக் கூறிச்சினந்து மூவடி மண் தருகின்றான். வஞ்சகத் தன்மையரான திருமால் அவ்வுத்தமோத்தமனைக் கொன்றார். இவர் முன் சுக்கிரனுடைய தாயையும் கொன்று பெண்பழி பூண்டார். பெண்கொலை புரிந்தொழுகும் பொறாமையனான இந்திரனுக்காகப் பெண்கொலை புரிந்தொழுகும் வஞ்சகரான திருமால் மகாபலியைக் கொன்றது வியப்பாகாது. என்னே ஆரியர் தம் தெய்வங்களுக்கேற்றும் இழிகுணம்! பொறாமை, கொலை, வஞ்சகம் இவைகளை அவர்கள் தீக்குணமென்ன உணர்ந்திலர்போலும்! நிற்க இனிமேற்செல்லுதும்

மிதிலையை நோக்கிச் சென்ற கோசிக முனிவனும் அரசகுமாரரும் சோணாநதிக்கரையை யடைந்தனர். இராமன் அந்தத் தேசம் யாருடையதெனக் கேட்டனன். முனிவன் கூறுவன். "நான்முகன் மகன் குசன் வைதர்பி என்ற தன் மனைவியிடம் குசாம்பன், குசநாபன், ஆதூர்த்தரஜஸ், வசு என்னும் நான்கு பிள்ளைகளைப் பெற்றான். இவர்களில் வசு என்பவனுடையது இத்தேசம். வசுவின் அண்ணனாகிய குசநாபன் நூறு பெண்மணிகளைப் பெற்றான். பேரழகு பெற்ற அப்பெண்களை ஓர் நாள் வாயுபகவான கண்டு மோகித்து நீவகள் என்னைக் கலியாணம் செய்து கொள்ளுங்கள். நீங்கள் மானிடரை விரும்பாது என்னை விரும்பினால் உங்களுக்கு யௌவனமும் ஆயுளும் நீடித்து நிற்கும் என்றனன். அப்பெண்கள் அச்சொல்லைக்கேட்டுச் சிரித்து 'நீர் தேவரிற் சிறந்தவர். நீர் ஏன் எங்களை அவமானப் படுத்துகிறீர். உம்மை அதிகாரத்திலிருந்து நீக்குவிக்க யாங்கள் வல்லவர்கள். ஆனால் எங்களுடைய தவத்தைக்காக்க விரும்பி உம்மை அவ்வாறு செய்யாதிருக்கின்றோம். புத்தி கெட்டவரே! எங்கள் தகப்பனார் உமக்கு மிருத்யுவாக வேண்டும். சத்தி வாதியாயுள்ள அவரை அவமதியாதேயும். எங்கள் தந்தை எங்களை யாருக்குக் கொடுக்கிறாரோ அவரே எங்கள் கணவராவார்' என்று கூறினர். அது கேட்ட வாயு பகவான் கோபங்கொண்டு அவர்கள் உடலெங்கும் புகுந்து முறித்து முடமாக்கி விட்டான். கண்ணுங் கண்ணீருமாக வந்த அப்பெண்களிடத்தில் நடந்ததை உணர்ந்த குசநாபன் அயோக்கியத்தனமாக நடந்த காற்றவராயனின் செயலால் சினமடையாது 'பெண்களே! உங்கள் பொறுமையைப் பாராட்டுகின்றேன், எல்லோரும் பெருந்தன்மையாக நடந்து எனது குலத்தைப் பெருமைப்படுத்தினீர்கள்' எனப் பொறுமையோடு புகன்றான். சோமதை என்ற கந்தருவப் பெண் சூலி முனிவைய யடைந்து தன்னைக்கலந்து ஓர் பிள்ளையைத் தனக்குத் தரவேண்டப் பிறந்த பிரமதத்தன் என்பவனை அந்த நூறு பெண்களும் மணந்தனர். அவன் அவர்களைத் தொட்டவுடன் அவர்கள் முடம் நீங்கிற்று. இத்திருமணத்தின் பின் குசநாபருக்குக் காதி என்ற மகன் பிறந்தனன். அந்தக்காதியின் மக்களே நானும் கௌசிகி என்ற பெண்ணும். கௌசிகி நதியாயினள். அக்கௌசிகிக்கரையிலேயே நான் வாழ்வேன். இந்தயாகம் செய்யவே சித்தாச்சிரமம் வந்தேன்' என்று கூறினன். விடியற்காலமான போது முனிவன் 'இராமா! எழுந்திரு விடியற்காலமாய் விட்டது' என்று எழுப்பினன். யாவரும் எழுந்து நண்பகலில் சங்கைக்கரையை யடைந்தனர்.

மேலே கண்ட வரலாற்றில் வாயுபகவான் செய்த அக்கிரமத்தைப் பாருங்கள். இவனை ஒரு தேவனென்று எவ்வாறு கூறுவது? யாதொரு பாவமுமறியாத கன்னிகைகளைக் கற்பழிக்கத் துணிந்து முயல்கின்றனன். அப்பெண்கள் உத்தமிகளாதலால் அவனுடைய கூடா ஒழுக்கத்திற்கு இசைந்திலர். அதற்காக அவன் அவர்களுடைய உடலிற் புகுந்து ஊனமுண்டாக்கினனென்றால் அவ்வாயுபகவானின் அற்ப குணமும் மிகவும் கேவலமான ஒழுக்கமும் இருந்தவாறென்னே! இத்தகைய இழிகுணர்களையே ஆரியர்கள் தங்கள் தெய்வங்களாகக் கொண்டுளர். திருமால் பெண் கொலை துணிந்து புரிகின்றனன். திருமகளைப் பகல் வேலையிலே புணர்கின்றனன். புணர்ச்சி வேளையில் யாராவது வந்தால் இலச்சையின்றி விலகுதலுமில்லாமற் பேசுகின்றனன். ஒருவன் மாள அவனுடலிற் புகுந்து அவன் மனைவியைக் கூடிக் கூடாவொழுக்கம் புரிகின்றனன். அவள் உண்மை தெரிந்து தீயிற்குதித்தால் அச்சாம்பலிற் கிடந்து அறிவிலார் போற் புரண்டு புலம்புகின்றனன். இந்திரனோ பெண்கொலை புரிய அஞ்சுகின்றிலன். அவனுடைய கூடாவொழுக்கமும் கொலைத்தொழிலும் பின்னர் வருமிடங்களில் விளங்கும். வாயுதேவனோ கூடாவொழுக்கத்தில் முயன்று தோற்றுத் தீத்தொழில் புரிகின்றனன். என்னே இவ்வாரியர் தம் தெய்வங்களின் வெறுக்கத்தகுந்த செயல்கள்!

இவ்வரலாற்றைக் கம்பர் இவ்விடத்திற் கூறுகின்றிலர். முனிவன் வேள்வி செய்யத் தொடங்குமுன்னரே கூறுகின்றார். அங்கும் மேலை வால்மீகி பாலகாண்டத்தில் 32, 33, 34 ஆம் சருக்கங்களில் 75 சுலோகங்களில் விவரமாகக்கூறிய வரலாற்றை வேள்விப் படலத்தில் ஒரு பகுதியாகிய பத்துப்பாடல்களில் அவர் சுருக்கமாகக் கூறுகிறார். அதிலும் வாயு செய்த கூடாவொழுக்க வரலாற்றை முப்பத்திரண்டு முப்பத்து மூன்றாவது சருக்கங்களிலே ஐம்பத்திரண்டு சுலோகங்களில் விவரமாக வால்மீகி கூறுகின்றார். அதனை கம்பர் நான்கு பாடல்களிற் சுருக்கிக் கூறுகிறார். தமிழ் மகனுதலின் இவ்வெறுக்கத்தகுந்த வரலாற்றை அவர் சுருங்க உரைத்தனர் போலும். ஆனால் அவர் இவ்வரலாற்றைக் கூற வேண்டிய இடத்தை விடுத்து வேறோரிடத்திற் கூறினர்.

நூறு பெண்கள் ஒருவனை மணந்தனரெனத் தெரியவருவதால் ஒருவன் பலரை மணஞ்செய்வது ஆரியர் வழக்குப் போலும். பாரதத்தில் திரௌபதை தருமர் முதலிய ஐவரை மணந்தனரெனத் தெரியவருவதால் ஆரியப்பெண்ணொருத்தி பல ஆடவரை மணந்து வந்த வழக்கமும் புலனாகிறது. இதனால் ஒருவன் பல பெண்களையும் ஒருத்தி பல ஆடவரையும் மணத்தல் ஆரியர் வழக்கமென்பது அங்கையின் நெல்லிக்கனிபோல விளங்குகிறது.

கோசிக முனிவன் விடிந்தவுடன் இராமனையும் அவன் தம்பியையும் தட்டி எழுப்புகிறான். இதுபோலவே அவன் எழுப்பும் வரை அப்பிள்ளைகள் தூங்கிய செய்தி முன்னோரிடத்திலும் கேட்கப்பெற்றது. இதனால் அப்பிள்ளைகள் அரசகுமாரரானதால் அதிகாலையில எழுந்திருக்கும் வழக்கத்தைக்கொண்டிலலாதவராய்ப் பிறர் எழுப்ப விட்டே எழுந்திருக்கும் வழக்கமுடையவர்போலும், மேலும் காடு மேடுகளில் அலைந்த அலுப்பும் அவர்களைப்பற்றியிருக்குமல்லவா? நிற்க சங்கை கரையை யடைந்த பின் நிகழ்ந்த நிகழ்ச்சியை இனிக் காண்போம்.

'சுதேச மித்திரன்' நிருபரின் ஈனத்தன்மை.

ஸ்ரீமான் நாயக்கர் இவ்விடத்தில் சுயமரியாதைப் பிரசாரம் செய்ததில் கூட்டத்தில் மூலைக்கு மூலை கேள்விகள் கேட்டதாகவும் நாயக்கர் திணறியதாகவும், அடிதடி இல்லாமல் போனதாகவும், மூன்று நாள் தங்குவதாக வந்தவர் ஒரே நாளில் போய்விட்டதாகவும் எழுதி இருக்கிறார். இது முழுவதும் பொய். இதுஎழுதிய நிருபர் ஒன்று பரிசுத்த அயோக்கியனாகவே இருக்க வேண்டும்; அல்லது மித்திரனின் நிருபர்கள் பெரும்பாலும் இவ்வித யோக்யதையுடையவர்களாகவே தெரிந்தெடுக்கப்பட்டிருக்க வேண்டும் என்று சொல்ல மிகவும் வருந்துகிறோம்.

உண்மையில் நடந்ததின் சுருக்கமென்னவென்றால், நாயக்கர் சுமார் மூன்று மணி நேரம் பேசினார். அவர் பேசும்போது யாரும் ஒரு வார்த்தையாவது மத்தியில் பேசவில்லை. அவர் பேசி உட்கார்ந்ததும் ஒரு கனவான் தான் பேசவேண்டுமென்று கேட்டார். சம்மதம் கொடுக்குமுன் அக்கிராசனர் அவரைச்சில கேள்விகள் கேட்டார். நாயக்கரவர்கள் எழுந்து சம்மதம் கொடுக்கும்படி அக்கிராசனரைக் கேட்டுக்கொண்டார், பிறகு அந்த கனவான் பேசினார்.

கடைசியாக நாயக்கர் அவருக்குத் தக்க பதில் சொல்லிவிட்டு மறுபடியும் அவராவது மற்றும் யாராவது ஏதாவது பேசவேண்டுமானால் அனுமதி கொடுக்கும்படிக்கும் அதற்கும் சமாதானம் சொல்லுவதாகவும் நாயக்கர் சொன்னார். அக்கிராசனர் அந்தப்படியே இனியும் ஏதாவது பேசவேண்டுமா என்று உபந்நியாசகர்களைக் கேட்டதோடு மற்றும் யாராவது பேசுகின்றீர்களா என்று கேட்டார். வேறு யாரும் பேசவாராததாலும் முன் பேசியவர்களும் மேல் கொண்டு பேச இஷ்டப்படாததாலும் நாயக்கர் பேச்சுடன் கூட்டத்தை முடிவுக்குக் கொண்டு வருவதாகச்சொல்லி வேறு விஷயத்திற்குப் போய் விட்டார். அப்படியிருக்க திரு. நாயக்கர் திணறினதும் ஓடினதும் எங்கே? என்று கேட்கிறேன். மித்திரனோ அல்லது அவனது நிருபரோ மானமுள்ள கூட்டத்தாராக இருந்தால் நடந்ததை வரிசைக்கிரமமாக நாயக்கர் பேசினதையும் மற்றவர்கள் பேசினதையும் எழுதுவதோடு மூன்று நாளைக்கு இருப்பதாய்ச் சொல்லிவிட்டு ஒரே நாளில் ஓடிப்போய்விட்டார் என்பதற்கு உள்ள ஆதாரத்தையும் தயவு செய்து வெளியிட வேண்டுமாய்க் கேட்டுக் கொள்ளுகிறேன். அப்படிக்கு வெளியிடாவிட்டால் பெண்கள் யாருடன் புணர்ந்தாலும் எவ்வித விபசாரம் செய்தாலும் வீட்டுக்கு தூரமாகி விட்டால் அந்த தோஷம் அதோடு தீர்ந்துவிடும் என்று எழுதியிருக்கின்ற பாராசர ஸ்மிருதியை வாழ்வுக்கு ஆதாரமாய்க் கொண்ட கூட்டத்தார்கள் இதுவும் எழுதுவார்கள் இன்னமும் அதிகமாய் எழுதுவார்கள் என்றும் இதக் கூட்டத்தாருக்குச் சுயமரியாதையும் யோக்யதையும் இருக்க நியாயமில்லையென்றும் நினைத்துக்கொள்ளுவ

சிதம்பரம்.

'தமிழ்நாடு' பத்திரிகை நிருபரின் யோக்கியதை

டாக்டர் வரதராஜுலு நாயுடு அய்யங்கார் ஸ்ரீ சத்தியமூர்த்திக்கு சிஷ்யப்பிள்ளையாகத் தன்னை பகிரங்கப்படுத்திக்கொண்ட பிறகு பைத்தியக்கார ஆஸ்பத்திரிக்கு போகவேண்டிய நிலைமைக்கு அவர் வந்துவிட்டதோடு வயிற்றுப் பிழைப்புக்காக எதுவும் செய்யத் துணிந்துவிட்டார். கத்தமான அயோக்கியர்களாகவே தமது பத்திரிகைக்கு நிருபர்களை வைத்துக்கொண்டு பார்ப்பனர்களைத் திருப்தி செய்ய அவ்வயோக்கியர்களை உபயோகித்து 'பார்ப்பனப் பிரசாரம்' செய்து வருகிறார். ஸ்ரீமான் நாயக்கர் இங்கு வந்த சமயம் செய்த பிரசங்கத்தில் சொன்ன விஷயங்களையும், நடந்த விஷயங்களையும், சரிவர பிரசுரிக்காமலும், கொஞ்சம் பிரசுரித்தாலும் யோக்கியமாய் பிரசுரிக்காமலும் மானமில்லாத முறையில் திருட்டுத்தனமாய் பிரசுரித்திருப்பதானது ஒருவன் தன் வயிற்றுப் பிழைப்புக்காக எதுவும் செய்து பிழைக்கலாம் என்கின்ற கொள்கையைத் தான் கொண்ட தல்லாமல் அம்மாதிரி கொள்கைக்காரர்களையே தேடிப்பிடித்து நிருபராக்கியிருக்கிறார் என்றும் சொல்லவேண்டியிருக்கின்றது. அதில் கண்ட விஷயம் சரியானதல்ல என்று தெரியப்படுத்தக் கடமைப் பட்டுள்ளேன்.

பிரசிடெண்டு நாயக்கரை முட்டாள் என்று சொன்னதாக அதாவது "முட்டாள்தான் இந்து மதத்தைக்குறை கூறமுடியும்" என்று குறிப்பிட்டிருப்பது முழுப்பொய்யும் அற்பத்தனமும் ஆகும். தவிர நாயக்கர் முன்னிலையிலேயே கமிஷன் பகிஷ்கார தீர்மானம் கொண்டு வரப்பட்டது என்று எழுதியிருப்பது மகா அயோக்கியத்தனமாகும். ஏனென்றால் அதன் முடிவு என்ன ஆயிற்று என்று எழுதாமல் கொண்டுவரப்பட்டது என்று மாத்திரம் எழுதி மொட்டையாய் விட்டுவிட்டது பொது ஜனங்களை ஏமாற்றச் செய்த சூழ்ச்சியே யாகும். ஸ்ரீ வரதராஜுலுவின் ஜாண் வயிறு வளர்க்க இம்மாதிரி விஷமப் பிரசாரம் தேவையா? இதற்கு ஒரு பத்திரிகையும் தேவையா? என்று கேட்கின்றோம்.

ஒரு நிருபர்—'திராவிடன்'

வடஆற்காடு ஜில்லா ஒன்பதாவது கூட்டுறவு பெருங்கழகம்.

இம்மாதம 25: 26 தேதிகளில் ராமாபுரம் சத்திரத்தில் ராவ் பகதூர் பி. முனிசாமி நாயுடு பி ஏ பி எல்.எம் சி அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

அமைச்சர் ஏ அரங்கனாத முதலியார் அவர்களும் விஜயம் செய்திருந்தார்.

தோடு இனியும் அவர்கள் இம்மாதிரி எழுதுவதை யாரும் நம்பவே வேண்டாம் என்று பொது ஜனங்களைக் கேட்டுக் கொள்வதைத் தவிர வேறு வழியில்லை.

N. K. P.—'திராவிடன்'

சிக்கல்கோயில் டிரஸ்டு நியமனமும் ஓர் ஐயங்காரின் ஆடாச்செயலும்.

சிக்கல் கோயில் டிரஸ்டிக்கு கெடு முடிவடைந்து விட்டபடியால் அபேக்ஷகர்கள் நாகப்பட்டணம் சர்க்கிள் தேவஸ்தானம் பிரசிடெண்டு அவர்களிடம் விண்ணப்பம் செய்து கொள்ளலாம் என விளம்பரங்கள் காணப்பட்டதும் ஊழியர் சங்க அமைச்சரும் சுயமரியாதை வீரருமான திரு. ச. பாலசுப்பிரமணியம்பிள்ளை அவர்கள் அப்ளிகேஷன் கொடுக்க கமிட்டி ஆபீஸ் கொர்க்காயிருந்துவரும் ஓர் ஐயங்கார் வாங்க மறுதளித்தாரென்றால் அதற்கு காரணம் என்னென்று கூறுவது?

கனம் பிள்ளை அவர்களின் நியமனத்தால் சிக்கில் கோவில் பார்ப்பனமயமாயிருப்பது தகர்க்கப்படுமென்ற பீதியை தவிர வேறு என்ன காரணம் என நாம் வினவுகிறோம்.

தேவஸ்தானத் தலைவரும் அங்கத்தினர்களும் ஷை அய்யங்காரை விசாரித்து நடவடிக்கை எடுத்துக்கொள்ள வேண்டியதுடன் கனம் பிள்ளையவர்களின் விண்ணப்பத்தையும் கவனிக்கவேணுமாய்க்கோருகிறேன் என்று ஒரு நிருபர் எழுதுகிறார்.

ராஜா வாசகசாலையும் சைமன் கமிஷனும்

ராயல் கமிஷனை பகிஷ்கரிக்கவேண்டுமென்று சொல்லுவது தாழ்த்தப்பட்ட மக்களுக்கு மேல் சாதியார் என்று சொல்லப்படுவோர் செய்த செய்கின்ற கொடுமைகள் ஷை கமிஷனுக்குத் தெரிந்தால் தங்கள் ஆதிக்கம் குறைந்து தாழ்த்தப்பட்டவர்களுக்கு அதிக சீர்திருத்தம் வழங்கிவிடுவார்கள் என்ற நோக்கத்துடன் இருப்பதால் தாழ்த்தப்பட்டவராகிய நாம் நம் குறைகளையும் மேல் சாதியார் எனப்படுவோர் செய்யும் கொடுமைகளையும் கமிஷன் முன் எடுத்துச் சொல்லவேண்டும் என்று மதராஸ் ஸ்ரீ எம. சி. ராஜா வாசகசாலை தீர்மானம் செய்திருக்கிறதாக திரு. சி. எ. சந்திரஹாசன் எழுதுகிறார்.

தென்னிந்திய செங்குந்த மகாஜன சங்கப் பிரசாரம்

திருவாளர்கள் க. வச்சிரவேல் முதலியார் தி. அ. ஷண்முகமுதலியார் ஆகியவர்கள் 2—2—28 சென்னையிலிருந்து புறப்பட்டு ஊத்துக்குளி சென்னியமலை முறட்டுப்பாளயம் திருப்பூர் முதலிய இடங்களுக்குச் சென்று செங்குந்தர்கள் முன்னேறம் கருதி சொற்பொழிவுகள் நிகழ்த்தி ஆங்காங்கு செங்குந்தர்கள் சங்கங்கள் ஸ்தாபித்து வருகிறார்கள் என்று ஊத்துக்குளி செங்குந்த குல சங்க காரியதரிசி ஸ்ரீ எம். சி. ராயசாமி அவர்கள் எழுதுகிறார்.

சமூக சீர்திருத்தக் கழகக் கிளை பொன்மலை.

20—2—28 ல் மாலை 6 மணிக்கு சி டைப் 72 வது பிளாக்கில் கிளை கழகம் திருவாளர் செல்லப்ப நாயக்கர்தலைமையில் ஏற்படுத்தப்பட்டது. திருவாளர் மோகன்குரூ அவர்கள் கழகங்கள் ஏற்படுத்தவேண்டிய அவசியத்தைப் பற்றியும் கழகத்தின்நோக்கத்தைப்பற்றியும்நமக்குள்உயர்வுதாழ்வுஎன்பதைநீக்கவும்படிப்பைவிர்த்தி செய்யவும் இராப்பள்ளிக்கூடம் ஏற்படுத்தவும் வீண் செலவுகளை திருத்தவும் செய்யவேண்டுமென்பதையும் எடுத்துச்சொன்னார். பிறகு திருவாளர் கிருஷ்ணசாமி பிள்ளை பேசினார், பிறகு திருவாளர் பிர்மானந்தம் அவர்கள் கல்வி என்பதைப்பற்றி பேசி முடித்தார். பிறகு திருவாளர் சிலுவை முத்துபிள்ளை கிளைக் கழகத்திற்கு அக்கிராசனராக் தேர்ந்தெடுக்கப்பட்டார். பிறகு சந்தனம் தாம்பூலம் முதலியவை வழங்கப்பட்டு 8—30 மணிக்கு கூட்டம் கலைந்தது. எஸ்.நாராயணசாமி.

திரு. நாயக்கர் பிரசாரம்

நாஸ்திகமதமா?

ஆரிய சநாதன தர்மத்தின் யோக்யதை.

—:o:—

இராவணதாசன் எழுதுவது

ஒரு இறைவனை மூன்று கடவுளாக்கி இப்பொழுது மூவாயிரம் சுவாமிகளை உண்டாக்கியிருப்பது ஆரியசநாதனதர்மம்

ஒன்றுமற்றதை நான்கு வேதமாக்கி இப்பொழுது நாலாயிரம் வேதங்களாக்கி நாற்பத்தெண்ணாயிரம் புராணங்களாக்கியிருப்பது ஆரியசநாதனதர்மம.

தீண்டாமை, பார்க்காமை முதலிய கொடுஞ்செய்கைகள் இருக்கவேண்டுமென்பது ஆரிய சநாதன தர்மம்

ஒரு பார்ப்பான் சாப்பிடுவதை ஒரு பார்ப்பனரல்லாதவன் பார்த்தானேயாகில் நான் ஒரு மாதம் பட்டினிகிடப்பேன் என்று ஒரு சாப்பாட்டுராமன் சொல்வது ஆரிய சநாதன தர்மம்.

செந்தமிழ் நாட்டிலே சமஸ்கிருதபாஷையே தேவபாஷை எனக் கூறித்திரிவது ஆரிய சநாதன தர்மம்.

இல்லாத ஏழைகளுக்கு சோறு போடாமல் பார்ப்பன குண்டோதரர்களுக்கு பூரி தட்சிணையுடன் அன்னமிடச் சொல்வது ஆரிய சநாதன தர்மம்.

பிறவியிலேயே பார்ப்பான் உயர்ந்தவன், பிறவியிலேயே பறையன் தாழ்ந்தவன் என்று சொல்லி வருவது ஆரிய சநாதன தர்மம்

ஒரே 'மதத்தில்' சேர்ந்த வகுப்பாரை பொது இடங்களில் அநுமதிக்கச்செய்ய மறுப்பது ஆரிய சநாதன தர்மம்.

கோடிக் கணக்கான மக்களை பிறமதங்களுக்குப் பலி கொடுத்து நம் மதத்திற்கு எதிரியாக்கி வருவது ஆரிய சநாதன தர்மம்.

பிராமணனும் சூத்திரனும் மட்டும் உலகில் இருக்கிறார்களென புராணங்களில் எழுதுவதும், தீர்மானம் செய்யச் செய்ததும் ஆரிய சநாதன தர்மம்.

காப்பி ஓட்டல்களில் பார்ப்பனனுக்கு தனியிடமும், பார்ப்பனரல்லாத கிருஸ்தவர், முஸ்லீம் முதலிய வகுப்பார்களுக்கு தனியிடமுமாக ஒதுக்கித் தள்ளியிருப்பது ஆரிய சநாதன தர்மம்.

நாய்களும் பஞ்சமரும் பிறமதஸ்தர்களும் உள்ளே வரக்கூடாது என்று எழுதுவது ஆரிய சநாதன தர்மம்.



இரண்டாவது தஞ்சை ஜில்லா பார்ப்பனரல்லாத இளைஞர் மகாநாடு

ஆண் பெண் என்றஇரு சாதியை ஐந்து சாதியாக்கி இப்பொழுது ஐயாயிரம் சாதியாக்கியிருப்பது ஆரிய சநாதன தர்மம்.

சைவம் பெரியதா? வைணவம் பெரியதா? என சண்டையை மூட்டி மண்டை உடைபடச் செய்து சில வகுப்பினரை வயிறு வளர்க்கச் செய்வது ஆரிய சநாதன தர்மம்.

விபூதி பெரிதா? நாமம் பெரிதா? அதில் வடகலை பெரிதா? தென்கலை பெரிதா? என வாதம் புரிந்து வெள்ளைக்காரனின் தீர்ப்புக்கு எதிர்பார்க்கச் செய்வது ஆரிய சநாதன தர்மம்.

கடவுளின் பெயரால் கோடிக்கணக்கான ஆடு கோழிகளைப் பலியிடச்சொல்லுவது ஆரிய சநாதன தர்மம்.

சுவாமியின் பெயரால் பெண்மக்களை விபசாரிகளாக்கிவிடுவது ஆரிய சநாதன தர்மம்.

வருணாசிர அதர்மம் இருக்கவேண்டுமென்பது ஆரிய சநாதன தர்மம்.

புரோகித பித்தலாட்டம் ஒழியக்கூடாதென்பது ஆரிய சநாதன தர்மம்.

ஒரு சூத்திரன் தவஞ் செய்ததற்காக அவனது தலையை வெட்டும்படி செய்தது ஆரிய சநாதன தர்மம்.

சூத்திரர்கள் பார்ப்பானின் தாசி மக்களெனக்கூறிவருவது ஆரிய சநாதன தர்மம்.

சூத்திரர்கள் 'வேத'மோதக்கூடாதென்பது ஆரிய சநாதன தர்மம்.

குழந்தைகளுக்கு பொம்மைக் கலியாணம்போல் மணஞ்செய்வதும் புருஷனிறந்தால் மொட்டையடித்து மூலையில் தள்ளி வருவதும் ஆரிய சநாதன தர்மம்.

பெண்மக்களுக்கு கல்வி போதிக்கப்படாதென்பது ஆரிய சநாதன தர்மம்.

பாலிய விதவைகளுக்கு மறுமணம் செய்யமறுத்து அவர்களை விபசாரிகளாக செய்துவருவது ஆரிய சநாதன தர்மம்.

சங்கராச்சாரி ஒருதமிழனுக்கு தீர்த்தம்கொடுத்தால் தோஷம் வருமென்று பிராயச்சித்தம் செய்துகொள்வது ஆரியசநாதன தர்மம்.

ஒருமுட வழக்கத்திற்காகவடநாட்டிலே இந்து முஸ்லீம் கொலைகள் நடக்கும்படி தூண்டுவது ஆரிய சநாதன தர்மம்.

இவ்வளவு போக்கியதையில் இந்திய நாட்டிற்கு ராமராஜ்ய சுயராஜ்யம் கேள்பது இன்றைய தினம் இந்தியர்களின் கொள்கை என்று நாடகரூபமாக வெள்ளைக்கார நாட்டில் நடித்துக் காண்பிப்பது ஆரிய சநாதன தர்மம்

இவ்வளவு ஆபாசமான கொள்கைகளைத் தான் நமது வைக்கம் வீரர் அவர்கள் தொலைக்கவேண்டுமெனக் கூறுகின்றார். இந்த உண்மையை அறியாத சில பாமரமக்கள், மதம் போச்சு! நாஸ்திகமாச்சு! என ஊளையிடுகின்றார்கள். இதற்கு 'தமிழ் நாடு' பத்திரிகையும் கோவிந்தம் போடுகிறது. காலச்சக்கரம் சுழன்று வருவதை இவர்கள் அறியார்கள் போலும். அந்தோ! பேதமை!

பழையன கழிதலும் புதியன புகுதலும்.

'நவசக்தி' யில்

திரு. வல்லே பாலசுப்பிரமணியன் B. A. எழுதுவது.

தேசீயக்கல்வியாம்!

சமயபோதனையாம்!

மகாபாரதத்தில் காண்கின்ற துரோணாச்சாரி ஏகலைவன் கதை அன்பர்களுக்கு யாம் சொல்லாமலே தெரிந்திருக்கலாம். இக்கதை யாவருக்கும் வெள்ளிடைமலையாதலால் யாம் இதனைப்பற்றி விவரிக்கப்போவதில்லை, இதை விளக்க இதிலும் பிராமணராகிய துரோணாச்சாரியின் மனோதத்துவம் நன்கு விளங்குகின்றது. முன் சென்ற கதையில், பரசுராமராவது கோசகக் கன்னனுக்குக் கல்வி கற்பித்தார். ஈண்டு அதுவும் இல்லை. ஏகலைவன் தனது முயற்சி வளர்ந்த நம்பிக்கையாலும், உழைப்பாலும் (fatih and labour) மேன்மை யடைந்தவனே தவிர, துரோணாச்சாரியால் ஓர் அணுவேனும் அவன் கற்றவனன்று. எனினும் அருச்சுனனது அழுக்காற்றால் தூண்டப்பெற்று விற்பிரயோகத்திற்கு இன்றியமையாது வேண்டப்படுவதான வலது கைப் பெருவிரலைக் குருதக்ஷிணைக்கையாகக்கேட்பது இழிவு! இழிவு!! இழிவு!!! என்னே! அருச்சுனன் மன்னர் மகனன்றோ! ஏகலைவன் ஓரிழிகுலத்தவன் தானே, ஈண்டு வழி படுவோனைக் காட்டிலும், பொருள் ஈனி கொடுப்போனே துரோணருக்குச் சிறப்பாகத் தோன்றினான். துரோணாது நிலை தான் இவ்வாறென்றால் அருச்சுனனது நிலை கண்டு யாம் பெரிதும இரங்குகின்றோம், பகைவன் எதிர் நின்று போர் செய்யவொண்ணாது அவனது இன்றியமையாத உறுப்பைத் துண்டிக்கச்செய்வதுதான் அருச்சுனனது சுத்தவீரத்தனமா என்று யாம் வினவுகின்றோம். "விறல் விசயனே" என்று சுந்திரமூர்த்தி நாயனார் பாடியதை யாம் ஒப்புக்கொள்ள முடியாதது குறித்துக் கவல்கின்றோம். இதுவும் தேசியக்கல்வியாம்! சமயபோதனையாம்! இவ்வாறு எத்தனை ஏகலைவர்களும், கன்னர்களும், இராமாயணத்திற்சொல்லப்பட்ட 'சூத்திரர்களும்' தமக்கு உண்மை ஆற்றலிருந்தும் இவ்விழிதகைமையான சாதிக்கட்டுப்பாட்டால் வெளிக்குத்தோன்ற முடியாமற் போய்விட்டார்களோ அறியேம். அதனால் நம்மிந்திய நாடு எத்துணைச் செல்வத்தை இழந்தது? ஆகவே தன் பாப்பினால், மேன்மேலும் மக்களைத் தம் சுயமரியாதையை இழக்கச் செய்து, அறியாமையில் அழுத்தி, குருட்டு நம்பிக்கைகளைப் பரவச் செய்யும் இதுவுங் கல்வியாகுமா என்று கேட்கின்றோம். இவற்றையெல்லாம் யாம் கூறின், 'மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய்' என்றவாறு போன்று மனமருள் உள்ளவனுக்கு ஏதுங்குற்றமாகத் தான் தோன்றும் என்று எம்மைப் பலர் இகழக்கூடும். ஆயினும், அவ்விகழ்ச்சியை யாம் பொருட்படுத்துவதில்லை.

சிறுவர்கட்குத் தான் இத்தகைய பாடங்களென்றால், பெரியவர்கள் எங்ஙனம் காலம் கழிக்கின்றார்கள்? பார்ப்பன அக்கிரகாரங்களிலும் மற்றெல்லா இடங்களிலும், வீட்டுத்திண்ணைகளின் பேரில் இராமாயணம், பாரதம், பாகவதப் பிரசங்கங்கள் பெருகிக்கொண்டே வருகின்றன. பெரிய பெரிய கொட்டகைகளிலும் மண்டபங்களிலும் தேசியத்தின் பேரால் காலக்ஷேபங்கள் எண்ணிறந்தனவாக நடைபெறுகின்றன. இவைகளில் பிரசங்கிக்கும் சுவாமிகள், சாஸ்திரிகள், பாகவதர்கள், பிரசங்கிகள் இவர்களுள் யார்மிக விசித்திரமான புளுகுக்கோட்டை கட்டுகிறார்களோ அவர்களுக்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு. சிலைக் கதைகளும், பெண்களை ஏசியும் இழிந்துங் கூறும் வம்புக் கதைகளும் இடம்பெறாத பிரசங்கங்கள் சோபிப்பதில்லை. வான் மீன்கள் திக்கலைச்சுற்றி அலங்கரிப்பது போன்று, இவற்றிற்கெல்லாம் தலையாய் வருணாசிரம மகாநாடுகள் அவ்வப்போது கூடுகின்றன. இத்தகைய மகாநாடு மேடைகளில் நாடகம் நவிற்றுவோர் சாதாரண மக்களல்லர். மகா மகா மேதாவிகள், சாஸ்திர விற்பன்னர்கள், உபநிடத சிரோமணிகள், வேதோக்தர்கள், உபாபகவியாளர்கள், உயர்ந்த பட்டதாரிகள், ஆங்கிலம் தமிழ் வடமொழி முதலிய பல மொழிகளைக் கரைத்துக் குடித்து ஏப்பமிட்டவர்கள். சாதிவேற்றுமையும், தீண்டாமையும் வேறு எந்நாடும் பெறுதற்குப் பேறு பெறவில்லை யென்றும் இந்தியத்தாய் ஆற்றிய நற்றவத்தால் அவர்களுக்குக் கிடைத்த பெரும் பொக்கிஷம் என்றும் இவர்கள் மேனாட்டு ஆராய்ச்சியைக் கொண்டே நிறுவிக் காட்டுவார்கள். சந்திர கிரகணத்தன்று திங்களை உண்மையாகவே பாம்பு பிடிக்கிறதென்று நேரிற் காட்டுவார்கள். உச்சிக்குடுமிகள் தான இன்றியமையாது வைத்துக்கொள்ள வேண்டும் என்றும் அவற்றினால் மின்சாரக் கதிர்கள் இனிய விதாய்ப் பாய்கின்றன வென்றும் சொல்லுவார்கள். பூணூல் அணிவதில் உடலுக்கு இன்ன உபயோகம் உண்டென்று சொல்வார்கள். மேனாட்டான் நேற்றுதான் ஆகாயவிமானத்தைக் கண்டுபிடித்தான், அதுவும் நம் பண்டைய இருடிகள் எழுதிவைத்த ஓலைச்சுவடிகளினின்றுந் தான் தெரிந்துகொண்டார்கள், ஆனால் இது போன்ற பல்லாயிரக்கணக்கான ஆகாய விமானங்கள் பண்டைக்காலங்களிலிருந்தன. பார்! இராமாயணத்திலும் பாரதத்திலும் கந்த புராணத்திலும உள்ள புஷ்ப விமானங்களையும் சீவக சிந்தாமணியிலுள்ள மயிற்பொறியையும் உற்றுநோக்கு" என்பார்கள். ஆம்! அவர்கள் சொல்லுவது முற்றுஞ் சரியே. இந்நூற்களில் புஷ்பக விமானம மயிற்பொறி என்று அழகாக அச்சிடப்பட்டிருக்கின்றன. நன்றாய்ப் பார்த்தோம். இம்மட்டோ இராகு காலத்திலும் வாராசூலையிலும், மரணயோகத்திலும சென்றால் ஆராய்ச்சியினால் இன்ன தீமைவிளையும என்று அளந்து கூறும ஆற்றலுடையவர்கள்! முழங்காலுக்கும மொட்டைத் தலைக்குங் கூட முடிபோட்டுக் காட்டும் ஆற்றலுடையவர்கள்!

இந்திய அன்னாய்! இத்தகைய பெருமக்களைப்பெற்ற நீ பெறுபேறு வேறுயார் பெறுதல் கூடும்?

இனி நாடகங்களிலும் சினிமாக்களிலும் பாண வேடிக்கைகளிலுங் கூட தேசியம் முழங்குகின்றது. சம்பூர்ண இராமாயணம், சம்பூர்ண மகா பாரதம், தாராசசாங்கம், அதில் தாரை சந்திரனுக்கு எண்ணெய் தேய்க்கும் பாகம், தசாவதாரம், கிருஷ்ணலீலை என்னும் இவைகளே நாடகங்களிலும் சினிமாப்படக்காட்சிகளிலும் மிகவும் சிறப்பினைக் கொண்டாடுகிறார்கள். இந்நாடகங்கள் சினிமாக்களின் தலைவர்கள மக்களது மூட நம்பிக்கையைத் தூண்டி அவர்களிடமிருந்து வஞ்சித்து ஏராளமாய்ப் பொருள் பறிப்பது கொஞ்சமன்று. ஒரு சினிமாப்படக்காட்சியில் நரசிங்க மூர்த்தி தூணினின்றும் வெளிப்போந்து இரணியனைக் கிழித்தபோது ஆவேசங்கொண்டவர்களும் 'பகவானே' என்று கற்பூரங் கொளுத்தினவர்களும் எமக்குத் தெரியும்.

மேற் காட்டியவாற்றால் இத்தகைய நச்சுக் கல்வியைப் பரவவிடுவதால் மக்கள் விரைவில் நாசமடைந்து இருந்த இடமும் தெரியாது போவாரேயன்றிச் சீர்திருந்த வழியில்லை யென்பது தெளிவு. ஆ! அம்மகவு தன் கையிலுள்ள கத்தியொன்றினால் மகிழ்ச்சி ததும்பத் தன் கழுத்தை யறுத்துக்கொள்ளப் போகின்றது. அது தன் நிலையை அறிந்துகொள்ள முடியாதவாறு அறியாமைச் சேற்றில் அழுந்திக் கிடக்கின்றது. உடனே சென்று அக்கத்தியைப் பிடுங்கிப் போடுங்கள். காலப்போக்கு ஆபத்தாய் முடியும். நம் தென்னாட்டில் பன்முகங்கொண்ட சீர்திருத்தங்கள மிக விரைவில் வேண்டற்பாலன. சமய சம்பந்தமானதும் கடவுள் சம்பந்தமானதுமான நாடகங்களும் படக் காட்சிகளும் இனிச் சாலும். சமுதாயச் சீர்திருத்தத்தை யொட்டிக் கதைப் புத்தகங்களும் நாவல்களும் சொற்பொழிவுகளும் நாடகங்களும் படக்காட்சிகளும உடனே நடைமுறையில் வருதல் வேண்டும். ஆந்திர நாட்டில் பன்முகங்களாலும் இத்தகைய கிளர்ச்சியை எழுவித்த ஆசிரியர் வீரேசலிங்கம் பந்துலு அவர்களை அந்நாட்டினர் தெய்வமெனக் கொண்டாடுகின்றனர். சமய நூலாராய்ச்சி இலக்கிய ஆராய்ச்சி முதலியவைகளிலுள்ள தப்பெண்ணங்கள் உடனே ஒழிந்து தூய எண்ணங்கள் எங்கணும் பரவுதல வேண்டும். எத்துணைப் பெரியவராயினும் பண்டை நூலாசிரியரேனும் எவராயிருப்பினும் அவர்களைக் கண்டிக்கவோ புகழவோ ஒரு சிறுவனுக்கும் உரிமை வழங்குதல் வேண்டும். கொள்கை வேற்றுமை கொண்டு ஒருவரை யொருவர் நிந்தித்தல கூடாது. கொள்கை வேற்றுமையின்றேல் நாடு முன்னேறாது, காலசக்கிரம் ஓயாது. சுழலுந்தோறும் நாடோறும் நமக்கொரு புத்தம புதிய காட்சியினை யளிக்கின்றது. நேற்றிருந்தது இன்றில்லை. இன்றிருப்பது நாளையில்லை.

சீர்திருத்த இயக்கம் இது போழ்து வேண்டற்பாலது. பார்ப்பனரல்லாதாரிய

இதன் தொடர்ச்சி 13ம் பக்கம் பார்க்க

பகிஷ்காரம்வெற்றிபெற்ற யோக்கியதை.

'திராவிடன்' எழுதுவதாவது.

சைமன் கமிஷன் பகிஷ்காரம் என்பது பார்ப்பன சூழ்ச்சி என்பதாக வைக்கம் வீரரும் 'குடி அரசு'ம் முழக்கி வந்ததை அறிவுள்ள மக்கள் முழுவதும் ஏற்றுக் கொண்டார்கள் என்பதும் சென்னையில் அர்த்தாலன்று பார்ப்பனர்களுக்கும் பார்ப்பனர்களது அடிமைகளுக்கும் நடத்த மரியாதையினுல் அது பார்ப்பனர்களாலேயே ஒப்புக்கொள்ளப்பட்டது என்பதற்கும் யாதொரு ஆட்சேபனையும் இல்லையென்பது வெளிப்படை.

இரண்டாவதாக சைமன் கமிஷன் சென்னை மாநகரத்தில் கால் வைக்கும் காலத்தில் மறுபடியும் அர்த்தால் செய்யப்பட வேண்டும் என்று கூலி தேசபக்தர்களும் வயிற்றுப்பிழைப்பு தேசியவாதிகளும் எவ்வளவோ கூக்குரலிட்டும் பார்ப்பனத்தலைவர்கள் என்போர்கள் 144 ஐப் பார்த்துக் கொண்டு தலைகாட்டாமல் திரிந்ததும் சில தேசியத் தொண்டர்கள் என்போருக்கு தலைவர்கள் என்போர்கள் பணம் கொடுத்து 144 ஐ மீற வேண்டாம் என்று காலில் விழுந்து கெஞ்சிக்கொண்ட விஷயமும் 'தமிழ நாடு' பத்திரிகை ஆபீசில் திருட்டுத்தனமாய் நடந்த தேசியக் கூட்டத்திலிருந்து யாரும் யூகித்து அறிந்திருக்கலாம். கடைசியாக பகிஷ்காரக் கூச்சலின் பலனாய் ஸ்ரீ வரதராஜுலுவின் தலைவரான ஸ்ரீ சத்திய மூர்த்தி அய்யர் அவர்களும் ஸ்ரீ சத்தியமூர்த்தி அய்யரின் சிஷ்யரான ஸ்ரீ வரதராஜுலுவும் வெளியில் தலை காட்டுவதற்கு யோக்கியதை இல்லாமல் முக்காடு போட்டுக்கொண்டு மூலையில் உட்காரவும் யோக்கியதை ஏற்பட்டதல்லாமல் வேறு காரியம் செய்து முடித்துவிட்டதாக சொல்வதற்கில்லாமல் போய்விட்டது.

சென்னைக்குச் சைமன் வந்த தினம் பிரதிநிதிகளும் பிரபலஸ்தர்களும் ரயிலுக்கு சென்று வரவேற்றழைத்ததும் சென்ட்ரல் ஸ்டேஷனில் நிற்கக்கூட இடமில்லாமல் பொது ஜனங்கள் கூடியிருந்ததும் போலீஸ்காரர்களால் அடக்கமுடியாத கூட்டம் இருந்ததும் யாவராலும் மறுக்கக்கூடியதல்ல. கூலிக்கு 4 பேர் நின்று கொண்டு தங்கள் முகத்தை காட்டவும் வெட்கப்பட்டு 'சைமனே திரும்பிப்போ' என்று கத்தினதல்லாமல் காகித அட்டையைத் தலைகீழாய் காட்டினதல்லாமல் வேறு ஒரு காரியமும் நடத்த முடியவில்லை. கடைசியாக ஞாயிற்றுக்கிழமை கடை மூடப்பட்டதை தங்களுக்கு ஆதாரவாய் வைத்துக்கொண்டு யாதொரு பிரயத்தனமுமில்லாமல் தானாகவே அர்த்தால் செய்யப்பட்டது என்று வெட்கமில்லாமல் சொல்லிக்கொண்டது தான் மீதியாயிற்றேயொழிய வேறு தூசியளவு காரியமும் செய்ய யோக்கியதையற்றவர்களாக 'தலைவர்கள்' ஆகிவிட்டார்கள். இது நிற்க மற்றொரு விஷயம் எனவென்றால் 'சைமன் வருகின்ற தினம நமது கதி என்ன ஆகுமோ' என்று நினைத்து சுமார் 200 வீட்டுக்காரர்களுக்கு மேல் பார்ப்பனர்கள் தங்கள் பெண்பிள்ளைகளை வேறு ஊருக்கனுப்பிவிட்டு மறைந்துகொண்டார்கள்.

நிற்க சென்னையில் சைமன் கமிஷனுக்கு நடந்த ஆர்ப்பாட்டங்களை பார்ப்பனப் பத்திரிகைகளும் அவர்களின் கூலிப்பத்திரிகையாகிய 'தமிழ்நாடு' போன்றவைகளும ஒப்புக்கொண்டிருக்கின்றன. பார்ப்பனத்தலைவராய சர் சி.பி. அய்யர் விருந்து வைத்ததும் பார்ப்பனரல்லாதார் கான்ஸ்டிடியூஷனலிஸ்ட் தலைவராய சர் கே.வி. ரெட்டி நாயுடு விருந்து வைத்ததும், ஆதிதிராவிட தலைவர்கள் விருந்துக்கு அழைத்ததும், பொது ஜனங்கள் கட்சி தலைவர்கள் விருந்து வைத்ததும, மற்றும் பலர் வகுப்பு வகுப்பாக அழைத்ததும் பல விருந்துகளுக்கு கமிஷனை போக சௌகரியமில்லை என்று மன்னிப்பு கேட்டுக்கொண்டதும் பார்க்கும் போது சிலரது பகிஷ்காரக்கூப்பாட்டிற்கும் அவர்கள் வால்களின் பிதற்றலுக்கும் எவ்வளவு மரியாதை சென்னையில் இருந்தது என்பது வெளியாகும். இது தவிர சைமன் கமிஷன் சென்னையை விட்டு வெளியேறும் தினம் ஓர் ஊர்வலம் நடத்துவதாக ஏற்பாடு செய்து சிலரைக் கூலிக்குப் பிடித்து கூச்சல் போட ஏற்பாடு செய்திருந்தும், ஒரு போலீஸ் அதிகாரி வேண்டாம் என்று சொன்னதும் பயந்து கொண்டு ஓடிப்போனதும் இவர்களுடைய வீரத்தன்மையை விளக்காமல் போகாது.

அடுத்தபடியாக தஞ்சையைப்பற்றி கவனித்தால் பகிஷ்காரத்திற்கு காட்டினவர்களின் யோக்கியதை இன்னதென்பது விளங்காமல் போகாது. சைமன் கமிஷன் தஞ்சைக்கு வருமுன் தஞ்சை ஜில்லா போர்டு மீட்டிங்கில் கொண்டுவந்த நம்பிக்கையில்லாத்தீர்மானமும் பகிஷ்காரத் தீர்மானமும் தோல்வியுற்றன. சைமனுக்காக ஏற்படுத்தப்பட்ட வரவேற்புக்கமிட்டியில் நம்பிக்கையில்லை என்றதீர்மானத்திற்கு ஓட்டுக்கொடுத்தவர்களில் சிலர் கூட தாங்கள் வரவேற்பு கமிட்டி மெம்பராக வேண்டுமென்று கலெக்டர் காலில் விழுந்தார்கள். வரவேற்புக்கு சுமார் 5000, 6000 ரூபாய் வசூலாயிற்று. ஆடம்பரமான வரவேற்பும் நடந்தது. யாரோ சிலர் கடை அடைக்கும்படி கத்திப்பார்த்தும் பிரதிப் பிரயோஜனம் பெற்ற சிலர் தவிர மற்றவர்கள் கடைகள் தாராளமாய் திறந்திருந்தன. ஜில்லா போர்டு, முனிசிபாலிட்டி, யூனியன் போர்டு முதலிய ஸ்தாபனங்கள் வரவேற்புப் பத்திரங்கள் வாசித்துக் கொடுத்து வரவேற்றன. மகமதியர்கள், ஆதிதிராவிடர்கள், பெரிய பெரிய மிராஸ்தார்கள் ஆகியவர்கள் பேட்டியும் கண்டார்கள். வாண்டையார் முதலியோர்கள் விருந்தும் செய்தார்கள். நாகப்பட்டணம், நாகூர், பட்டுக்கோட்டை முதலிய பல ஊர்களில் இருந்து கமிஷனுக்கு அழைப்பும் வந்தன.

அடுத்தாற்போல் மதுரைக்குப் போனதில் அங்கு நடந்த ஆடம்பரத்திற்கும் குறைவில்லை. ஜனப்பிரதிநிதி சபைகள் என்கின்ற ஜில்லா போர்டு முனிசிபாலிட்டி முதலிய ஸ்தாபனங்கள் வரவேற்புப் பத்திரத்துடன் வரவேற்றதல்லாமல், கிருஸ்தவர்கள், மகமதியர்கள், ஆதிதிராவிடர்கள், நாடார்கள், பொது ஜனங்களில் அநேகர் சென்று பேட்டி கண்டதும் விருந்துகள் கொடுத்ததும் மற்றும் பல விருந்துகளுக்கு கமிஷன் போக சௌகரியமில்லாமல் மன்னிப்புக் கேட்டுக்கொள்ள நேர்ந்ததும் மறைக்கக் கூடிய காரியமல்ல. எனவே எந்த விதத்தில் பகிஷ்காரம் நடந்தது என்று முடத் தெங்குகள் வீரம் பேசிக்கொள்ள முடியும் என்று கேட்கின்றோம்? பகிஷ்காரக்காரர்கள் சுயமரியாதை உடையவர்களாகவாவது தேசியமானத்தைக் காப்பாற்றும் தன்மையுடையவர்களாகவாவது இருந்திருப்பார்களானால் 144-ஐக்கண்டு கதவை சாத்திக்கொண்டு திருட்டுத்தனமாய் மீட்டிங்கு போட்டு மீறக்கூடாது என்று தீர்மானம் செய்திருப்பார்களா? பகிஷ்காரத்தில் கலந்து கூச்சல் போட்டுவிட்டு வரவேற்க விண்ணப்பம போட்டிருப்பார்களா? விருந்துக்குப் போயிருப்பார்களா? அவர்கள் மெம்பர்களாக சட்டசபைக்கும் ஸ்தல ஸ்தாபன இலாக்கா கூட்டங்களுக்கும் போயிருப்பார்களா? அன்று எல்லா கோர்ட்டுகளுக்கும் போயிருப்பார்களா என்பதை யோசித்துப்பார்த்தால் பகிஷ்காரம் என்பது பார்ப்பனப் புரட்டு என்பதும் வயிற்றுச் சோற்று 'தேசபக்தர்கள்' புரட்டு என்பதும குருடர்களுக்கும விளங்காமல் போகாது. தவிர, வெளிமாகாணங்களில் மகமதியர்களும் ஆதிதிராவிடர்களும் இந்துமகா சபையாரும சைமனை நான்கு கை கொண்டு வரவேற்கின்றார்கள் என்பதும், ஸ்ரீமான்கள் ஜின்னு, ஜயக்கர், மூஞ்சை முதலியவர்கள் குட்டிக்கரணம் அடிக்கத்தயாராயிருக்கிறார்கள் என்பதும் சர்வ கட்சி மகாநாடு உடைந்துபோய்விட்டதென்பதும் பார்க்கும்போது இனியும் பகிஷ்காரம என்கிற பேச்சுக்கோ காங்கிரசுக்கோ யோக்கியதை இருப்பதாய் சொல்ல யாருக்காவது உரிமை உண்டா என்று கேட்கின்றோம். தற்காலம் இருக்கும் நிலையில் காங்கிரசைவிட வகுப்பு இயக்கங்களே பெரிய ஸ்தாபனங்களாக போய்விட்டன. காங்கிரஸ் என்பதும தேசீயம் என்பதும் ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தி அய்யர், ரங்கசாமி அய்யங்கார் சீனிவாசய்யங்கார், ஷாபி மகமது குழந்தை குப்புசாமி முதலியார், வரதராஜுலு, கந்தசாமி செட்டியார் இவர்கள் அல்லாமலும், இதுபோன்ற அச்சில் வார்த்தவர்கள் வெளியூர்களில் ஸ்ரீமான்கள் அனுமந்தராவ், சக்கரவர்த்தி அய்யங்கார் போன்றவர்களைத் தவிர வேறுயாருக்கு பிரதிநிதியாய் இருக்கின்றது என்பதை யோசித்தாலே சகல சங்கதியும் விளங்கித்தான் போகும். யோக்கிய பொறுப்பில்லாமலும் பொதுஜனங்களையும் பொறுப்புள்ளவர்களையும் உண்மை உழைப்பாளிகளையும வயிற்றுப் பிழைப்பு தேசீயவாதிகள் சர்க்கார் தாசர்கள் என்றும் குலாம் கட்சிகள் என்றும் கூப்பாடு போடலாம். எழுதலாம். ஆனால் இதைக்கேட்க

இதன் தொடர்ச்சி 12ம் பக்கம் பார்க்க



அனைத்துயிர் ஒன்றென்றெண்ணி
அரும்பசி யெவர்க்கும் ஆற்றி
மனத்துளே பேதாபேதம்
வஞ்சம் பொய் களவு சூது
சினத்தையும் தவிர்ப்பாயாகில்
செய்தவம் வேறொன்றுண்டோ?
உனக்கிது உறுதியான
உபதேசம் ஆகும்தானே.

குடி அரசு

ஈரோடு பிரபவ௵ மாசி௴ 28௳

பார்ப்பன அயோக்கியத்தனம்.

நமது நாட்டு முன்னேற்றத்திற்கும், சுயமரியாதைக்கும் பார்ப்பனர்களே ஜன்ம விரோதிகள் என்றும், அவர்களாலேயே நமது நாடு அடிக்கடி அன்னிய ஆதிக்கத்திற்கும் கொடுங்கோல் அரசு முறைக்கும் ஆளாகி வந்துகொண்டிருக்கின்றது என்றும், பார்ப்பன அயோக்கியத்தனம் வீழ்ந்த அன்றே வெள்ளைக்காரக் கொடுங்கோல் ஆட்சிமுறை பட்டு மாய்ந்துவிடும் என்றும் நாம் விபரம் தெரிந்த காலம் முதல் தொண்டை கிழியக் கத்தியும்வருகின்றோம். கைநோக எழுதியும் வருகின்றோம். ஆனாலும் வேறு வழியில் வயிறுவளர்க்க முடியாத இழிமக்கள் தங்கள் வாழ்வுக்காக பார்ப்பனர்களுக்கு அடிமைகளாகி சிலர் கடவுளுக்கு வக்காலத்து பேசுவதுபோல் இவர்கள் பார்ப்பனர்களுக்கு வக்காலத்து பேசி நமது முயற்சியைக் கெடுக்க வந்து விடுகின்றார்கள். பொது ஜனங்களும் முக்கியமாய் பாமர மக்களும் இவ்விஷயத்தில் கவலை இல்லாமலும், தங்கள் பகுத்தறிவை சரியாய் உபயோகிக்காமலும் கவலை அற்ற முறையில் "பார்ப்பனரை குற்றம் சொல்லாத முறையில் நமது வேலை நடக்கக்கூடாதா" என்போர்களும் "பார்ப்பனர்கள் 100-க்கு மூன்று பேர்கள்தானே, அவர்கள் நமக்கு ஒரு எதிரிகளா" என்று "தர்மம்" பேசுவோர்களும், மற்றும் பலவிதமாக அர்த்தமில்லாத சமாதானம் சொல்வோர்களுமாக இருந்து வருகிறார்கள். என்றைக்காவது நமது நாடு யோக்கியமான முன்னேற்றமும் சுயமரியாதையும் பெறவேண்டுமானால் பார்ப்பன அயோக்கியத்தனமும், சூழ்ச்சியும், ஆதிக்கமும் ஒழிந்த பிறகுதான் சாத்தியப்படக்கூடிய விஷயமே யல்லாமல் பார்ப்பனீய ஆதிக்கம் அடியோடு அழிபடாமல் ஒரு நாளும் முடியாது என்று கோபுரத்தின் மீதிருந்தும் கூவுவோம். வெளியில் இருக்கிற பாமர மக்களுக்கு பார்ப்பனத் தொல்லை இன்னது என்பது ஒரு நாளும் புலப்படுவதில்லை. பார்ப்பனன் தன்னுடைய வாழ்வுக்குத்தக்கபடி தனது நடவடிக்கையை மாற்றிக்கொள்ளத்தக்க சவுகரியங்கள் மதத்தின் பேராலும், கடவுள், வேதம், சாஸ்திரம், ஸ்மிருதி, புராணங்கள் முதலியவைகளின் பேராலும பழக்க வழக்கங்களினாலும் ஆதியிலேயே ஏற்படுத்தி வைத்துக்கொண்டிருக்கிறான். அன்றியும் நம்மவர்களில் பெரும் பாலோர்களை படிக்க முடியாமல் செய்தும், படித்த சிலரையும் மேல கண்ட கடவுள், வேதம், சாஸ்திரம், சமயம், பக்தி முதலியவைகளால் பிடிவாத மூடர்களாக்கி வைத்திருப்பதாலும் எவ்வளவு எடுத்துச்சொன்னாலும் புத்தியில்படாமல் நமது முயற்சிகள் வீணே போய்விடுகின்றன.

கடவுள் பேராலும் மதத்தின் பேராலும் நமது பெண்களை விபசாரிகளாக்கும் கொடுமையை ஒழிக்க முயற்சிக்கும் விஷயத்திற்கும் சிறு குழந்தைகளை புருஷன் பெண்ஜாதிகளாக்கும் கொடுமையை ஒழிக்கும் விஷயத்திற்கும மனிதனுக்குமனிதன் தீண்டாதவன் தாசி மகன் என்பதை ஒழிக்கவேண்டும் என்பதற்கும் நம் கடவுள்பேராலும் மதத்தின் பேராலும் ஸ்மிருதிகள் பேராலும் "மதத்தலைவ"ப் பார்ப்பனர்கள் முதல் காப்பிக்கடைப் பார்ப்பனர்கள் இடையாக காகுப் பார்ப்பனர் ஈறாக எவ்வளவு எதிர்ப்புகளும் சூழ்ச்சிகளும தொல்லைகளும் விளைவித்துவருகின்றார்கள் என்பது யாராவது அறியாத விஷயமா என்று கேட்கின்றோம.

"சுயராஜ்யம் வேண்டும்" "தேசியம்முக்கியமானது" என்று கூச்சல்போடுகிற பாராவது இக்கொடுமையிலும் இழிவிலும் இருந்து விலகுவதற்கு ஏதாவது கவலைஎடுத்துக் கொள்ளுகிறார்களா அல்லது அதற்கு ஆதாரமாய் இருக்கும் இடத்தைக் கண்டு அதை வெட்டி எறிய ஏதாவது முயற்சி எடுத்துக் கொள்ளுகிறார்களா என்று கேட்கின்றோம். தேசியக கூச்சல் போடுகின்ற வயிற்றுச் சோற்று ஆசாமிகள் எந்த சமயத்திற்கு எதைச்சொன்னால் பாமரமக்கள் ஏமாறுவார்கள், பொது ஜனங்களை ஏமாற்றி வாழலாம் என்கின்ற கவலையில் இருக்கின்றார்களேயொழிய வேறு ஏதாவது மானம், அவமானம், கவலை, இழிவு என்பதைப்பற்றி கொஞ்சமாவது உணர்ச்சி உள்ளவர்களாக இருக்கின்றார்களா?

உதாரணமாக பொட்டுக்கட்டும் வழக்கத்தை ஒழிக்க ஸ்ரீமதி முத்துலக்ஷ்மி அம்மாளவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிக்கு விரோதமாக ஒரு 'பிரபல தேசியவாதி' என்கின்ற பெயர் பெற்ற ஸ்ரீமான் சத்திய மூர்த்தி அவர்கள் சொன்னது என்ன என்பதை சற்று ஞாபகப்படுத்திப்பாருங்கள். அவர் என்ன சொன்னார் "பெண்களை கடவுள் பேராலும் மதத்தின் பேராலும் பொட்டுக்கட்டி விபசாரத்திற்கு விடுகிற வழக்கம் தப்பு என்பதாக இன்று நாம் ஒரு முடிவு செய்து விடுவோமானால் ஸ்ரீமான் ஈ. வெ. ராமசாமி நாயக்கரும வரதராஜுலு நாயுடுவும் நாளைக்கு கோவிலில் சுவாமிக்கு (தாசர்கள்) அர்ச்சகர்கள் வேண்டியதில்லை என்று சொல்லுவார்கள். அதையும் கேட்க்க வேண்டியதாய் ஏற்பட்டு விடும். ஆதலால் கண்டிப்பாய் மதத்தில் பிரவேசிக்க (அதாவது எவ்வித சீர்திருத்தமும் செய்ய) இடம் கொடுக்கக்கூடாது" என்று 3 மாதத்திற்கு முன் சொன்ன சங்கதி யாவருக்கும் தெரியும். மற்றொரு சமயம் சுமார் 2 வருஷத்திற்கு முன்பு ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யரை நட்டுவன்போல் படமெழுதி அவர் கையில் ஒரு ஜாலராவைக் கொடுத்து ஒரு தாசிக்குப் பின்னால் நிறுத்தி அவர் தட்டும் மாதிரியாகவும் ஒரு தாசி ஆடும் மாதிரியாகவும் படம் போட்டு 'இங்கிலாந்தில் தேசியக் கூத்து' என்று பெயர் கொடுத்து லண்டனுக்கு விபசாரத்திற்கு விடுவதற்காக ஸ்ரீமதி பத்மாசனி அம்மாளை அழைத்துப் போகிறார் என்று முதல் நாள் எழுதி விட்டு மறு நாள் கேஸ் ஆகிவிடுமோவென்பதாகப் பயந்து விபசாரத்திற்கு என்று எழுதியதைப் பிசகென்றும் அதை உபசாரத்திற்கு என்பதாக திருத்திக் கொள்ள வேண்டும் என்றும் 'தமிழ்நாடு' பத்திரிகையில் ஸ்ரீவரதராஜுலு திருத்தம் எழுதியதும் யாவருக்கும் தெரியும். எனவே அப்படிப்பட்ட...... ஸ்ரீமான் சத்தியமூர்த்தி அய்யரை அதே ஸ்ரீ வரதராஜுலு மந்திரி வேலையை தயவு செய்து ஒப்புக்கொள்ளும்படி எப்படி தந்தி கொடுத்தார்? அதே ஸ்ரீ சத்திய மூர்த்தி அய்யர் அதே ஸ்ரீமான் வரதராஜுலுவுக்கு இன்றைய தினம் எப்படி தலைவரானார்? அவர் தலைமையில் இவர் எப்படி தொண்டாற்றுகின்றார்? 'தமிழ் நாடு' ஆபீசில் அடிக்கடி கதவை மூடிக்கொண்டு எப்படி இருவரும் இரகசியக் கூட்டம் கூடுகின்றார்கள்? என்பவைகளை யெல்லாம் கவனித்தால் பொது ஜனங்களுக்கு இதில் ஏதாவது ஒரு இரகசியம் இருக்கும் சங்கதி விளங்காமல் போகாது.

அடுத்தாப்போல் 'இந்து' பத்திரிகை என்னும் ஒரு பார்ப்பனப் பத்திரிகை எவ்வளவு தூரம நமது மக்களுக்கு கொடுமை செய்கின்றது! எவ்வளவு தூரம் நமது முன்னேற்றத்திற்கும் சுயமரியாதைக்கும் முட்டுக்கட்டையாயிருக்கின்றது! நமது ஆங்கிலம் படித்த மக்களை தலையெடுக்க வொட்டாமல் செய்ய எவ்வளவு அயோக்கியத்தனங்கள் செய்கின்றது! என்பன வாதியவைகள் யாருக்கும் தெரியாதா என்று கேட்கின்றோம. உதாரணமாக சமீபகாலத்தில் 'இந்து' பத்திரிகையில் 10 வயது பெண்ணோ அல்லது 12 வயது பெண்ணோ ஒருவனுக்கு கல்யாணத்திற்காக வேண்டும் என்று ஒரு விளம்பரம் செய்திருந்தது. இதைப்பார்த்து ஒரு சீர்திருத்தக்காரர் 'இந்து'வை ஒரு கேள்வி கேட்டார். அதாவது "ஓ! இந்துவே நீர் சீர்திருத்தக்காரன் என்று முழக்கம் செய்கின்றனையே! இந்த காலத்தில் கூட 10வயது அல்லது 12 வயது பெண் ஒரு மாப்பிள்ளைக்கு கலியாணத்திற்காகவேண்டும் என்று விளம்பரம் செய்யலாமா" என்று கேட்டார். அதற்கு இந்து பத்திரிகை சொன்னபதில் என்ன என்று பாருங்கள்.

"10 அல்லது 12 வயது பெண்களை இப்போது விவாகம் செய்வது என்பதாகக் காணப்படுவதானது விவாகச் சடங்கல்ல. அது நிச்சயார்த்தத்திற்கு ஒப்பானது. பெண்ணையும் மாப்பிள்ளையையும் வீட்டிற்குள் விட்டு கதவு சாத்துகின்றோமே அதுதான் விவாகம்" என்று அயோக்கியத்தனமாய் பதில் எழுதிற்று.

இதற்கு அந்த சீர்திருத்தக்காரர் என்ன பதில் எழுதினார் என்றால் "ஓ இந்துவே 10 வயதிலும் 12 வயதிலும் கல்யாணம் செய்வதுபோல் கண்ணுக்குத் தெரிவதெல்லாம் கல்யாணம் அல்ல, அது நிச்சயார்த்தம் என்று சொல்ல வருவாயானால் அந்த 10, 12 வயது பெண்களின் நிச்சயார்த்தம் செய்யப்பட்ட புருஷன் செத்தால் தாலி அறுபட்டதாக பெயர் செய்து மொட்டை யடித்து முக்காடு போட்டு மூலையில் உட்கார வைப்பதேன்? அதுகூட உங்கள் நிச்சயார்த்தச் சடங்கில் சேர்ந்த நிபந்தனையா" என்று கேட்டார். உப்புக்கண்டம் பறிகொடுத்த பார்ப்பனத்தி போல் "இந்து" இதற்குஒரு மறுமொழியும் சொல்லாமல் வாயை மூடிக்கொண்டது. மற்றும் பல சமயங்களில் அது நம்மவர்களுக்கு விரோதமாக எவ்வளவோ கொலைபாதகத்திற்கு ஒப்பான கொடுமைகளைச் செய்திருக்கின்றது செய்கின்றது. செய்யக் காத்திருக்கின்றது. இம்மாதிரியான பத்திரிகையைத்தான் ஸ்ரீமான் வரதராஜுலுவும் அவரது "தமிழ் நாடு"ம் உயர்ந்த யோக்கியமான பத்திரிகை என்று சொல்ல ஸ்ரீமான் காந்தியிடம் தூது சென்றன.

நிற்க, ஸ்ரீமான் சர். சி. பி. ராமசாமி அய்யர் நமது சமூகத்தார் தயவினால் சட்ட மெம்பர் ஆனவர். அப்படி இருந்தும் அவர்கள் பரம்பரை வழக்கம் போல் அதை மறந்துவிட்டு நம்மவருக்கு செய்த இடையூறுகள் கொஞ்ச நஞ்சமா என்பதை அறியாதார் யாரும் இருக்கமாட்டார்கள்.

மேட்டூர் திட்டத்தில் அவர் செய்த புரட்டும் பித்தலாட்டங்களும் கணக்கு வழக்குக்குள் அடங்கியதல்ல. இதை பிட்டுப்பிட்டு 'ஜஸ்டிஸ்' 'திராவிடன்' பத்திரிகைகள் வெளியாக்கின. கொஞ்ச காலத்திற்கு முன்வரை ஸ்ரீமான் வரதராஜுலுவும் அவரது 'தமிழ் நாடு'ம ஸ்ரீமான் சி. பி. அய்யரைப்பற்றி எழுதிய வசவு எழுத்துக்கள் கொஞ்ச நஞ்சமல்ல. அப்படி இருக்க இப்போது திடீரென்று சர். சி. பி. அய்யருக்கு சிபார்சு பேசுவதும் அவரை ஆதரிப்பதும் அவரையும் அவர் ஊழல்களையும்வெளியாக்கினதற்காக ஜஸ்டிஸ் கட்சியை 'தமிழ்நாடு' பத்திரிகை வைததும் ஆகிய விஷயங்களைப்பற்றி யோசிப்பவர்களுக்கு அதிலும் ஏதாவது இரகசியம் இருக்க வேண்டுமென்று புலப்படாமல் போகுமா?

எவ்வளவோ கஷ்ட நஷ்டங்களுக்கிடையில் பார்ப்பன சூழ்ச்சியை வெளியாக்கி மக்களை பார்ப்பன கொடுமையிலிருந்து விடுதலை பெறச்செய்ய ஒரு சாரார் பிரயாசைப்படும்போது ஸ்ரீ வரதராஜுலுவும் அவரது பத்திரிகையும் பார்ப்பன பூஜை செய்து கொண்டு கவிபாடி திரிந்துகொண்டிருக்கவேண்டிய இரகசியமென்ன? இதற்காக இவருக்குப்பார்ப்பனர்கள் கொடுத்த கூலியென்ன? என்பதை கவனித்துப் பார்ப்போமாக. 3-வ 'தமிழ் நாடு' உபதலையங்கத்திலும் 8-தேதி 'ஜஸ்டிஸ்'ஆம் 9-தேதி 'திராவிட'னிலும் உள்ள தலையங்கத்தில் காணப்படும் சில குறிப்புகளை சற்று கவனித்துப்பார்த்தால் ஸ்ரீ வரதராஜுலுவுக்கு பார்ப்பனர்கள் கொடுத்த கூலியும் அவர்களின் அயோக்கியத்தனமும் நன்றாய் விளங்கும். அதில் காணப்படுவதென்னவென்றால்,

'இந்து' பத்திரிகையின் சந்தாதாரர்களின் தொகை 13,500-ல் இருந்து 17,500 க்கு உயர்ந்துவிட்டது........................ ....தமிழ் பத்திரிகைகளுக்குள் 'தமிழ்நாடு' பத்திரிகையின் சந்தாதார்களின் தொகை நூற்றுக்கு ஐம்பது வீதம் உயர்ந்து 6000 பத்திரிகை ஆகிவிட்டது. இது கொள்கையை மாற்றிக்கொண்டதனால் இப்படி உயர்ந்துவிட்டது.................... ஜஸ்டிஸ் முதலிய பத்திரிகைகளின் சந்தாதாரர்களின் தொகை மிகுதியும் குறைந்துவிட்டது ஃ ஃ ஃ ஃ

என்பதாக காணப்படுகின்றது. இது அரசாங்கத்தாரின் சென்றவருஷ நிருவாக அறிக்கையில் பத்திரிகைகளைப் பற்றிய குறிப்புகளில்இருந்து எடுதது எழுதப்பட்டது.

இதை பார்க்கும்போது பார்ப்பனஅயோக்கியத்தனத்திற்கும் ஸ்ரீ வரதராஜுலுவுக்கு பார்ப்பனர்கள் கொடுதத லஞ்சத்திற்கும் வேறு ஆதாரம் வேண்டுமா என்று கேட்கின்றோம். இந்த இலாகா நிர்வாகம் சர். சி. பி. என்கின்ற பார்ப்பன ஆதிக்கத்தில் உள்ளது. பத்திரிகைக்கணக்கெடுக்கும் C. I. D. உத்தியோகஸ்தர்கள் மிகுதியும் சர். சி. பி. அய்யரின் ஏவலாள்களான பார்ப்பனர்கள். எனவே இந்தக் காரியமானது சர். சி. பி. அய்யராலாவது அல்லது அவரது C. I. D. சிஷ்யர்களாலாவது செய்த அயோக்கியத்தனமாக இருக்கவேண்டுமே யொழிய வேறு யாராலாவது அல்லது யோக்கியமாகவாவது செய்த காரியம் என்று சொல்லமுடியுமா என்று கேட்கின்றோம், இந்த ரிபோர்ட்டு எழுதப்பட்ட காலத்தில் 'ஜஸ்டிஸ்' 'திராவிடன்' பத்திரிகைகள் மளமள வென்று உயர்ந்துகொண்டு போன காலம். இது எந்த மடயனுக்கும் தெரிந்த விஷயம். அதல்லாமல் 'தமிழ்நாடு' பத்திரிகை படல் படலாய்விழுந்து கொண்டு வந்த காலம். இப்படி இருக்கஇம்மாதிரி அரசாங்க ரிபோர்ட்டில் எழுதப்படுவது என்றால் பார்ப்பன அயோக்கியத்தனம் எவ்வளவு தூரம பாய்கின்றது என்பதற்கு அளவுண்டா என்பதை யோசித்துப் பாருங்கள். 'தமிழ் நாட்டை' ப்பற்றி உயர்த்தி ஒன்றுக்கு மூன்றாய்எழுதியதில் நமக்கு பொறாமை இல்லை. வேலைக்குத்தகுந்த கூலி அடையட்டும். 'ஜஸ்டிஸ்' 'திராவிடன்' பத்திரிகைகளைபபற்றி இவ்வளவு குறைவாய் வேண்டுமென்றே போக்கிரித்தனமாய் எழுத வேண்டிய காரணம் என்ன? என்பதுதான் நமது கேள்வி.

விளம்பரம் கொடுப்பவர்களை இப்பத்திரிகைகளுக்கு கொடுக்க முடியாமல் செய்துவிடவேண்டு மென்றும் 'தமிழ் நாடு' பத்திரிகைக்கும் 'இந்து' பத்திரிகைக்கும் அதிகமானபேர் விளம்பரம் கொடுத்து அவைகள் பணம் சம்பாதித்து வயிறு வளர்த்து பார்ப்பனப் பிரசாரம் செய்யட்டும் என்றும் எண்ணினதேயல்லாமல் வேறு என்னமாய் இருக்க முடியும்?

அப்படிக்கில்லாமல் இந்த அறிக்கை அறியாமலாவது முட்டாள் தனமாகவாவது எழுதப்பட்டிருக்குமென்று யாராவது சொல்ல முடியுமா? வேண்டுமென்றே கூலிக்காகச் செய்த காரியமா அல்லவா என்பதைப் பொது ஜனங்களே யோசித்துப்பார்க்கட்டும். சற்று கடுமையாக இருப்பதாக யாராவது சிலர் சொல்லவாக்கூடும். அக்கடுமையின் பலனை நாம் அனுபவிக்கத் தயாராயிருக்கின்றோம். ஆனால் கடுமை என்று நினைப்பவர்கள் எத்தனை நாளைக்கு இம்மாதிரி அயோக்கியத்தனங்களையும் போக்கிரித்தனங்களையும் சகித்துக்கொண்டு இருப்பது என்பதையும் இவைகளை நிறுத்த என்ன செய்வது எப்படிப்பட்ட பாஷையில் எழுதுவது என்பதையும் பற்றி நமக்கு ஏதாவது யோசனை சொல்லட்டும். இல்லாதவரை வாயை மூடிக்கொண்டு நமது பத்திரிகையை கிழித்தெறிந்து விட்டு சும்மா கிடக்கட்டும். இரண்டும் இல்லாமல் நோணாவட்டம் பேசவேண்டாம் என்றுதான் கேட்டுக்கொள்ளுகின்றோம்.

பிராமணன், க்ஷத்திரியன், வைசியன், சூத்திரன், பஞ்சமன் என்கின்றபாகுபடுத்தி நம்மை சூத்திரன் என்கின்ற பிரிவில்சேர்த்து சட்ட சபையில் அறிக்கை வெளியிட்டு இன்னமும் ஆறுமாதம் கூட ஆகவில்லை. அதைப் பற்றி தொண்டையைக் கிழித்துக்கொண்டோம். கையை ஒடித்துக்கொண்டோம். யாரும் ஏன் என்று கேட்கவில்லை. 'தேசியம் பறக்கின்றது' 'சீர் திருத்தம் வாழ்கின்றது' 'சுயமரியாதைக்காக பகிஷ்காரமும் அர்த்தாலும் தாண்டவமாடுகின்றது' 'சட்டசபைகளில் நம்பிக்கையில்லாத் தீர்மானங்கள் கர்ஜிக்கின்றது' 'பார்ப்பனரல்லாததலைவர்களும் அதற்கு எழுந்துநிற்கின்றார்கள்' இவ்வளவு அமோகத்தில் இதைப பற்றிய அயோக்கியத தனங்களுக்கும் கொடுமைகளுக்கும் சற்றும் இடமே இல்லை. இனி நம்ம 'தலைவிதிதான்' என்ன என்பதைப்பற்றி யாராவது யோசிக்கவேண்டாமா?

தமிழ் மக்களின் நிலைதான் என்ன? இது தலை எடுக்கும் காலந்தான் எப்பொழுது? என்பதை சற்று கவனித்துப் பார்க்கவேண்டும் என்பதுதான் இந்த வியாசத்தின் கருத்து "பார்ப்பனர் பார்ப்பனரல்லாதார் பேச்சே இப்போது கூடாது" என்று போலிதேசிய ஞானம் பேசும் ஸ்ரீமான்கள் வரதராஜுலுவும், குப்புசாமியும், அண்ணாமலையும் 'தமிழ் நாடு' பத்திரிகையும் வடநாட்டு இந்து முஸ்லீம் கலவரங்கள்போல் தென்னாட்டிலும் பார்ப்பனா பார்ப்பனரல்லாதார் கலவரங்கள் ஏற்பட்டு தினம் இரு பக்கத்திலும் நாலு பத்து என்பதாக மடியவும் கை கால் ஒடியவும் ஏற்பட வேண்டும் என்கின்றதா இந்த தேசிய ஞானிகளின் கருத்து என்று கேட்கின்றோம்.

அப்படி ஒரு சமயம் ஏற்பட்டாலும் கூட அதனால் ஏதாவது பெருமை வருவதாயிருந்தால் அப்போதும் இந்த வர்த்தமானங்களும் "தமிழ் நாடு" போன்ற பத்திரிகைகளும் "நாம் சொல்லியபடியே நடந்தது, நாம் எழுதியபடியே நடந்தது, இதற்காக பொதுஜனங்களை பாராட்டுகின்றோம்" என்று சொல்லி விளம்பரப்படுத்தி அதிலும் லாபம் சம்பாதிக்கப் பார்ப்பார்களே யொழிய இதற்காக கடுகளவாவது கவலைப்படுவார்களா என்று யோசித்துப்பாருங்கள். இம்மாதிரி நிலை (ஏற்படாமல் இருக்கட்டும்) ஒரு சமயம் ஏற்படுமானால் இவர்கதியும் என்ன ஆகும் என்பதையும் யோசித்துப்பார்க்க வேண்டிக்கொள்ளுகின்றோம்.

இப்பார்ப்பனர்களும் அவர்களது அடிமைகளும் சாந்தத்தையும் பொறுமையையும் அஹிம்சையையும் கொலை செய்கின்றார்களே யல்லாமல் கடுகளவாவது அதற்கு மதிப்பு கொடுக்கின்றார்களாவென்பதை யோசித்துப்பாருங்கள். இந்தப்பார்ப்பன அயோக்கியத்தனத்தின் பலனாகவும் இப்பார்ப்பனர்களின் அடிமைகளின் நடவடிக்கையின் பலனாகவும் அரசாங்கத்தாரும் (வெள்ளைக்காரர்களும்) தங்களது ஆட்சி முறையை எவ்வளவு அக்கிரமமாக நடத்த முடியுமோ அதற்கு மேலும் நடத்திக்கொண்டுபோகத் துணிந்துவிட்டார்கள். மேலும் அவர்கள் இக்கொடுமைக்கார பார்ப்பனர்களையே ஆதரித்து தங்கள் கொடுமையான ஆட்சி முறையை வலுப்படுத்திக்கொண்டும் போகின்றார்கள் என்றே சொல்லவேண்டும். பார்ப்பனீயம் உள்ளவரை அரசாங்கத்தை யோக்கியமானதாகச் செய்யமுடியாது. பார்ப்பனரல்லாதாருக்கு நியாயம் வழங்கத்தக்கதாக செய்யவும் முடியாதென்பது நமது கடைசி முடிவு. இந்த நிலையில் இப்போது அரசாங்கத்தைப் பற்றிபேசுவது காட்டிலிட்ட கூச்சலாகும். பார்ப்பனீயம் என்னும் மரம் வெட்டி வீழ்த்தப்படும்போது அன்றே அதே சமயத்தில் அந்த நிழலில் வாழும் அரசாங்கமும் நசுக்குண்டுபோகுமென்பது சத்தியம்! சத்தியம்!! சத்தியம்!!!

எனவே இவ்விஷயங்களை பார்ப்பனரல்லாத வாலிபர்கள் கண்டிப்பாய் அறிய விரும்புகின்றோம். இது மிகவும் நெருக்கடியான சமயமென்பதை வலியுறுத்துகின்றோம்.

9-ம் பக்கத் தொடர்ச்சி.

வும் இவர்களை லட்சியம் செய்யவும் யாராவது இருக்கின்றார்களா என்பதை யோசித்தால் யோக்கியதை விளங்கிவிடும். பொதுஜனங்களை "தேசியத்தின்" பேரால் ஏமாற்றி வயிறு வளர்த்து வந்த காலம் மலையேறி விட்டது என்பது ஒவ்வொரு வயிற்றுப் பிழைப்பு தேசிய வாதியும் உணர்ந்து இனி யோக்கியமாய் நடந்துகொள்ளவேண்டுமாய் எச்சரிக்கை செய்கின்றோம்.

'திராவிடன்'

பார்ப்பனீயம் ஒழிய குடி அரசை வாசியுங்கள்

"சர்க்கார் சாதித்ததென்ன"

தீண்டாதார்களுக்கும் தீண்டாமையைப் பற்றியும் "சர்க்கார் சாதித்ததென்ன சர்க்கார் சாதித்ததென்ன" என்று தலைவர்கள் என்போர்கள் முதல் வாலர்கள் என்போர்கள்வரை கத்துகின்றார்கள்.

'சர்க்கார் அயோக்கிய ஆட்சிமுறை கொண்டது கொள்ளை அடிக்க வந்தது' என்று நாம் தீர்மானம் செய்தாகி விட்டது. 'உலகத்தை ரக்ஷிக்கவந்த பிராமணர்களும் மதமும் தேசிய வீரர்களும்' என்ன செய்தார்கள், செய்கிறார்கள், செய்யப் போகிறார்கள் என்றுதான் கேட்கின்றோம். அதற்கு பதில் சொல்லாமல் சற்றும் வெட்கமின்றி 'சர்க்கார் சாதித்ததென்ன' என்று கேட்பது அயோக்கியத்தனமா அல்லவா என்று கேட்கின்றோம்.

அதோடு இன்றையத்தினம் ஸ்ரீ M. C. ராஜாவும் சிவராஜும் சாமிசகஜானந்தாவும் சட்டசபைக்குப் போகவும் தங்கள் குறைகளை அங்கெடுத்துப் பேசவும் சர்க்கார் சாதித்ததா அல்லது ஸ்ரீமான்கள் சத்தியமூர்த்தியும் வரதராஜுலுவும் குப்புசாமியும் அண்ணாமலையும் சாதித்ததா என்று கேட்கிறோம்.

அவர்கள் பிள்ளைகள் இன்று ஆயிரக்கணக்கான பள்ளியில் அரிச்சுவடி படிப்பது சர்க்கார் சாதித்ததா அல்லது வேதமும் சங்கராச்சாரியும் இந்து மதமும் சாதித்ததா என்று கேட்கின்றோம்.

கல்பாத்தி தெருவில் நடக்கவும் பச்சையப்பன் பள்ளியில் படிக்கவும் ஏற்பட்டது சர்க்கார் சாதித்ததா அல்லது ஸ்ரீ சீனிவாசய்யங்காரும் ரங்கசாமி ஐயங்காரும் சாதித்ததா என்று கேட்கின்றோம்.

இன்னும் இம்மாதிரி எத்தனை வேண்டும்?

O. T. கூடலூரில் சுயமரியாதை உதயம்.

எமது நண்பரும் "குடி அரசு" அபிமானியும் சுயமரியாதைப்பிரியரும் சயிலாஸ்வியாபாரம் ஏ. ம.வை.ரு: ராமலிங்கம் அண்டு கம்பெனி பாகஸ்தரும் ஜலப்பிரதேசமாகிய சிங்கப்பூர், பினாங்கு, கோலாலம்பூர், கெட்டா, சுங்கைப் பட்டாணி இன்னும் மற்ற பல இடங்களிலும் "குடி அரசு"க்கு சந்தாதாரர்களை சேர்த்து குடி அரசுப் பேப்பரின் உண்மை உணர்ச்சியை உணரும்படி அன்புடன் புகட்டியவரும் திருவண்ணாமலை கோவில் வழக்குக்காக ஸ்ரீஜே. எஸ். கண்ணப்பருக்கு சிங்கப்பூர் சயிலாஸ் வியாபார சங்கத்திலிருந்து ரூபாய் உதவியவரும், சுயமரியாதை : சமத்துவம் சகோதரத்துவம் அடைந்து வாழ வேண்டுமென்று கருதி கருணைக் கடலாகிய கடவுளிடம் வழிபடுபவருமாகிய திருபா.பெருமான் தமது மூத்த மனைவியின் வருஷாந்தர சிராத்தத்தை 28-2-1928ல் பிராமண புரோகிதத்தைநீக்கி சமத்துவ பெரியோரைக் கொண்டு சிறப்பாய் நடத்தி ஏழைமுதல் அநேகருக்கு அன்னமளித்து மகிழ்ந்தார் அதைப்போல் இந்து சகோதரர்கள் அனைவரும் இவ்வண்ணம் திடசித்தத்துடன் நடாத்த முற்படுவீர்கள்.

ஒரு நிருபர்.

இரு மந்திரிகளின் ராஜீனமா.

பார்ப்பன சூழ்ச்சி பலிக்க வில்லை.

டாக்டர் சுப்பராயனை ஒழிக்க பார்ப்பனர்கள் செய்த சூழ்ச்சியானது பலிக்காமல் பார்ப்பனர்களுக்கு அடிமையாய் இருந்த ஸ்ரீமான்கள் ரங்கநாத முதலியார் ஆரோக்கியசாமி முதலியாருமே கவர்னரால் ராஜீனாமா கொடுக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்டு ராஜீனாமாவும் கொடுத்து விட்டார்கள். ஆனாலும் பார்ப்பனர்கள் டாக்டர் சுப்பராயனை ஒழிக்க இன்னமும் முயற்சிக்கிறார்கள். ஆரம்பத்தில் ஸ்ரீமான் சீனிவாசய்யங்கார் தலையில் ஒரு காலும சர் சி. பி. அய்யர் தலையில் ஒரு காலும இருக்கும்படியாக தாங்கின பார்ப்பனர்கள் இப்போது மிதிக்கப் பார்க்கின்றார்கள். பார்ப்பனர்களை நம்பினவர்களின் கதி என்றைக்கானாலும் ஒருநாளைக்கு இப்படித்தான முடியும்

திருநெல்வேலி ஜில்லா,
ஆதிதிராவிட மகாஜன சபை,
கொளும்புகினே.

நிகழும் 1928-ம் வருஷம் பிப்ரவரி மாதம் 27-தேதி தென்னிந்திய ஆதிதிராவிடச் சமாஜத்தில் மேற்படி சபையின் பொதுக் கூட்டம் உபசபா நாயகர், திரு. ப. சு. சின்னையா பிள்ளை அவர்களின் தலைமையின் கீழ் நடைபெற்றது. கீழ் காணும் தீர்மானம் நிறைவேறிற்று.

ஒவ்வொரு ஆதிதிராவிடரும் 'திராவிடன்' 'குடி அரசு' 'ஆதிதிராவிட காவலன்' 'தமிழன்' முதலிய ஆதிதிராவிடர்களுக்காக உழைக்கும் பத்திரிகைகளை ஆதரிக்கும்படி இம்மகாஜன சபை தயவாய்க் கேட்டுக்கொள்ளுகிறது.

மகாத்மா காந்தி அவர்கள் திரு. எம். ஸி. ராஜாவை தாழ்த்தப்பட்டவர்களின் உண்மைப்பிரதிநிதி அல்லவென்று கூறியதையும் இம்மகாஜன சபை பலமாய்க் கண்டிக்கிறது.

ஆதிதிராவிட மகாஜன சபை பிரதிநிதிகளான ஸர் ஜான் சைமன் அவர்களை பேட்டிகண்டு பேச சென்னைக்குப் போயிருக்கும் திரு. ச. பெ. கோபாலசாமி அவர்களையும், திரு.கா.பி பரமசிவன் அவர்களையும் அவர்கள் திரும்ப இலங்கைக்குவந்திறங்கும்தினத்தில் கெம்பீரமாய் வரவேற்கவேண்டும்.

இறுதியில் அக்கிராசனர் முடிவுரை கூறியபின் வந்தனோபசாரத்துடன் கூட்டம் கலைந்தது.

காரியதரிசி.

சுகாதாரவாரத்திலும்
பார்ப்பனக் கொடுமை.

கடையநல்லூரில் சுகாதாரவார ஊர் வலம் மாணாக்கர்களுடன் நடக்கும்போது பார்ப்பனச்சேரிக்கு பக்கத்தில் வந்தவுடன் அவ்வூர்வலத்தை பார்ப்பன ஆசிரியர்கள் பார்ப்பனத்தெருவு கொல்லைப் புறமாக அழைத்துப போனார்கள். "சிலர் ஏன் கொல்லைப்புறமாக ஊர் வலம் போகவேண்டும்"? என்று கேட்க "பஞ்சமப்பிள்ளைகளும் இவ்வூர்வலத்தில் கலந்திருக்கின்றபடியால் அக்கிரகாரத்தின் வழியே போகக்கூடாது" என்று பார்ப்பன ஆசிரியர்கள் பதில் சொன்னார்கள். என்ன கொடுமை! என்ன ஆணவம்! இந்த பார்ப்பன ஆசிரியர்களிடம் படிக்கும் பிள்ளைகளுக்கு சுயமரியாதை வருமா?

ஓர் பரிதாபி.

8-ம் பக்கத் தொடர்ச்சி.

க்கம் சீர்திருத்தத்தின் பாற்பட்டதே. இவ்வியக்கத்தைச் சிலர் வகுப்புப் பூசல் விளைவிக்கும் கட்சியென்று சொல்லி, அவ்வாறு சொல்வதனாலேயே இவ்வியக்கத்தை நசுக்கி விட்டதாக எண்ணி வீண் இறும்பூதெய்துவர். மற்றுஞ் சிலர் இப்பிராமணரல்லாதார்க்கு ஒரு சில பதவிகள் வழங்கப்பட்டுவிடின் இவ்வியக்கம் இருந்தவிடம் தெரியாமல் போய் விடும் என்று பிறழ உணர்வர். யாம் அவர் நிலை கண்டிரங்குகிறோம். யாம் ஒரு கட்சிக்காரரல்லேம். பார்ப்பனால்லாதார் கட்சி ஓர் அரசியல் கட்சியேயன்று. இக்கட்சியின் நூற்றில் ஓர் அமிசமாகவே சென்னையிலிருக்கும் ஜஸ்டிஸ்கட்சி இயங்குவதால் அது தேர்தல்களில் வெற்றி பெற்றாலும் கேடுற்றாலும் உத்தியோகங்களையும் மந்திரி பதவியையும் ஏற்றாலும் வெறுத்துத் தள்ளினாலும் காங்கிரஸ் மகா சபையில் சேர்ந்தாலும் வேறு ஒதுங்கி நின்றாலும் ராயல் கமிஷனைப் பகிஷ்கரித்தாலும் அன்றி அதனோடு ஒத்துழைத்தாலும்ஒருபோதும் ஜஸ்டிஸ் அரசியல் கட்சியின் ஏற்றத்தாழ்வுகளினாலெல்லாம் இச்சீர்திருத்த இயக்கம் தாக்கப்படுவதன்று. இஃதொருதெய்வீக இயக்கம். யாண்டுயாண்டெல்லாம் அறந்தேய்ந்து வஞ்சகம் அறியாமை முதலிய இருட் குழாங்கள் மக்களைக் காரிருளில் கவிக்கின்றனவோ ஆண்டெல்லாம் யான் அவ்விருட் படலங்களைக் கிழிதெறியும் ஞான சூரியன் போன்று அவதரித்து மீண்டும் அறத்தைப் பரவச்செய்கிறேன் என்னும் திருவாக்கியம் இவ்வியக்கத்திற்குத் தோற்றுவாயாக மிளிர்கின்றது. இவ்வியக்கம் நேருநற்போது நம் தென்னாட்டில்மட்டும் தோன்றியதன்று பன்னெடுங் காலமாக உலகெங்கணும் இவ்வியற்கை இயக்கம் தோன்றி நிலைத்து அறியாமையைப் போக்கி அறத்தை வளர்த்து தன் பணியை ஆற்றியவுடன் தான் வேண்டப்படாதபோது மறைந்து விட்டது. ஆகவே பார்ப்பனரல்லாதாரியக்கத்தை உண்மையாய் அறிய விழைவோர் அதன் பெயரினை மட்டுங் கண்டு மயங்காமல் அதன் அடிப்படைக் கொள்கைகளைக் காணபாராக இற்றைக்குச் சுமார் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் ரோமாபுரியிலிருந்த பிளபியன்ஸ் (Plebians) என்னும் மக்களால் இவ்வியக்கந்தோன்றி பெட்ரீஷியன்ஸ் (Patricians) என்னும் உயர்ந்த வகுப்பாரோடு அவர்களைப் போராடச் செய்து அவர்கட்கு சம உரிமையை வாங்கித்தந்தது. பதினாறும் நூற்றாண்டில் ஐரோப்பாக்கண்டத்திடை எழுந்த புரோடெஸ்டாண்டிசம் (The Protestant Movement) இவ்வுலக இயற்கை இயக்கத்தின் ஒரு சாயேயாகும். பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஐரோப்பாக் கண்டத்திடை வெகுண்டெழுந்து அக்கண்டத்தை அஸ்திவாரத்தோடு கலகலவென்று குலுக்கியே விட்ட பிரெஞ்சுப் புரட்சி (The French Revolution) என்னும் பேரியக்கமும் இவ்வியக்கத்தின் ஒரு பகுதியே யாகும். நம்மிந்திய நாட்டிலும் இரண்டாயிரம் ஆண்டுகட்கு முன் இவ்வியக்கம் கௌதமசாக்கியமையும் வர்த்தமான மகாவீரரையும் தலைமையாகக்கொண்டு புத்த சமணசமயங்களாகத் திகழ்ந்தது. புத்தர் பெருமான் தோன்றுவதற்கு முன்பிருந்த காலநிலைமையையும் அவர் செய்த பேறு தவினையும்,

'உயிர்களெல்லாம் உணர்வு பாழாகிப்
பொருள்வழங்கு செவித்துளை தூர்ந்தறி
(விழந்த
வறந்தலை யுலகத்தறம்பாடு சிறக்கச்
சுடர்வழக்கற்றுத் தடுமாறு காலையோர்
யிளவலஞாயிறு தோனறிய தென்ன
நீயேதோன்றினை நின்னடி பணிந்தேன்'

என்னும் மணிமேகலை யடிகள் நன்கெடுத்துக் காட்டுகின்றன. மற்றும் இராமானந்தர், மீராபாய், துளசிதாசர், கபீர்தாசர், துக்காராம், நாமதேவர், கிருஷ்ணசைதன்யர், இராமானுஜர், குருநானக் முதலிய பெரியோர் எல்லாம் தனக்கென வாழாது பிறர்க்கே யுழைத்து இவ்வியக்கத்தைப் பற்பல காலங்களில் பற்பல பெயர்களில் தம் தலைமையின் கீழ் நடத்தினார்கள். சிலவாண்டுகட்கு முன் இவ்வியக்கம் இராஜாராம் மோஹன் ராயர் தலைமையின் கீழ் பிரம்ம சமாஜமென்று கிளைத்தெழுந்தது. இன்னும் அணித்தாக ஒரு சில பத்து ஆண்டுகட்கு முன் இராம கிருஷ்ண பரமஹம்சரும் சுவாமி விவேகாநந்தரும் அவ்வியக்கத்தைப் பிடர் பிடித்துந்தினார்கள். இஞ்ஞான்று இவ்வியக்கம் தென்னாட்டில் பார்ப்பனரல்லாதாரியக்கம் என்னும் பேருடன் மிளிர்கின்றது. காலஞ்சென்ற மாதவன் நாயரவர்களும் தியாகராய செட்டியாரவர்களும் இவ்வியக்கத்தைக் கண்டார்கள் என்பது வெறுஞ் சொல்லலங்காரமே யன்றி வேறென்னை? எனினும் மேற்சொல்லிப் போந்த பெருமக்களைப்போன்று இவ்விருதொண்டர்களும் எம் தாயின் விடுதலைக்கு ஓல்லும் வகை முயன்றதற்காக அவர்களை நினைக்கும் போதெல்லாம் எம் உள்ளம் நைந்துருகுகின்றது. இலக்கியத் துறையில் ஆசிரியர் சுந்தரம்பிள்ளை யவர்களும் சுவாமி வேதாசலம் அவர்களும் நமக்குச்செய்த பெரு நன்மைகள் இவ்வளவென்று கூற முடியாது. சுந்தரம் பிள்ளையவர்கள் தம்மிளம் பருவத்திலேயே நம்மை விட்டகன்றது நாம் செய்த தவக்குறைவேயாகும். மற்றுமொருவர் ஆ! அப்பெருந்தகையை சர். தி. சதாசிவ அய்யர் அவர்களை எண்ணுந்தோறும் எம் கண்கள் நீராய்ச் சொரிகின்றன. அப்பெரியார் இவ்வியக்கத்துக்கு ஒரு புதுக்கிளர்ச்சியைத் தந்தார். இது போழ்தாவெவின் உயர் திருவாளர்கள் ஆர். கே. ஷண்முகம் செட்டியாரவர்கள், வைக்கம் வீரரும் சுயமரியாதைத் தலைவருமானஎம்பெருமான் ஈ. வெ. இராமசாமி நாயக்கரவர்கள், மற்றும் இன்னோரன்ன பெருமக்களும் இவ்வியக்கத்தைத் தாங்கி நடத்துகிறார்கள். இவர்களெல்லாம் ஆண்டவன் அருளால் நீடூழி வாழ்க பாரின் ஒரு முத்துமாலையின் ஊடே மெல்லிய நாண் அம்முத்துக்களைச் சேர்த்து கட்டியிருத்தல் போன்று யாம் மேலெடுத்துக்காட்டிய ஒவ்வோரியக்கத்துக்கு அடிப்படையாகச் சுயமரியாதை, சமநிலை, சாதி வேற்றுமைகளை அகற்றல், உயர்வு தாழ்வுகளைப் போக்கல், பெண்மக்களை யுயர்த்தல், அறம் வளர்த்தல், என்னும் ஒரேவிதமான உணர்ச்சிகள் ஊடுருவிப் பாய்கின்றன.

இவ்வியக்கம் சத்தியமாய் பிராமணத்துவேஷத்தை அடிப்படையாகக் கொண்டதன்று. முற் கூறியபடியே பார்ப்பனரல்லாதார் என்னும் பெயர் மறைந்து வேறு பெயர் இவ்வியக்கம் புனையினும்மிக நன்று. ஸ்ரீ சதாசிவய்யர்போன்ற பிராமணர்கட்கும் இவ்வியக்கத்தில் இடமுண்டு. அவர் நம்மவர். அவர் திருவடிகளில் தானாகவே எம் தலை கவிழ்கின்றது. முடிவாகப் பார்க்குங்கால் பார்ப்பனரும் நமது உடன் பிறந்தோரே. அவர்களுடனும் நாம் ஒற்றுமை எய்துமாறு இறைவன் தன் இன்னருள் அளிப்பானாக. அவ்வாறு பிராமணத்துவேஷம் இவ்வியக்கத்துக்கு அடிப்படையாயிருந்தால் இஃதின்றே அழிந்துபடுமாறு இறைவன் திருவுளம் பற்றுக. தனக்கு மேலும் ஒரு சாதியில்லை அதுபோன்றே தனக்குக் கீழும் ஒரு குலம் இல்லை என்னும் சுயமரியாதையையும் சம நிலையான வாழ்வையும் பரப்புவதே இவ்வியக்கத்தின் விழுமிய நோக்கமாகும். தாம் மட்டும் பார்ப்பனரிருக்கும் உயர் படியில் ஏறுதல் வேண்டும். ஆனால் தம் கீழுள்ள மக்களை ஆண்டே ஒதுக்கி வைக்கவேண்டும் என்னும் சுயநல நோக்குடையார்க்கு இவ்வியக்கத்தில் இடமில்லை இறுதியில் இவ்வியக்கம் தன் பணியை யாற்றிய பிறகு தானாகவே மறைந்துவிடும்.

இக்கட்டுரையை முடிப்பதற்கு முன் ஒன்றுமட்டுங் கூற முந்துகின்றோம். இஃது எம்மையறியாமலே எமது ஆத்திரத்தால் மிகவும் நீண்டுவிட்டது ஆத்திரக்காரனுக்குப் புத்தி மட்டு என்றெம்மைப் பழிப்பார் பழிக்க அப்பழிப்புரையெல்லாம் எமக்குப் பூணாகும இக்கட்டுரையில் யாம எவரையாதல எந்நூலையாதல் எக்குழுவினரையாதல் தீய சிந்தையுடன் புண்படுத்த விழைந்தோமில்லை. அபுத்தி பூர்வமாக யாவர் உள்ளத்தையாதல யாம் நோகச் செய்திருந்தால் அவர் எம்மை மன்னிப்பதுடன் எம்மை த்திருத்தும்படி அவர் தம் இணையடிகளைப்பற்றி யிறைஞ்சுகின்றோம்.

'நகுதற் பொருட்டன்றுநட்டல்மிகுதிக்கண்
மேற்சென்றி டித்தற் பொருட்டு'

என்று தெய்வப் புலவர் திருவாய் மலர்ந்தருளிய வண்ணம் யாம் நெறியல்லாநெறி சென்றவழி எம்மைத் திருத்துவோரே எமக்குரிய ஆப்த நண்பர்களாவார்கள்.

சிதம்பரம்.

சென்னை உயர்தர நீதிமன்றத்தின் உத்திரவு படிக்கும் காலஞ் சென்ற ஸ்ரீமான் எஸ். வில்வநாத பிள்ளையவர்களின் உயில் படிக்கும் ஸ்ரீமான் எம். தியாகராஜ பிள்ளையவர்கள் ஆறுமுக நாவலர் அவர்களின் தர்ம ஸ்தாபனங்களுக்கும் தர்ம சொத்துக்களுக்கும் தர்மபாடசாலை முதலான இதர ஸ்தாபனங்களுக்கும் மானேஜர் ஸ்தானத்தை ஒப்புக்கொண்டுவிட்டார்.

ராமலிங்கம் பிள்ளை.

கும்பகோணம்

ஸ்ரீ காமாக்ஷி விலாச வாசக சாலை.

கும்பகோணம் விஸ்வகர்ம வியாபார கம்பெனி லிமிடெட் வைஸ் பிரசிடெண்டும் கே. வி. ஆர். ரும் மெம்பருமாகிய பிர்மஸ்ரீ பி. பெரியசாமி பத்தர் அவர்கள் இந்நகர் முனிசிபல் கௌன்சில் ஸ்தானத்திற்கு கவர்ன்மெண்டாரால் நாமினேசன் செய்யப்பட்டதை முன்னிட்டு 21-2-29 செவ்வாய்க்கிழமை மாலை 4 மணிக்கு மிஸ்டர் ஆர் நாகராஜன் கிருகத்தில் ஓர் சிற்றுண்டி விருந்து வாசகசாலை மெம்பர்களால் நடத்தப்பட்டது. அநேக பிரமுகர்கள் விஜயம் செய்திருந்தார்கள்.

காரியதரிசி.

திருநேல்வேலி

கோக்கிரகுளம் சகோதர ஐக்கிய சங்கம்.

ஷை சங்கத்தின் 21—2—28 கூட்டத்தின் 1 வது தீர்மானப்படி ராயல் கமிஷனுக்கு ஷை சங்கத்தினா மனப்பூர்வமாய் நல்வரவு கூறுவதாக தந்தி ஒன்று சர். ஜான் சைமன் அவர்களுக்கு 25—2—28 மாலை 7 மணிக்கு ஷை சங்கக் காரியதரிசியால் அனுப்பப்பட்டது.

ஷண்முகம், கௌரவ காரியதரிசி.

விபவ வருடத்திய சுயமரியாதைப் பஞ்சாங்கம்.

சென்ற வருடம் போலவே இவ்வருடமும் சுயமரியாதைப பஞ்சாங்கம் அச்சியற்றி வருகிறோம். பார்வைக்கு மிக்க அழகாக நாலு குவித வர்ணங்களில் சென்னை சோல்டன் கம்பெனியில் அச்சியற்றப் பெறுகின்றன. இதில் சித்திரை முதல் பங்குனி முடிய 12 மாதங்களுக்கும் பனிரண்டு தாள்கள் தனித்தனியே அச்சியற்றி நமது மாபெருந் தலைவர் வைக்கம் வீரமூர்த்தியின் பெரிய திருவுருவம் 6 அங்குல அளவில் அச்சியற்றிய நல்ல பளபளப்பான அட்டையின் கீழ் சேர்க்கப்பெற்றது. மேல அட்டையில் நமது இயக்கத்தின முக்கிய கொள்கைகளை அச்சியற்றி யிருப்பதோடு 12 மாதங்களிலும் சுயமரியாதை உணர்ச்சியை உண்டாக்ககூடிய வாக்கியங்களையும் சேர்த்திருக்கின்றோம். சென்ற வருடத்திய வாக்கியங்கள் முழுதும் எடுகைப்பெற்று இவ்வருடம் வெவ்வேறு வாக்கியங்களைப் பொறித்திருக்கின்றோம். வழக்கம் போலவே, தமிழ் தேதி, ஆங்கில தேதி, திதி, வாரம், நட்சத்திரம், அமிர்தாதி யோகங்கள், இராகு, குளிகை, வார சூலை முதலியவைகள், விரத நாட்கள், பண்டிகை முதலிய விசேஷ தினங்கள் யாவும் விளக்கமாக இப்பஞ்சாங்கத்தின் மூலமாய் நனகு தெரிந்து கொளளலாம். நமக்கு அதிக விலை அடக்குகிறது. ஆனாலும் சுயமரியாதைப் பிரசாரத்தின நோக்கமாக அணா இரண்டிற்கே கொடுக்க நிச்சயித்து விட்டோம். ஆங்காங்குள்ள நமது சுயமரியாதை வீரர்கள் வரவழைத்து தங்கள தங்கள் ஊர்களில் பரவச்செய்து பெரும் பலனடைய வேண்டுகின்றோம். 25—3—28-க்குள் கிடைகின்ற ஆர்டர்களுக்கு மட்டுமே காலண்டர்கள் அனுப்ப முடியும். விலை அணா 2. வி. பி. செலவு வேறு. கி. ஆ. பெ. விசுவநாத பிள்ளை,

மணிவாசகத் தமிழகம்,

திருச்சிராப்பள்ளி.

உயர்வான பனியன்கள்!   விலை மலிவு!   வெகுநாள் உழைப்பது!

- விரைவில் வாங்குங்கள்.

பெயருக்காகப் போலி பனியன்களை வாங்கி ஏமாறுதீர்கள்.

நமது நாட்டில் தொழிலனுபவ மிக்க தன வைசியர் ஒருவரின் நேரான மேற் பார்வையில் ஒழுங்காக நடைபெறும் தன வைசிய தொழிற்சாலை எமது ஸ்ரீ மீனாட்சி விலாஸ் நிட்டிங் பாக்டரி ஒன்றேயாகும். இதிலிருந்து விதவிதமான பனியன்கள் வெவ்வேறு அளவுகளில் கண் கவர் வனப்புடையனவாய் உறுதியும் சேர்த்தியுமிக்க நூல்களைக்கொண்டு தயார் செய்து விற்பனை செய்யப்பெறுகிறது. உடலின்பக்கவசத்தில் தையல் இல்லை. குறைந்த விலையில் சிறந்த பனியன்களை விரிவாக விற்பதே எமது நோக்கம். ஒருமுறை வரவழைத்து உபயோகித்துப் பார்ப்பின் உண்மை விளங்கும். உள் நாட்டிலும், மலாய் பர்மா முதலிய வெளி நாடுகளிலும் ஏராளமாக விற்பனையாகிறது. வியாபாரிகளுக்கும் மொத்தமாய் வாங்குபவர்களுக்கும் தக்க கமிஷன் கொடுக்கப் பெறும். ஆர்டர்கள் உடனுக்குடன் கவனித்து ஒழுங்காக நிறைவேற்றப்பெறும். ஆர்டர்கள் அனுப்புகிறவர்கள் பத்திரிகையைக் குறித்து எழுதுவதுடன் நூற்றுக்குப் பத்து வீதம் முன்பணம் அனுப்ப வேண்டும். வி. பி. சார்ஜ் பாக்கிங் சார்ஜ் பிரத்தியேகம்.

A/1 டைமண்ட் நிட் திக் பனியன்கள்.

24 இஞ்சு டஜன் 1-க்கு	ரூ. 4-2-0		30 இஞ்சு டஜன் 1-க்கு	ரூ. 6-0-0	
26 ,, ,,	ரூ. 4-8-0		32 ,, ,,	ரூ. 6-12-0	
28 ,, ,,	ரூ. 5-4-0		34 ,, ,,	ரூ. 7-8-0	

ஷை ரகங்களில் நைஸ் பனியன்கள் டஜன் 1-க்கு 12 அணா அதிகம். சாம்பிள் பனியன்களுக்கு வி. பி. சார்ஜ் பாக்கிங் சார்ஜ் இனாம். முழு விபரத்திற்கும் மானேஜருக்கு எழுதி தெரிந்து கொள்ளவும்.

சொந்தக்காரர்
வ. ராம. கு முத்து
முத்துக்கருப்பஞ் செட்டியார்,
தேவகோட்டை.

K. Meenakshisundaram Pillai,
for Manager
ஸ்ரீ மீனாக்ஷிவிலாஸ் நிட்டிங்பாக்டரி,
பெருந்துறை Perundurai (S. I. R.)

சுதேச காபி பௌடர் என்னும் ஆவாரம்பூ சூரணம்.

கர்ப்ப ஸ்திரீகளும, குழந்தைகளும், பாலூட்டுகிற ஸ்திரீகளும், மாதவிடாய் கண்டிருக்கிற ஸ்திரீகளும் காப்பி முதலிய உஷ்ண குணமுள்ள பானங்களை அருந்துவதைக் காட்டிலும் ஆவாரம்பூ சூரண பானத்தை அருந்துவது வெகு நனமை செய்யும். மற்றவர்களும் சாப்பிடலாம். சாப்பிடுவதற்கும மாதுரியமாயிருக்கும். ஒரு மண்டலததுககு ½ சேர் டின 1-க்கு ரூ. 0—9—0. அரை மண்டலத்துக்கு ¼ சேர் டின் ரூ. 0-5-0. கு. முத்துகுமாரசாமி பிள்ளை, c/o மீனும்பிகா போஜன சாலை, கச்சேரி வீதி, ஈரோடு.

பீடிகளில் சிறந்த பீடிகள் எது?

எடப்பாடி S. K. சபஹான்கான் சாயபு போட்டோ அடையாளமுள்ள ஜாடி & ஜர்தா பீடிகள்தான் சிறந்தது.

ஷை பீடிகளையே நாம உபயோகித்து வந்தால் மனோரம்யமும் உற்சாகமும் உண்டாவதுடன் அதிக பரிமளமாகவும இருக்கிறதாகையால் நண்பர்கள் அனைவரும் ஷை பீடிகளையே உபயோகப்படுத்த வேண்டுமென்றும் அதனால் சுகமடையலாமென்றும் தெரிவித்துக்கொள்கிறேன். து. அர்த்தநாரி செட்டி,

ஜலகண்டாபுரம்.

தேவை.

தஞ்சை தாலூகா போர்டு ஆண், பெண் பாடசாலைகளுக்குப் போதனா முறை பயிற்ற ஆண், பெண் உபாத்தியாயர்கள் தேவை.

சம்பளம் கீழ்க்கண்டபடி.

லோயர் கிரேட் உபாத்தியாயர்கள்		15 ½ 20
ஹயர் ,,	,,	20 ½ 25
செகண்டரி கிரேட்	,,	30 1 35
லோயர்கிரேட் உபாத்தியாயனிகள்		20 1 25
ஹயர் கிரேட்	,,	25 1 30

ஆசிரியர்கள் தங்கள் விண்ணப்பத்தில் வயது, ஆசிரியர் தொழிலில் தமக்குள்ள அனுபவம், தமது குலம் ஆகியவற்றைக் குறிப்பதோடு ஆசிரியர் அனுபவம், நடத்தை இவைகளைக் குறித்த நற்சாக்ஷிப் பத்திரங்களும் அனுப்பப்பட வேண்டும். விண்ணப்பங்கள் 23—3—28க்குள் அனுப்பப்பட வேண்டும்.

பார்ப்பனரல்லாதாருக்கு முதலில் உரிமை கொடுக்கப் படும்.

(ஒப்பம்) த. வே. உமாமகேஸ்வரம் பிள்ளை,

தாலூகா போர்டு தலைவர், தஞ்சாவூர்.

பீடோர் என்னும் சித்திவிநாயகபுரத்தில் சித்திவிநாயகர் கும்பாபிஷேகம்.

இப்பணியானது திரு ஷண்முகம் பிள்ளை அவர்களின் முயர்ச்சியால் தாப்பா சு. மு. கடைக்காரரின் பொருளுதவியாலும் டெலுக்கான் சன்சன் நி. அ. கடைக்காரரின் பொருளுதவியாலும் விமர்சையாக நடைபெற்றது. வெகு சிறப்பாக சுமார் 600 ஜனங்களுக்குமேல் அன்னமளிக்கப் பட்டது. அச்சமயம் திருவாளர்கள் சர்மா, ஈ. வெ. கிருஷ்ணசாமி நாயக்கரும் தேவாலயம், மத விஷயம், கல்வி, மதுவிலக்கு என்னும் விஷயமாக உபந்நியாசம் செய்தார்கள்.

திருவாளர் ஈ. வெ கிருஷ்ணசாமி நாயக்கர் அவர்களின் சொற்பொழிவின் சாரம்.

சகோதரர்களே!

இதுகாறும் நமது முன்னிலையில் திரு சர்மா அவர்கள் பேசி வந்த விஷயங்களில் முதலாவது விஷயம் தேவாலயம் என்பது பற்றியதாகும். தேவாலயம் என்னும் வடமொழி சொல்லுக்கு இறைவன் வசிக்கின்ற இடம் என்பொருள். இறைவன் எல்லாப் பொருள்களிலும் எல்லா விடங்களிலும் எல்லா காலங்களிலும் இடைவிடாது அவைகளின் நலத்துக்காக வசித்து வந்தாலும் சிலருடைய கொள்கைப்படி முக்கியமாக இரண்டு விடங்களில் வாசம் செய்கிறதாக சொல்லப்படுகிறது ஒன்று இயற்கைத் தேவாலயம், மற்றொன்று செயற்கை தேவாலயம். இயற்கை தேவாலயமாவது ஒவ்வொரு ஜீவன்களிலும் உள்ளும் புறம்புமாக புட்பத்தில் மணம் போலவும் மணியிலொளிபோலவும் வியாபித்து அவைகளின் காரியங்களைக் கவனித்து வருதலுக்காக வசிக்குமிடம். செயற்கைத் தேவாலயமாவது பரத்வம், வியூகம், விபவம், அந்தர்யாமித்வம், அர்ச்சாவதாரம் என்கிற ஐந்தில் ஒன்றாகிய அர்ச்சாவதாரமாம். அர்ச்சாவதாரமென்றால் வீடுகளிலும் கோவில்களிலும் கல், மண், மரம், உலோகம் துணி முதலிய பொருள்களால் சித்தரித்து விக்ரஹ ரூபமாகவும் பட ரூபமாகவும் சிவனுள்ளவர்களால் செய்யப்பட்டு அதில் எம்பெருமானை எழுந்தருளும்படி யோகாப்பியாசங்களால் கடவுளை யறிந்தவர்களால் தெய்வத்தை பிரதிஷ்டைசெய்வித்தலாம். பிரதிஷ்டையென்றால் பாதவத்திலிருக்கிற பகவானை ஐம்புலன்களையும் அடக்கி ஆளுய பெரியோர்கள் துதித்து தமது மனம் புத்தி சித்தம் என்பவைகளின் வழியால் அழைத்து பிம்பத்தில் இருத்தும்படி செய்வித்தலாம். இது மிகக்கஷ்டசாத்தியத்தாலும் திரவியசாத்யத்தாலும் தான் முடியத்தக்கது. இதில் திரவிய லோபமாவது மந்தாலோபமாவது கிஞ்சித்து நேர்ந்தாலும் அக் காரியம் செய்வித்தவர்க்கும் அவர்கள் கருதிய பலன்களை இழப்பதோடல்லாமல் மேல்கொண்டு பலவிதத் துன்பங்களையும் அநுபவிக்கத்தக்க கெடுதிகள் உண்டாக்கி விடுவதாக பிரதிஷ்டை செய்வதற்குறிய ஆகமங்கள் கூறுகின்றன. இத்தனை கஷ்டத்திற்கும் தப்பித்தவறி லட்சத்திற்கு ஒரு கோவிலாவது சரிவர கும்பாபிஷேகம் நடத்தி வைக்கத்தக்கவர்கள் கிடைத்துச்செய்து வைத்து விடுவதாக வைத்துக்கொண்டாலும் பிரதிஷ்டை கும்பாபிஷேகம் செய்த கோவில்களிலுள்ள பிம்பத்தில் பகவான் ப்ரத்யட்சமாக வாசம் செய்கிறார் என்று வைத்துக்கொண்டாலும் அவருடைய பெருமைக்கும் தன்மைக்கும் தக்கபடி ஆகமவிதிப்படி ஆராதனை நிவேதனம் உபசாரம் முதலியவைகளை மன மொழி மெய்களால் தவறுதல்கள் நேராதபடி நடத்திவரவேண்டும் அன்றோ! அவ்விதம் நாம் செய்கிறோமா? அல்லது செய்வோமா வென்பதை நமக்குள் நாமே ஆராய்ந்தால் தெரியாமற்போகாது. ஆனால் அதிலும் அதிக பலன் கிடைக்கக் கூடியதும் சிரமம் குறைந்தது மான ஆலயம் ஒன்றிருக்கிறது. அவைகளால் நாம் சுகம் அனுபவிக்கலாம். அது யெது வெனில் இயற்கைத் தேவாலயம் என்பது தான். அத்தேவாலயங்களை ப்ரதிஷ்டை செய்து வணங்கினால் அது நமக்கு வேண்டியபடி உபரிக்கும். நம்மோடு பேசும். நாம் சொல்வதைக் கேட்கும். நம் கேள்விகளுக்குப்பதில் சொல்லும். நமக்கு ஏவல் புரியும். நாம் செய்யும் தொண்டுகளை ஏற்று அதனின்பதுன்பங்களை நுகர்ந்து நமக்குச் சொல்லும். நமக்கு வேண்டிய பொருள்களை நேருக்கு நேரே கொடுக்கும். நாம் கொடுப்பதை நேருக்குநேரே நுகரும். இப்படி சர்வ சுலபமாக நமது புலன்களாலறிந்து சர்வ விதத்திலும் அநுபவ சாத்தியமானதும் கல், மண், சுண்ணாம்பு, மரம், இரும்பு முதலிய உலோகங்கள முதலியவைகளைக்கொண்டுசெய்யாமலும் யாவராலும் செய்யக் கூடாததுமான ஓர் அருமையான இயற்கைத் தேவாலயங்களை நமக்காக எம்பெருமான் கோடிக்கணக்காக தந்துதவி இருக்கிறான். அத்தகைபவைகளை நாம் ஆராதிப்போமாக. அவைகளை ஆராதிப்பதற்கு நமக்கு ஒரு விதமான செலவும் கிடையாது. மனதினாலும் மொழிகளாலும் சரீரத்தாலுமே இயன்றவரை செய்வதை உவகையோடு ஏற்று அதன் பலன்களை அந்த க்ஷணத்தில் தானே நமக்கு நல்கி நம்மை இன்புறச் செய்யும். அதுயாதெனில் ஒவ்வொரு ஜீவனோடு கூடிய பஞ்சபௌதீகமான ஒவ்வொரு சரீரமும் ஒவ்வொரு தேவாலயமாகும். அதில் வதியும் ஒவ்வொரு அந்தரான்மாவே இறைவனாவான். இவைகளில் வைத்து ஆறறிவு படைத்த மனிதப்பிறவி மிகவும் வழிபட மேலானது. இத்தகைய நமது நாட்டு ஏழைத்தொழிலாழமக்களான நடமாடும் தேவாலயங்கள் நம் நாட்டினின்றும் எங்கு நமது ஆராதனைக்கும் வழிபாட்டிற்குமாக நம் முன் விளங்குகின்றன. இவைகளுக்கு இவ்விடங்களில் நம்மாலும் பிறராலும் யாதொரு தீங்கு கள் நேராதபடிக்கும் ஒருவரை மற்றவர் தாழ்த்தவோ தாழ்ந்தவர்களாக மதிக்கவோ விடாமலும் நம்மாலியன்றவைகளைச்செய்து வந்தால் எண்ணிறந்த தேவாலயங்களைக்கட்டி கும்பாபிஷேகம் செய்வித்தவர்களாவோம் என்பது நிச்சயம். ஆகையால் சகோதரர்களே நாமெல்லோரும் இனியாவது இயற்கைத் தேவாலயங்களாகிற நமது ஏழைத் தொழிலாளச் சகோதரர்கள் விஷயமாக நமது முழுகவனத்தையும் செலுத்தக் கடமைப்பட்டிருக்கிறோம் என்பதை மறக்கக்கூடாதெனக்கேட்டுக்கொள்ளுகிறேன்.

நாம் நமது சகோதரர்களை எவ்வளக்கெவ்வளவு தாழ்த்திவருகிறோமோ அவ்வளவுக்கவ்வளவு நமது சகோதரர்கள் அந்நியமதப்ரவேசம் செய்கிறார்கள். இதற்கு அந்நிய மதத்தினரும் உதவி புரிய காத்திருக்கிறார்கள்.

மலாய்நாட்டு நிருபர்

தூத்துக்குடி ஆதிதிராவிட ஐக்கிய சங்கம்.

25—2—28 ல் கனம் ஏ. எம். ஆர். வில்சன் அவர்கள் தலைமையின் கீழ் சங்கத்தின் பொதுக் கூட்டம் நடைபெற்றது சுமார் 300 ஆதிதிராவிடர்கள் விஜயம் செய்திருந்தனர்.

ராயல் கமிஷனுக்கு ஆதிதிராவிடர்களுக்கு வேண்டிய நன்மைகளை குறித்து மகஜர் அனுப்ப தீர்மானிக்கப்பட்டது.

ஒரு நிருபர்.

வட ஆற்காடு ஜில்லா கூட்டுறவு சூபர்வைசர்களுக்கு பயிற்சி வகுப்பு.

இம்மாதம் 23, 24. (வியாழம், வெள்ளி) தேதிகளில் காவேரிப்பாக்கத்தில் சூபர்வைசர்களுக்கென பயிற்சி வகுப்பு ஒன்று நடை பெற்றது. முதல் நாள் இந்த ஜில்லா மேற்பார்வை கவுன்சில் தலைவர் திரு. கே. எம். சிங்காரவேலு முதலியார் அவர்களும், மறுநாள் ஜில்லா பாங்கி காரியதரிசியாய் பறைதார் திரு. வி. முருகேச முதலியார் அவர்களும் இவ் வகுப்புக்களை நடத்தினார்கள்.

பங்குபணம்—அதன் முக்கியமும், கடன்களை காரியங்களுக்குத் தக்கபடி கொடுத்து அவைகளை எந்த காரியங்களுக்கு வாங்குகிறார்களோ அதற்கு கடன்கள் உபயோகப் படுத்தப்படுகிறதா என்பதை ஆராய்ச்சி செய்தல், வசூல், விவசாய விஷயங்களுக்கு கடன் கொடுத்தல், கடன்களுக்கு காரணம் கண்டு தக்கவைகளுக்கு தவணைகொடுத்தல், குறகிய கால கடன்களை வேண்டும்பொழுது உதவுதால் ஏற்படக்கூடிய நன்மைகள், இதை ஜில்லாபாங்கியில் மூலமாக சாங்ஷன் பெற்றுக்கொண்டு அவ்வப்போது தருவித்துக்கொள்ளுவது என்ற விஷயங்கள் போதிக்கப்பட்டன. காலை நேரத்தில் டை விஷயங்கள் சம்மந்தப்பட்ட வரையில் போதிக்கப்பட்டதுடன் மாலை நேரங்களில் சூபர்வைசர்கள் தாமாக விஷயங்களைப் பற்றி சந்தேகமறப் பேசவும் அனுமதிக்கப்பட்டது. அல்லாமலும் மேற்பார்வை அறிக்கைகளில் அவரவர்கள் முக்கியமாய் எழுதவேண்டிய விஷயங்களைப்பற்றியும், கவனிக்கவேண்டிய கடமைகளைப்பற்றியும் போதிக்கப்பட்டது.

வகுப்பை நடத்த திரு. எம். ஜி. பத்தனுப முதலியார் அவர்கள் M. A. (Senior Inspector for non-Credit work) K. S. சுந்தரராமய்யா, எ. பி. தங்கவேலு முதலியார் (Inspectors of Co-operative Societies) அவர்களும் உதவி புரிந்தனர். ஜில்லாவிலுள்ள சூபர்வைசர்களில் 20 நபர்கள்வரை வகுப்பிற்கு வந்திருந்தார்கள்.

காரியதரிசி.

சென்னை வாசகசாலை சங்கத்தின் வேண்டுகோள்.

சென்ற டிசம்பரில் அகில இந்திய வாசகசாலைச் சங்கத்தார் மஹாநாட்டில் "ஸ்தலஸ்தாபனங்களும் முனிசிபாலிட்டியாரும் தம் தம் எல்லைக்குட்பட்ட எல்லா ஊர்களிலும் இலவச வாசகசாலைகள் நிர்மாணித்து நடத்த வேண்டுமென்று வற்புறுத்திக் கேட்டுக்கொள்ளுகிறது" என்றும் "அந்தந்த ஊர் பிரஜைகளும் ஜில்லா, தாலூகா, கிராம வாசகசாலைச் சங்கங்களை ஆரம்பித்து நடத்தி இவ்வியக்கத்தை வளர்க்க வேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறோம்" என்றும் தீர்மானித்ததற்கிணங்க சென்ற ஜனவரி மாதம் 30ந் தேதி மதராசில் 'மதராஸ் லைப்ரெரி அசோசியேஷன்' என்ற ஒரு வாசகசாலை பல பிரமுகர்களால் நிர்மாணிக்கப்பெற்று நிர்வாக உத்தியோகஸ்தர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டு நடந்து வருகிறது. ஆகவே நீங்களும் இவ்வித வாசகசாலைகள் உங்கள் சொந்த முயற்சியாலேனும், அல்லது ஸ்தலஸ்தாபனங்களின் உதவியாலேனும், நிர்மாணித்து நடத்த வேணுமாய்க் கேட்டுக்கொள்ளுகிறோம். அவ்வித வாசகசாலைகளுக்கு வேண்டிய புஸ்தகங்களின் பெயர், வாசகசாலையை நிர்வகிக்கும் முறை, அவைகளுக்கு ஸ்தலஸ்தாபனங்களிலிருந்து உதவிபெறும் வழி முதலானவைகளுக்கு எங்களுக்கு எழுதினால் நாங்கள் உதவிசெய்யத்தயாராயிருக்கிறோம்.

காரியதரிசி.

1928 1928

இந்துசமயக் காலண்டர்

ஒரே காலண்டரில் அழகான 14 படங்களுள்ளது!

ஒவ்வொரு படமும் புராணங்களில் சொல்லப்பட்டிருக்கும் தத்துவங்களை விளக்கிக் காட்டுவது.

நேர்த்தியான ஆர்ட் பேப்பரில் கண்ணாடி போடத் தகுந்ததாய் அச்சிடப்பட்டுள்ளது.

இக்காலண்டரில் அடங்கியுள்ள 14 படங்களின் விவரம்:—

1 திருமகள்
2 கலைமகள்
3 ஆண்டாள் சூடிப்பார்த்தல்
4 உமை சிவலிங்கத்தைத் தழுவியிருத்தல்
5 பார்வதி பரமேஸ்வரன்
6 மகாவிஷ்ணு
7 ஷண்முகம்
8 பாலகிருஷ்ணன்
9 இராதாகிருஷ்ணன்
10 சிவபெருமான் கங்கையைத் தரித்தல
11 முருகன் சிவபெருமானுக்கு உபதேசித் [தல்
12 காளிங்கமர்த்தனம்
13 துருவன் அருள்பெறுதல்
14 ஸ்ரீராமர் பட்டாபிஷேகம்

விலை அணா 8. தபாற்கூலி வேறு.

இம்பீரியல் டிரேடிங் கம்பெனி,

585, பைகிராப்ட் ரோட், திருவல்லிக்கேணி, சென்னை.

சேலம் முனிசிபல் உயர் தரக் கல்லூரியும் சில விஷமிகளின் கூற்றும்.

இச்சேலம் நகர பரிபாலன சபையின் ஆதரவில் பெரும்பான்மை பார்ப்பனரல்லாதார் பெரு மக்களின் பொருளுதவியால் சென்ற 65 ஆண்டுகளாக இக்கல்லூரி நடைபெற்று வருகிறது.

ஆனால் இதன் பலனை மட்டும் சிறு வகுப்பினர்களாகிய பார்ப்பனர்களே அடைந்து வந்தார்கள். சென்ற ஆண்டு வரையிலும் தலைமை ஆசிரியர்கள் முதற்கொண்டு எல்லா ஆசிரியர்களும் ஒன்றிரண்டுபேர் தவிர்த்துபார்ப்பனர்களாகவே இருந்து வந்தார்கள். அரசாங்கத்தார் ஏழை மக்களின் பரிதாபத்திற்கு இரங்கி அளிக்கப்படும் (ஸ்காலர்ஷிப்) உதவிச் சம்பளங்களும், அவ்வகுப்பு மாணவர்களே அடைந்து வந்தார்கள். இந்நிலையில் பார்ப்பனரல்லாதார் எவ்வளவு முன்னேற்ற மடைந்திருப்பார்கள் என்பதை வாசகர்களே ஊகித்துக் கொள்ளலாம். நற்காலமாக, சென்ற ஆண்டு நடந்த நகரசபைத்தலைவர் தேர்தலில் சுயமரியாதை வீரர் திரு. S. தம்மண்ண செட்டியார், B A B L. அவர்கள் பெருமித வாக்குகளால் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டார். அவரும் தம் தலைவர் பதவி ஏற்று பார்ப்பனரல்லாதாருக்கு பல வகையிலும் நன்மை புரிந்து வருகிறார். கல்லூரியில் காலி ஏற்பட்ட எல்லா ஆசிரிய ஸ்தானங்களுக்கும் பார்ப்பனரல்லாதார்களையே நியமித்தனர். சென்ற ஆண்டு பென்ஷன்பெற்று விலகின கல்லூரித் தலைவர் திரு L. S. நாராயணய்யர் B. A. என்ற பார்ப்பனருக்கு பதிலாக வாணியம்பாடி இஸ்லாமியா காலேஜில் தலைவராய் சிலகாலம் இருந்த திரு: A. ராமசாமி கவுண்டர் M.A L.T. என்ற பார்ப்பனரல்லாத பேரறிஞரை தலைவராக நியமித்தனர்.

இதைக் கண்டு மனம்பொறாத பார்ப்பனர்கள் இவ்வளவு காலம் நமதே என்று அனுபவிச்சுவந்த ஓர் பெருங் கோட்டையை பார்ப்பனரல்லாதாருக்கு விட்டு விட்டோமே என்று மனம்புழுங்கி பலவித இடுக்கண்களும சூழ்ச்சிகளும் செய்த வண்ணமாய் இருக்கிறார்கள். சின்னாட்களுக்கு முன்பு கலலூரித் தலைவர் அவர்கள் கவர்ண்மெண்டு G. O. படி பள்ளி மாணவர்கள் ராஜீய விஷயங்களில் கலக்கக்கூடாது என்ற உத்திரவு ஒன்றை பிறப்பித்தார். இவ்வுத்தரவைக்கொண்டு இநநகரில் தேசியத் தலைவர்கள் என்று சொல்லி பட்டாங்கடித்துத் திரியும் சுயநலமே உருவாய் வந்த சில பார்ப்பனர்களும் அவர்கள் வால் பற்றித் திரியும் சில பார்ப்பனரல்லாதார்களும் பொது ஜனங்களுக்கும் பள்ளி மாணவர்களுக்கும் பார்ப்பனரல்லாத கல்லூரித் தலைவர்பாலும் அவரை நியமித்த நகரசபைத் தலைவர்பாலும் வெறுப்பு ஏற்படும்படி திரை மறைவில் நின்று பலவித சூழ்ச்சிகள் செய்து வருகின்றார்கள்.

பார்த்தீர்களா! இரகசிய நூல் படித்தீர்களா!!

ஹிப்னாடிஸ மெஸ்மரிஸ மென்னும்

மனோவசிய ரகசிய சாஸ்திரம்.

இப்புத்தகம் ஆங்கில நாட்டார் செய்த அனுபவ மடைந்தது. இதில் தூங்காமல் தூங்குதல், தூக்கத்திலிருப்பவரைப் பலவித வேலை செய்வித்தல், பிறரை வசியப்படுத்தல், புலி முதலிய மிருகங்களைத் தன் வயப்படுத்தல், பர சங்கதி அறிதல், மருந்தில்லாமல் நோய் தீர்த்தல் முதலிய பல ரகசிய மெஸ்மரிஸ சாஸ்திரம் சித்திரப் படங்களுடன் அடங்கியிருக்கிறது. விலை ரூ. 1—8—0. ஸ்ரீ பாரதி புஸ்தகசாலை, சூலே போஸ்டு, மதராஸ்.

இனம்! 1928 வருஷ காலண்டர்!! இனம்!!!

கட்டி வெள்ளி நகைகள் சுத்தமானவேலை.

எங்கள் கம்பெனியில் உங்களுக்கு வேண்டிய முரசுதுத்தி ஒத்தை இரட்டை கெங்காதரக்கொடி, முருகுசேயின், புறாகூடு புஞ்சன்னடை, சாதாசெயின், கைகோர்வை, அரணாக்கொடிகளும், இமிடேஷன் பட்டைகெப்பு கம்மல் கடுக்கன், தோடு, மோதிரம், மூக்குத்தி, வளையல்களும், இன்னும் இதில் காணாத வெள்ளி, பவுன், சகலவிதமான நகைகளும் இருக்கிறது. வேண்டுவோர் கீழ்கண்ட விலாசத்திற்கு எழுதினால் விலைவிபரம் தெரிவிக்கப்படும்.

விலாசம்:— வி. இ. ரத்தினசபாபதி அண்டு கம்பெனி.

சராப் அண்டு ஜவுளி வியாபாரம். குகை, சேலம். (S India.)

சில பார்ப்பன நகரசபை அங்கத்தினர்கள் இவ்வுத்திரவைப்பற்றியும் புதிதாக நியமிக்கப்பட்ட பார்ப்பனரல்லாத ஆசிரியர்களைப் பற்றியும் புதிய பார்ப்பனரல்லாத கல்லூரித் தலைவரைப்பற்றியும் அவர்கள் எந்தயோக்கியதையில் எந்த வகையில் நியமிக்கப்பட்டார்கள் என்பது போன்ற பல கேள்விகள் கவுன்சிலுக்கு அனுப்பியிருப்பதாகவும் இதற்கும் சில பார்ப்பனரல்லாத கவுன்சிலர்கள் துணை நின்றிருக்கிறார்கள் என்பதாகவும் வதந்தி உலாவுகிறது.

இவ்வளவிற்கும் பார்ப்பனர்களின் உள்ளெண்ணம் யாது என்று யோசிப்போமானால் தெள்ளிதின் புலப்படும். ஓர் பார்ப்பனரல்லாதார் ஒருவர் கல்லூரித்தலைவராக வந்து விட்டனரே! இனி தம் வகுப்பினர்கள் ஏகபோகமாய் அனுபவித்து வந்த எல்லா நலன்களும் வேறு வகுப்பினர்கள் அடையக்காலம வந்துவிட்டதே என்ற பொறாமையும் வயிற்றெரிச்சலுமேயல்லாது வேறொன்றுமில்லை. இதே உத்திரவை ஓர் பார்ப்பனர் (பிரின்ஸிபாலாயிருந்து) தலைவராயிருந்து பிறப்பித்திருந்தாரானல் இப்பார்ப்பனர்கள் வாய் திறந்திருப்பார்களா? பார்ப்பனர்களுக்கு துணைபோகும் பார்ப்பனரல்லாத நகரசபை அங்கத்தினர்களே! பார்ப்பனரல்லாதார்களே? இததனைவருஷகாலமாய் இருந்து ஆணடு அனுபவித்து வந்த பார்ப்பன ஆசிரியர்களைக் குறித்து இது கால பரியந்தம் எந்தப் பார்ப்பானவது வாய் திறந்திருப்பானு? அவர்கள் ஜாதி அபிமானததையும ஒற்றுமையையும் பாருங்கள் ஒரு பார்ப்பனரல்லாதார் வந்து விட்டனரே என்று என்ன இடி முழக்கம் செய்கிறார்கள். ஆகையால் பார்ப்பனரல்லாத நகரசபை அங்கத்தினர்களே! உண்மை உணர்ந்து நம் மக்கள் பால் சேர்ந்து நம்மக்களுக்கு வேண்டிய நன்மையைச் செய்யுங்கள். பார்ப்பனர்கள் பால் சேர்ந்து நம மக்களை நாமே கெடுத்துக்கொள்ளவேண்டாம்.கே.கிருஷ்ணசாமி செட்டி.

மலாய்நாட்டில் ‘குடி அரசு’ கிடைக்கும் இடங்கள்.

சிங்கப்பூர்.

1. பிரிட்டிஷ் & அமரிகன் நியூஸ் ஏஜன்ஸி
6, பேட்ரி ரோட்டு.
2. பெடரல் ரப்பர் ஸ்டேம்பு கம்பெனி.
3. குணம் மெடிகல் & நாவல்டீஸ் ஸ்டோர்
178, சிலிகி ரோட்டு.

கோலாலம்பூர்.

1. M. S. வடிவேலு பிள்ளை,
86, அம்பேங் வீதி.
2. விஸ்வநாத புக் டிபோ,
நெ. 9, பிரிக்பீல்டு ரோட்டு.
3. பெடரல் ரப்பர் ஸ்டாம்பு கம்பெனி.
4. M. P. L. பழனியப்ப செட்டியார்.
சரஸ்வதி விலாஸ்,
98, அம்பேங் வீதி.
5. V. S. லக்ஷமண செட்டியார்,
ஜெனரல் மர்ச்சண்டு,
14, ஸ்டேஷன் ரோட்டு,
செண்டல்.

ஜோகூர்பாரு.

1. சென்ட்ரல் ஸ்டோர்,
61, ஜாலன் இப்ராஹிம்.

பினாங்

1. பெடரல் ரப்பர் ஸ்டாம்பு கம்பெனி.

ஈப்போ.

1. பெடரல் ரப்பர் ஸ்டாம்பு கம்பெனி.

கீழ்கண்ட ஊர்களில் ரயில்வே ஸ்டேஷன் புக்ஸ்டால்களிலும் கிடைக்கும்.

1. பாரிபந்தர். 2. டாபா ரோட்டு. 3. சிரம்பான். 4. கெலாங். 5. மலாக்கா.

அறமும் கடவுள் வழிபாடும்.

நப்பு அறம்

நமது நாட்டுச் செல்வர்கள் ஒருங்கு கூடி நாட்டிலுள்ள ஏழைகளின் வறுமையைத் தொலைக்க முயலுவதில்லை. 'வறியார்க்கு ஒன்று ஈவதே ஈகை' என்று திருவள்ளுவ நாயனார் கூறியிருப்பதும், தொழில் செய்யத் திறமற்றவர்களுக்கே மேலும் மேலும் பணம் கொடுக்கப்படுகின்றது. நமது நாடுகளிலுள்ள சத்திரங்களில் ஒரு வகைச் சோம்பேறி மரபினர்க்கே விலாப்புடைக்கச் சோறிடப்படுகின்றது.

வேண்டுவார்க்கு வேண்டியதே ஈயற் பாலது. வேலையில்லாதவர்கட்கு வேலை கொடுக்க வேண்டும். வீடு இல்லாதவர்கட்கு வீடு கொடுக்கவேண்டும். உணவு இல்லாதவர்கட்கு உணவு கொடுக்கவேண்டும். இவையெல்லாம் உடையவர் காலில் பணத்தைக் குவித்தால் அவர்கள் யாதுதான் செய்வார்கள்! பணம் மிகுந்து அவர்கள் தப்ப வழிகளில் நடந்து தமக்குப் பணங் கொடுத்தவர்களுக்கும் பாவத்தையே விளைக்கிறார்கள்.

சிறந்த வழிபாடு

நமது சமயத்திலே அளவிறந்த பணம் ஆலயங்கள் பொருட்டுச் செலவாகின்றது. அஃது அறிவை வளர்ப்பதற்குப் பயன்படாமல் மூட நம்பிக்கையை மிகுதிப்படுத்தவே பயன் படுகின்றது. பிற நாடுகளில் சமயத்தின் பெயரால் எத்தனையோ அற நிலையங்கள் பொது நலத்தின் பொருட்டு இனிதாக அமைக்கப்பட்டுள்ளன. நம்முடைய நாட்டிலும் அவை நன்கமைய வேண்டும்.

கடவுளுடைய திருமேனிக்கு அபிஷேகங் காட்டலை செய்வதொன்றுமே கடவுளுக்குச் செய்யும் வழிபாடென்று நம்மவருட் பலர் கருதியிருக்கின்றனர். ஆனால் கடவுளின் திருப்பெயரால் பிற உயிர்களுக்கு நன்மை செய்தலே சிறந்த வழிபாடென்று அறிவுடையோர் கருதுவர்.

நோயினால் வருந்துகின்றவர்களும் எண்ணிய காரியம் முடிக்க விரும்புகின்றவர்களும், கடவுளுக்கு நன்றி செய்யக் கருதினால் கடவுள் பெயராலே ஏழைகளுக்கு உண்டி, உறையுள், உடை, மருந்து முதலியன ஈவதாகவும் பலவகைக் கல்விகளும் பயிற்றுவிப்பதாகவும் நேர்ந்து கொள்ளுதல் நலம்:

சிறந்த அறம்

இவ்வாறே பெருந் தொகைகளை அறத்திற்கென்று எடுத்துவைப்பவர்கள் அநாதைக் கல்விச்சாலை, நூலாராய்ச்சிக்கழகம், ஆங்கில மொழி பெயர்ப்புக் கழகம், புத்தகசாலை, அச்சியந்திரசாலை, பத்திரிகைச்சாலை, கைத்தொழிற் கல்விச்சாலை, ஆதரவில்லார்க்கு வீடு அமைத்தல், இராப்பள்ளிக்கூடம், பிராமணரல்லாதவழிப்போக்கர்க்குத் தங்குமிடம், பிராமணல்லாத மாணவர்க்கு விடுதி, தாழ்ந்தமக்கட்கு இராப்பள்ளிக்கூடம், வேலையில்லாதார்க்கு வேலை கொடுக்குமிடம், உணவும் நீரும் இல்லாத இடங்களில் அவை தரும் நிலையங்கள். உடல் நலம்பாதுகாத்தற்குரிய உடற்பயிற்சி இடங்கள் பொது நலத்திற்குரிய பூஞ்சோலைகள் முதலாய இவைகட்கே பெரிதும் பயனபடுத்த வேண்டும்.

சுருக்கமாகக் கூறினால், பொதுவாக எல்லா மக்கட்கும் சிறப்பாக ஏழைகட்கும் உடல் நலம் மன நலம் உயிர் நலம் என்பவை நன்கமைந்து தழைத்தோங்குதற்குரிய அற முயற்சிகளுக்கே அறஞ்செய்வாரது செல்வம் பயன்பட வேண்டும் சோம்பேறிகளுக்கும் ஒரு குலத்தார்க்கும் பயன்படும் தப்பறங்களும் காரணமில்லாமலும் நினைத்த பயன் இல்லாமலும் நிகழும் வீண் ஆரவாரச் செலவுகளும் அறவே ஒழிக்கப்படல்வேண்டும்.

ஆயிரக்கணக்கான குஷ்டரோகிகளை குணமாக்கினவர்!
உலகப்பிரசித்திபெற்ற பரம்பரை வைத்தியர்!!
வைத்திய ஆசிரியர் பட்டம் பெற்றவர்!!!
அநேக டாக்டர்களாலும், பல பிரபுக்களாலும் நன்கு மதிக்கப்பட்டது. சகல வியாதிகளுக்கும் கைகண்ட

பழநி சி. எம். சாமி முதல் நெ.

குருசாம்பர பஸ்பம்.

இது அபார சக்தி வாய்ந்தது. குஷ்டம், மேகம், ரணம், பித்தம், சூலை, கிரந்தி, மசமசப்பு, படர்தாமரை, சடிப்புகள், வியாதி, குழிப்புண், பவுத்திரம், கண்டமாலை முதலிய சகல வியாதிகளும் கண்டிப்பாய் தீரும். வி. பி. வேறு.

100 வேளை பஸ்பம் அனுபானத்துடன் ரூ. 50
50 வேளை ரூ 25. ஏழைகளுக்கு பாதி விலை.

என் கடையிலிருக்கக்கூடிய ஒரு பையனுக்கு 2, 3 வருஷமாயிருந்த குஷ்டரோகப் புண்கள் எல்லாம் தங்கள் குருசாம்பர பஸ்பத்தால் பூர்ணகுணமாயிற்று.

K. K. பக்கிரி முகமது காப்பர் F. M. S. 12—8—27.

தாதுபுஷ்டிக்கு நிகரற்ற பழநி சி. எம். சாமி,

மன்மத கோலாகல குளிகை.

பரிசைக்கும் பலனுக்கும் உத்திரவாதம்

தாதுபுஷ்டிக்கு இது நிகரற்றது. இதற்கு நிகரான மருந்து புவியிலெங்குமில்லை. ஒரே குளிகையில் பரிக்ஷிக்கலாம். இல் வாழ்வில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத் தருவதில் இதற்கு மிஞ்சின ஔஷதமில்லை. 120 குளிகை விலை ரூ. 10. 60 குளிகை ரூ. 5. மாதிரிக்கு 20 குளிகை ரூ. 2. வி. பி சார்ஜ் வேறு.

ஏராளமான நற்சாட்சிகளையும் பெரிய அபிஸர்களின் நற்சாட்சிகளையும் கேட்லாக்கில் பார்க்கலாம்.

சித்த ஆயுள்வேத வைத்திய ஆசிரியர். C. மலையப்பசாமி. நித்தியானந்தவைத்திய சாலை, பழனி

சென்னை பிராஞ்சு ஆபீஸ்:- முருகன் ஏஜன்ஸி, 43 அரமனைக்காரத் தெரு, ஜி. டி. சென்னை.

கபலத்திற்சேற்ற நூல்! காதலர் தேடும் நூல்!!

இல்வாழ்க்கையின் இரகசியங்கள்.

சித்திரப் படங்களுள்ளது. விலை ரூ. 2.

நாணம், காதல், காமம், கலியாணம், வாழ்க்கை, விநோதங்கள், தம்பதிகளும், சமூகமும், கர்ப்பத்துக்கு முன், கர்ப்பத்துக்குப் பின், மனம்போல் மக்களைப் பெறும் வழி, ஆண் மலடு, பெண் மலடு, கருத்தரித்தலைக் குறைத்தல் இவை போன்ற அநேக விஷயங்கள் விளக்கமாகக் கூறப்பட்டிருக்கின்றன. இதுவரை 10,000 பிரதிகள் விற்பனையாகி யிருக்கின்றன ஒரே சமயத்தில் இரண்டு காப்பிகள் வாங்கினால் தபாற்செலவில்லை. உடனே எழுதுங்கள்.

வாசன் புத்தகசாலை, 97, அன்னைப் பிள்ளைத் தெரு, ஜி. டி. மதராஸ்,

இக்கொள்கையை முதலில் அறிஞர்கள் கைப்பற்றிப் பொது மக்கள் மனத்திலும் பதிப்பிக்க வேண்டும். நமது தென்றமிழ் நாட்டுச் செல்வரும் கலைஞரும் ஒருங்கு கலந்து அறிவை வளர்த்து யாவர்க்கும் பயன்தரும் நல்லறத்தையும் அருள் ஒழுக்கத்தையும் மக்கள்மாட்டுப் பேரன்பினையும் நிலைபெறச் செய்து தமிழர்க்குப் புத்துயிரளிக்கச் செய்யுமாறு திருவருளை மனமொழி மெய்களால் வழுத்துகின்றேன்,

செ. ரெ. சேகரம்,

3ம் பக்கத் தொடர்ச்சி

கையில் வீரியம் வெளிப்பட அதை கொள்ளோடு கலக்கி குதிரைக்கு வைக்க குதிரை அஸ்வத்தாமாவைப்பெற்றது. அவரே பாரதத்திலுள்ள முக்கிய புருஷர்களில் ஒருவர். அந்த கதையே ஐந்தாம் வேதம். இப்பேர்ப்பட்ட கதைகளும் அதைச்சார்ந்த இதிகாச மத கிரந்தங்களும் எரிக்கப்பட்டாலென்ன? விட்டுவிட்டாலென்ன இந்தக் கதைகளை பெருமையாகவுடைய எந்தக் கடவுளும் ஒருகாலம் இல்லாவிட்டாலும் இன்னொரு காலத்திலாவது இழிவடைந்து தானே தீரவேண்டும். தென் தேசத்துத் தமிழன் எவ்வளவு பெரிய சைவனாகவோ வைணவனாகவோ இருந்தாலும் அவன் தாசி மகன் அடிமை கூலி என்றே எழுதி வைத்திருக்கிறது. எவ்வளவு சிவவிஷ்ணு பக்திமானாகவே யிருந்தாலும் அவன் ஆசாரமற்றவன ஒழுக்கமில்லாதவன் கண்டதைப்புசிப்போன் என்றேபாரதத்திலெழுதியிருக்கிறது. இதை ஒத்துக்கொண்டிருக்கிறவர்களிடம் எங்களுக்கு யாதொரு வித தர்க்கமும் இல்லை இப்படி எழுதியிருக்கப்பட்ட புஸ்தகங்கள் ஒழியவேண்டுமென்று நாங்கள் சொல்லுவதை ஒத்துக்கொள்ளாதவர்களுக்கு எங்களிடம் பகையுமில்லை இதற்கு எதிர் பிரசாரம் செய்யும் 'தமிழ்நாடு'ம் வெளிப்படையாய் இவைகளை ஒப்புக்கொள்வதாயிருந்தால நமக்கு அதனிடத்தில் தகராறில்லை.

9-ம் பதிப்பு! வெளி வந்து விட்டது 9-ம் பதிப்பு!!

ஆங்கில ஆசான் (ஒன்பதாம் பதிப்பு)

தமிழ் நாட்டில் சுமார் 2,50,000 இரண்டு லட்சத்து ஐம்பதினாயிரம் ஜனங்களுக்குச் சுலபமாய் இங்கிலீஷ் கற்றுக்கொடுத்ததும், இதைப்போன்ற அநேக புஸ்தகங்கள் பின்னால பணம் பறிக்கும்பொருட்டு அநேகரால் தயார் செய்யப்பட்டாலும் முதன் முதல் வெளிவந்ததும், விகரற்றதும், நற்பியாதியும் ஏராளமான நற்சாட்சிப் பத்திரங்கள் பெற்றதும் சென்னை சட்டசபை வித்யா இலாகா மந்திரி அவர்களால் நன்கு மதிக்கப்பட்டு அவரிடமிருந்து உயர்ந்த நற்சாக்ஷிப் பத்திரம் வாங்கப்பட்டதுமான எமது ரிஜிஸ்டர்டு லேடி டிரேட்மார்க் போட்டுள்ள, [illegible]

ஆங்கில ஆசான் என்ற பெயர் பார்த்தும், இப்படத்தில் காட்டியுள்ள லேடி டிரேட்மார்க் இருக்கிறதா வென்று கவனித்தும் புத்தகம் வாங்குங்கள்.

800 பக்கம் முழு காலிகோ பயின்டுவிலை ரு. 2—0—0
வி. பி. தபால் செலவு அணா 0—8—0

தி. இராஜகோபால் முதலியார், 302 தங்கசாலைத் தெரு, மதராஸ்

மதுரை எலெக்ட்ரிக் கம்பெனி Ltd

ஷேர் 1-க்கு ரூ. 10.

தயவு செய்து ஷை கம்பெனியில் பங்குகள் எடுத்துக்கொள்ளுங்கள். மிகவும் லாபகரமானது. பிராஸ்பக்ட்டஸ்களுக்கும் விண்ணப்ப பாரங்களுக்கும் எழுதுங்கள்.

"லையன் பிராண்ட் சுத்தமான காப்பித்தூள்"

மெஷின்களினால் தயார்செய்தது. உலகப் பிரசித்திபெற்றது.
மிக உயர்ந்தது. சுகந்த வாசனையுடையது. ருசிகரமானது.
சூபர்பைன் புரு லையன் காப்பித்தூள் 7 பவுன் டின் 1-க்கு ரூ. 10—4—0.
,, ½ பவுன் டின் 1-க்கு 6—4—0. ,, 1 பவுன் டின் 6-க்கு 10—0—0.
வி. பி. தபால் அண்டு பாக்கிங் சார்ஜ் இனம்.

எங்களிடம் இன்னும் பல ரகங்கள் 1/8, 1/4, 1/2, 1, 2, 4, 7, 14, 28, 56 பவுன் டின்களில் பாக்செய்து மொத்தத்திலும் சில்லரையிலும் விலை சரசமாய் கிடைக்கும். விபரங்களடங்கிய விலை ஜாப்தாவிற்கு உடனே எழுதுங்கள்.

லையன் பிராண்ட் காப்பி மான்யூ பாக்சரிங் கம்பெனி,
கண்ணங் குறிச்சி P.O. (சேலம் ஜில்லா).

அறிக்கை.

ஜவுளி ஜரிகை வியாபாரிகளுக்கு

எங்களிடம் பிரான்சி 8 லடி ரங்குள்ள ஜரிகை மார்க்குகளும் பாம்பே குவாலிடி 8 லடி ரங்கு சரிகை மார்க்குகளும் சூரத்பட்டு கயிர்கட்டின அதிக ரங்குள்ள கம்பி ரங்குகள் மார்க்குகள் தயாரிலிருக்கிறது இத்துடன் உள்ளூரில் தயாராகும்படியான ஜவுளி தினுசுகளில் வெள்ளை 100 கெம்பர் முதல் 200 கெம்பர் வரை நூல்களில் 5, 6 முழம் சதுரம் ஜரிகை குமால்களும் ஷை கெம்பர்களில் 2½ முழம் அகலம் 6 முழம் பலவிதமான நவீன கொடி பேட் ரகங்களில் ஜரிகை துப்பட்டாக்களும் தனிப்பட்டும், பட்டும் நூலும் கலந்த பலவிதமான இங்கிலீஷ் பேன்ஸி சிகப்பு ரோஸ் கலர்களில் 5 அகலம் 18 முழம் நீளம் பலவிதமான பேட்களையும் ஜரிகை முந்தாணியுள்ள சேலை ரகங்களும் ஷை கண்ட ரகங்களில் 6 முழம் ரவிக்கை தினுசுகளும் பேட்டா தினுசுகளும் தயாரிலிருப்பதால் தேவையுள்ளவர்கள் எழுதினால் விலை ஜாப்தா அனுப்பப்படும்.

சி. லிங்கி செட்டி எஸ். வெங்கிட்டராம செட்டி,
ஜவுளி அண்டு ஜரிகை வியாபாரம், கோயமுத்தூர்.

டிடக்டாஸ்
அல்லது
துப்பு இரகசியம் அறியும் கருவி.

இதன் உபயோகம் யாதெனில் இருப்பிடத்திலிருந்தே உம்முடைய காதலியையும் அவள் செய்யும் காரியங்களையும் அவள் அறிந்து கொள்ளாமலேயே இதன்மூலமாய்ப் பார்க்கலாம். உம்முடைய பின்னும் உமக்குத் தெரியாமல் நடக்கிறதை ஏககாலத்தில் இரண்டையும் இதன் மூலமாகக் கண்டுகொள்ளலாம். உமக்குத் தெரியாமல் உம்மைப்பின்தொடர்ந்து வருபவரை நீர் திரும்பிப்பார்க்காமலே இதன் மூலமாய்க் கவனித்துக்கொள்ளலாம். இன்னும் பலவித இரகசியங்களை இதன் மூலமாய் ஒருவரும் தெரிந்துகொள்ளாமல் கண்டு பிடிக்கலாம்.

இத்துடன் பல கலர்களால்தயாரித்த படுக்கை அறையின் 4 அழகிய போட்டோ படங்களுடன் ஷை கருவி விலை ரூபா 2 தான்.

மலாய் நாடுகளுக்கு முன்பணம் வந்தாலன்றிக் கண்டிப்பாய் வி. பி. யில அனுப்பமுடியாது.

பாரிஸ் எம்போரியம் ஜி. டி. மதராஸ்.

பெண்களுக்கு அழகு.

உயர்ந்த மல்லில் பச்சை, புளு, வயலெட், கருப்பு, கெம்பு, ஷைப் கலர்கள், கெட்டிச்சாயம்: பளபளப்பான வசீகரத் தோற்ற முள்ளது.

18 மு. x 48 இஞ்சு கலர் புடவை ரூ. 4—4—0
ஷை சன்னடி ,, ரூ. 4–12—0
18 மு. x 44 இஞ்சு கலர் புடவை ரூ. 3—8—0
ஷை சன்னடி ,, ரூ. 3–12—0

புதிய ஜவுளி கேடலாக் இனம்!
Te Madura Oriental Trading Co,.
Laxmi Cloth Store, MADURA.

அநேக காட்சிகளில் பொன், வெள்ளி மெடல்கள் பெற்ற

விதைகள் செடிகள்.

3 வருஷ வயதுள்ள ஒட்டுமாங்கன்றுகள் 3 அடி உயரமுள்ள செடி 1-க்கு அணா 8 முதல் அணா 12. ரோஸ், குரோட்டன்ஸ், ஒட்டுப்பழச் செடிகள், கொய்யா, மாதுளை, எலுமிச்சை, ஆரஞ்சி, கேட்லாக் இனம். இங்கிலீஷ் காய்கறி, புஷ்ப விதைகள்:— 20 சாம்பிள் பாக்கெட் ரு. 2. 10பாக்கெட் 1—4. நாட்டுக் காய்கறி 20 பாக்கெட் ரூ. 2—8. ச. கொ. இ. காதர்மீரா சாயபு,

ஹெட்னர்சன் தோட்டம், சேலம்.

மூன்றுமாதத்தில் மோட்டார் ஓட்ட கற்றுக் கொள்ளலாம்

(1916 ௵ ஸ்தாபிக்கப்பட்டது)

மோட்டார் வண்டிகளை ஓட்டவும் பிரிக்கவும் பூட்டவும் கற்றுக்கொடுக்கப்படும். தேர்ச்சியடைந்தபின் கவர்மென்ட் லைசென்ஸ் வாங்கிக்கொடுப்போம். மற்ற விபரத்திற்கு நேரில் எழுதவும்.

மதராஸ் தென்னிந்தியா மோட்டார் இஞ்சினீயரிங்வொர்க்ஸ்,
மைலாப்பூர், மதராஸ்.

ஆநந்த குண போதினி.

இரண்டாம் வருடம்.

இது போன்ற நவீன மாதாந்தர பத்திரிகை இது வரை வெளிவரவில்லை இது அழகானதும் சிறந்ததுமான வழியில் ஆங்கிலமாத பத்திரிகைகளை யொப்ப உயர்தரமாய் நடத்தப்படுகிறது. எல்லாம் கருத்து, எல்லாம் கற்பு, எல்லாம் அநுபவம், எல்லாம் புத்தி போதனைகளே. மனதும் சிந்தைக்கினிய, செவிக்கினிய அலங்கார வசன மழை. ஒவ்வொரு மாதமும் 56 பக்கங்கள் கொண்ட பெரிய பத்திரிக்கை இது ஒன்றேதான். 5000-சந்தாதாரர்கள்உள்ளது. வருடசந்தா ரூ.1, வெளி நாடு ரூ. 1—4—0 மாதிரிக்கு இனாம். இது பெரிய ஆச்சரி. உடனே எழுதுங்கள்.

'ஆநந்த குண போதினி' ஆபீஸ்

302, தங்கசாலை வீதி, மதராஸ்.

சிரிப்பு! சிரித்து சிரித்து வயிறு சிரிப்பு!!

புண்ணாய் விட்டதென்று ஒருவர் எழுதுகிறார்.

முத்துமாமா.

நேயர்களே! இந்தக் கதையைப் படித்து விட்டால் நீங்கள் சாப்பிடும் போதும் சிரிப்பீர்கள். தூங்கும்போதுங்கூட சிரிப்பீர்கள். வேண்டுவோர் $4\frac{1}{2}$ அணா ஸ்டாம்பு அனுப்பவும். எந்த தேசத்து ஸ்டாம்பாயிருந்தாலும் அனுப்பலாம்.

வாஸன் புஸ்தகசாலை,

97, அன்னபிள்ளைத் தெரு, மதராஸ்.

இரகசியம் வெளியாய் விட்டது

இலவாழ்க்கையின் இரகசியம்	ரூ. ...	2	0
ஸ்திரீ புருஷ இரகசியம்	,, ...	1	0
இரதி மதன சிங்கார இரசியம்	,, ...	0	12
மணவாழ்க்கையின் மர்மம்	,, ...	2	4
சதிபதிகளின் மர்மம்	,, ...	1	0
சரீர மர்ம சாஸ்திரம்	,, ...	1	0
கொக்கோகம்	,, ...	1	0
மதன ரதி ரகசியம்	,, ...	1	0

எஸ்ஸி. ஆர். பகவன் அண்டு கம்பெனி,

மிண்டு பில்டிங்ஸ், மதராஸ்.

ஞான உதயம்.

ஆயத்தம், சொற்பம்,, முந்துங்கள்,,,

(இது ஓர் அநுதின தியானம்)

பக்தர் அங்கீகரித்தது.

பாலர்முதல் விருத்தர்வரை சகலரும் தியானித்து தெய்வ கிருபா கடாக்ஷத்தைப் பெறலாம். பக்திரச இனியவாக்கியங்களாலானது. பெருந்துக்கங்களை மாற்றியது. இதன்பலன் ஒன்றாய் அனுப்புவோம். வெள்ளை திக்கார்டில் சுத்தமாய் சித்திர வர்ண அழகாய் 9 X 6. அங், அளவுள்ளது, 1, கார்டு விலை, 0—4—0, செலவு 0—3—0. 5, க்கு 1 கமிஷன். முன்பணமும் தபால் லேபில்களும் அனுப்பலாம். விலாசம்

கா. மதுரம் சந்தோஷம் (உபா)

கட்டளை, பாலாமடை போஸ்டு

திருநெல்வேலி ஜில்லா.

பார்ப்பனீயம் ஒழிய குடி அரசைப்படியுங்கள்.



ரப்பர் முத்திரைகள்.

தங்களுடைய பேர் விலாசம் உள்பட தினசரி தேதி பதிக்கும் ஸ்டாம்பு ரூ 2-8-0. தனி ஸ்டாம்பு குஷன் உள்பட ரூ 2-0-0. 6 சுவாமிகளின் ஸ்டாம்புகள் ரூ 2-8-0 வெள்ளி அரக்கு ஸீல் ரூ 2-8-0. பித்தளை அரக்கு ஸீல் ரூ 1-8-0

மேல்கண்ட ஸ்டாம்புகளுக்கு ஆர்டர் கொடுப்பவர்களுக்கு 10x12 பால சுப்பிரமணியர் படம் இனாமாக அனுப்பப்படும்

M. K. SAWMY & CO

Engravers & Rubber Stamp Makers,

Late of Spencer & Co Ltd

Sawmy Naicken Street, Mount Road, P. O. MADRAS

முந்துங்கள்! முந்துங்கள்!!

'இந்திய-மாதா'

மிஸ். காதரைன் மேயோ என்னும் அமெரிக்க மாது தன் இந்திய—சுற்றுப்பிரயாணத்தில் கண்டவைகளையும், கேட்டவைகளையும் கொண்டு பெரும் பிரட்டாக நம்மையும் நம் சகோதரிகளையும் தூஷித்து எழுதியிருக்கும் புரட்டுப் புராண புஸ்தகத்தின் சுத்த மொழி பெயர்ப்பு.

இதை ஒவ்வொரு இந்தியரும் வாசித்து, அயல் நாட்டார் நம்மை எவ்வளவு இழிவுபடுத்த தயாராயிருக்கிறார்களென்பதைத் தெரிந்து கொள்ளவேண்டும்.

பெரிய புஸ்தகம்உயர்ந்த டைண்டு.

புஸ்தகத்தின்மேரில் பாரத மாதாவின் படம் கண்ணைக் கவரும்படியாக பல கலர்களில் அச்சிடப் பட்டிருக்கிறது.

இங்கிலீஷ் பதிப்பு ரூ. 8—0—0 ஆக விற்கப்படுகிறது. தமிழர்கள் படிக்க வேண்டும் என்ற உத்தேசத்துடன அசல் விலைக்கே விற்கிறோம். முன்பணம் ரூ. 1—8—0 அனுப்பிப் பதிவுசெய்து கொள்ளுங்கள்.

விலை ரூ. 1—8—0.

முன்பணம் அனுப்புவோருக்கு தபாற்செலவு இனாம்.

கே. எஸ். முத்தையா கம்பெனி,

Book-Depot, சென்னை.

சிருங்காரமான போட்டோ படங்கள்.

பாரிஸ் மாதர்கள், ஐரோப்பிய மாதர்கள் முதலோரின் அழகையும், அவர்களின் விநோத நடை உடை பாவனைகளையும் விளக்கும் போட்டோ கார்டுகள் படுக்கையறையைச்சிறப்பிக்க ஒவ்வொரு வீட்டிலும் முக்கியமானவை. படங்களைப் பார்க்கப்பார்க்கப் பேரின்பம். உயர்ந்த கலர் கிளேஸ் படங்கள். பல ரகங்கள் கொண்ட டஜன் கார்டுகள் விலை ரூ. 1-15-0.

ப்ரேஞ்சு வாசனைக் கார்டுகள்.

வாசனைப் புட்டி வேண்டுமென்ற அவசியமில்லை, எப்பொழுதும் உயர்ந்த வாசனையோடு கூடிய ஷை கார்டுகள் டஜன் ரூ. 1 தான்.

தி: கிருஷ்ண ஏஜன்சி,

26, வெள்ளாளத் தெரு, புரசபாக்கம், மதராஸ்

சிங்காரக் குழந்தை அல்லது சித்திரக் கள்ளன்.

இதில் சிங்காரக் குழந்தையின் சாமார்த்தியமும் சமயத்திற்கேற்ற நடிப்பும், வீரச் செய்கைகளும், தாசி வலையில் சிக்கிய தன் தகப்பனாரை மீட்பதும், தகப்பனும் பிள்ளையும் தங்கள் சாமர்த்தியத்தைப் பரீக்ஷிப்பதும், தகப்பனார் ஆபத்தில் சிக்கி இறப்பதும், இவனை பிடிக்க முயல்வதும், அரசனை ஏமாற்றிப் பகிரங்கமாய் தன் தகப்பனுடைய சமக் கடன்களை முடிப்பதும், கடைசியில் அரசன் மகளையே மணம்புரிந்து அரசு புரிவதும் படிக்கப்படிக்க ஆச்சரியத்தை உண்டாக்கும். நாலணவுக்கு எத்தேசத்து ஸ்டாம்பானாலும் அனுப்பி பெறலாம்.

ஞானதிருஷ்டி அல்லது திரிகால தீபம் அணா 12. எக்கேள்விக்கும் எளிதில் பதிலளிக்கும் ஆச்சரியமான ஆருட நூல். கலியின் கோலம் ஓர் பெண்மணியால் எழுதிய (துப்பறியும் நாவல்) அணா 12.

ஞானகிராம் அண்டு கம்பெனி, வெங்கட்டாசலய்யர் வீதி, மதராஸ்

ஸ்ரீமதி நாகம்மாளவர்களால், ஈரோடு "உண்மை விளக்கம்" பதிப்பகத்தில் பதிப்பிக்கப்பெற்று வெளியிடப்பட்டது.